வெளியீடு 12-9-2001 Issued 12-9-2001

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, மே 31, 2001 – தொகுதி 3 – எண் 1

Thursday the 31st May, 2001 – Volume 3 – No. 1

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai - 600 009**

90] [Price Rs. 3.00

D.
N211, 31 P01.
P01.3.1.
222389

294 / 2002

**31-05-2001**

## உள்ளடக்கம்


பக்கங்கள்

ஆளுநரும் அமைச்சரவையும் iii - vii

Governor and Council of Ministers ix - xii

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் xiii - xvi

பேரவை உறுப்பினர்கள் (அகரவரிசைப்படி) xvii - xxvii

1. **தகவல் கோரல்—**

(அ) நீதிமன்றக் கட்டடங்கள் கட்டியதில் ஊழல் நடந்ததாக செய்தி 1 - 2

(ஆ) பேரவை நிகழ்ச்சிகளைத் தனியார் தொலைக் காட்சியில் ஒளிபரப்ப அனுமதித்தது 6 - 7

2. **ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி 2 - 5, 7 - 119

திரு. ஆஸ்டின் 3 - 20

திரு. லா. சந்தானம் 20 - 30

திரு. ம. அப்துல் லத்தீப் 30 - 43

திரு. ஜே. ஹேமச்சந்திரன் 44 - 55

திரு. கே.என். இலட்சுமணன் 55 - 61

திரு. வை. சிவபுண்ணியம் 61 - 67

பக்கங்கள்

2. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

* திருமதி டி. யசோதா 67-82

திரு. ஜி.கே. மணி 82-100

* திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் 101-119

3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 120

222389.

D

V211,31 P01

P01, 3.1



## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:
   பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை, இலஞ்ச ஒழிப்பு மற்றும் சிறுபான்மையினர் நலன்.

2. நிதி மற்றும் சட்ட அமைச்சர் .. மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:
   நிதி, திட்டமிடல், தேர்தல், சட்டமன்றம், சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், சட்டமியற்றல், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

3. கல்வி அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:
   கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல்பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

4. மின் துறை அமைச்சர் - மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:
   மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

5. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே. அய்யாறு வாண்டையார்:

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

6. தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வி. ஜெயராமன்:

தொழிற்சாலைகள், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.

7. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. செ. செம்மலை:

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

8. உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

9. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

10. வருவாய்த் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத் தாள் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம், கடவுச் சீட்டு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு.



11. பொதுப் பணித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:

பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு பாசனம் உள்பட பாசனம்.

12. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்புத் திட்டங்கள், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃப்பு.

13. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:

குடிசைத் தொழில்கள் உள்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர்-கிராமத் தொழில் வாரியம்.

14. செய்தி, விளம்பரம் வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு, வனம், சுற்றுச் சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

15. கூட்டுறவுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ப. தனபால்:

கூட்டுறவு.

16. உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:

உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.

17. பிற்படுத்தப்பட்டோர், பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி இரா. சரோஜா:

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

18. சமூக நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு, அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

19. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வீ. சுப்பிரமணியன்:

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

20. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

21. மீன் வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:

மீன் வளம் மற்றும் கால்நடை பராமரிப்பு.

22. வணிக வரித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:

வணிக வரிகள்.



23. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

24. வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகராமைப்பு திட்டமிடல், குடிசை மாற்று வாரியம், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

25. சுற்றுலாத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அ. வெங்கடாசலம்:

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

- - -

# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. Chief Minister | .. | **The Hon. Selvi J. Jayalalithaa:**<br>Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police, Prevention of Corruption, Minorities Welfare. |
| 2. Minister for Finance and Law | .. | **The Hon. Thiru C. Ponnaiyyan:**<br>Finance, Planning, Election and Legislature, Law, Courts, Prisons, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| 3. Minister for Education | .. | **The Hon. Dr. M. Thambidurai:**<br>Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians overseas, Refugees and Evacuees. |
| 4. Minister for Electricity | .. | **The Hon. Thiru D. Jayakumar:**<br>Electricity, Non-conventional Energy Development. |
| 5. Minister for Hindu Religious and Charitable Endowments | .. | **The Hon. Thiru Ayyaru Vandayar:**<br>Hindu Religious and Charitable Endowments. |

**6. Minister for Industries..** **The Hon. Thiru V. Jayaraman:**

Industries, Iron and Steel Control, Mines and Minerals and Electronics.

**7. Minister for Health ..** **The Hon. Thiru S. Semmalai:**

Health, Medical Education and Family Welfare.

**8. Minister for Local .. Administration** **The Hon. Thiru C. Durairaj:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply.

**9. Minister for Agriculture ..** **The Hon. Thiru P.C. Ramasamy:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development.

**10. Minister for Revenue ..** **The Hon. Thiru O. Panneerselvam:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodhan and Gramdhan, Passport, Prohibition and Excise, Molasses.

**11. Minister for Public .. Works** **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

Public Works, Highways, Irrigation including Minor Irrigation.



**. Minister for Labour ..** **The Hon. Thiru A. Anwer Rhazza:**

Labour, Employment and Training, Urban and Rural Employment Programmes, Census and Wakfs.

**. Minister for Rural .. Industries** **The Hon. Thiru K. Pandurangan:**

Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board.

**4. Minister for Information .. and Publicity and Forests and Environment** **The Hon. Thiru S.S. Thirunavukkarasu:**

Information and Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control, Forests, Environment and Pollution Control.

**5. Minister for .. Co-operation** **The Hon. Thiru P. Dhanabal:**

Co-operation.

**6. Minister for Food and .. Civil Supplies and Consumer Protection** **The Hon. Thiru R. Viswanathan:**

Food, Civil Supplies, Consumer Protection, Price Control and Statistics.

**7. Minister for Backward .. Classes and Milk and Dairy Development** **The Hon. Tmt. R. Saroja:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities and Milk and Dairy Development.

**18. Minister for Social .. Welfare** **The Hon. Tmt. B. Valarmathi:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

| | | |
|---|---|---|
| . Minister for Adi-Dravidar Welfare | .. | **The Hon. Thiru V. Subramanian:** Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen. |
| . Minister for Transport | .. | **The Hon. Thiru Nainar Nagendran:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports. |
| . Minister for Fisheries | .. | **The Hon. Thiru K.P. Rajendra Prasad:** Fisheries and Animal Husbandry. |
| . Minister for Commercial Taxes | .. | **The Hon. Thiru C.V. Shanmugam:** Commercial Taxes. |
| . Minister for Handlooms and Textiles | .. | **The Hon. Thiru S.P. Shanmuganathan:** Handlooms and Textiles. |
| . Minister for Housing and Urban Development | .. | **The Hon. Thiru A.K. Selvaraj:** Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and Chennai Metropolitan Development Authority. |
| 5. Minister for Tourism | .. | **The Hon. Thiru A. Venkatachalam:** Tourism and Tourism Development Corporation. |

---



# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

## மாற்றுத் தலைவர்கள்

திரு. கா.பூ. முனுசாமி
திரு. பி.ஆர். சுந்தரம்
திரு. அ. பாப்பா சுந்தரம்
திரு. சோ. பாலகிருஷ்ணன்
திருமதி டி. யசோதா
திரு. ஐ. கணேசன்

## முதன்மைச் செயலாளர்

திரு. செ.சு. ஜானகிராமன்

## செயலாளர்

திரு. வெ. இராசாராமன்

| | |
|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. குழு அலுவலர் |
| திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| திரு. சு. ராஜகுரு | .. குழு அலுவலர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |



| | |
|---|---|
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ. பி.ஜி.எல் | .. தலைமை நிருபர் |
| திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |

| | |
|---|---|
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா | .. தலைமை நிருபர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சை. உ. சலீம் உன்னிசா, பி.ஏ., | .. சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ., | .. சார்புச் செயலாளர் |
| திரு. கி. கிருஷ்ணன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |

- - -



## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | - திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | - ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | - தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | - தொட்டியம் |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. | - வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. | - ராதாபுரம் |
| 7. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | - திருவையாறு |
| 8. | அரசன், திரு. ப. | - அறந்தாங்கி |
| 9. | அருணாசலம், திரு. அ. | - வரகூர் (செ.வ.) |
| 10. | அருள், திரு. பி.எஸ். | - புவனகிரி |
| 11 | அழகம்மாள், திருமதி வி. | - தலைவாசல் (செ.வ.) |
| 12. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | - திருச்செந்தூர் |
| 13. | அன்பழகன், திரு. ஆ.கு.சி. | - பெரணமல்லூர் |
| 14. | அன்பழகன், திரு. கு. | - நிலக்கோட்டை (செ.வ.) |
| 15. | அன்பழகன், திரு. கே.பி. | - பாலக்கோடு |
| 16. | அன்பழகன், திரு. ஜெ. | - தியாகராய நகர் |
| 17. | அன்பழகன், பேராசிரியர் க. | - துறைமுகம் |
| 18. | அன்பில் பெரியசாமி, திரு. | - திருச்சிராப்பள்ளி—2 |
| 19. | அன்வர் ராஜா, திரு. அ. | - இராமநாதபுரம் |
| 20. | ஆண்டிவேல், திரு. ப. | - வேடசந்தூர் |

21. ஆறுமுகம், திரு. கே. - செங்கல்பட்டு
22. ஆறுமுகம், திரு. த. - திருவொற்றியூர்
23. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
24. ஆஸ்டின், திரு. - நாகர்கோவில்
25. இரவிராஜ், திரு. கோ. - திருத்தணி
26. இராசேந்திரன், திரு. சி. - திருவோணம்
27. இராசேந்திரன், திரு. சோ. - கோவில்பட்டி
28. இராமசாமி, திரு. கே.ஆர். - திருவாடானை
29. இராமசாமி, திரு பி.சி. - மொடக்குறிச்சி
30. இராமச்சந்திரன், திரு. எஸ். - கலசப்பாக்கம்
31. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். - கம்பம்
32. இராமச்சந்திரன், திரு. கே.கே. எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
33. இராமு, திரு. ந. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
34. இராம் பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
35. இராஜசேகர், திரு. மா. - ராஜபாளையம் (செ.வ.)
36. இராஜரெத்தினம், திரு. ப. - பெரம்பலூர் (செ.வ.)
37. இராஜா, திரு. டி.கே. - திருப்பத்தூர்
38. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. - பத்மநாபபுரம்
39. இராஜேந்திரன், திரு. பி.ஜி. - ஆலங்குளம்
40. இலட்சுமணன், திரு. கே.என். - மயிலாப்பூர்
41. இளவழகன், திரு. ப. - அரியலூர்
42. இளையகண்ணு, திரு. கா.தி. - ஏற்காடு (ஆ.வா.)
43. இன்பத் தமிழன், திரு. இரா.தா. - ஸ்ரீவில்லிபுத்தூர்



44. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ.)
45. உசேன், திரு. எஸ்.ஏ.எம். - திருவல்லிக்கேணி
46. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்
47. உமாதேவன், திரு. கே.கே. - திருப்பத்தூர்
48. உலகரட்சகன், திரு. பி.எஸ். - செய்யாறு
49. ஏழுமலை, திரு. வெ. - செஞ்சி
50. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)
51. கணேசன், திரு. ஐ. - எடப்பாடி
52. கணேசன், திரு. து. - தேனி
53. கண்ணன், திரு. ஏ.எஸ். - பொன்னேரி (செ.வ.)
54. கந்தசாமி, திரு. க.ரா. - சத்தியமங்கலம்
55. கந்தசாமி, திரு. கா. - குன்னூர் (செ.வ.)
56. கருணாகரன், திரு. கே.சி. - சிங்காநல்லூர்
57. கருணாநிதி, திரு. மு. - சேப்பாக்கம்
58. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
59. கருப்பணன், திரு. கே.சி. - பவானி
60. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. - குளத்தூர் (செ.வ.)
61. கலாவதி, திருமதி கு. - சேந்தமங்கலம் (ஆ.வா.)
62. கனகதாரா, செல்வி. சி. - பேரணாம்பட்டு (செ.வ.)
63. கனிதா சம்பத், திருமதி எஸ். - திருப்போரூர் (செ.வ.)
64. காசாம்பு, திருமதி பூ. - சங்கராபுரம்
65. காமராஜ், திரு. மே.ப. - தாரமங்கலம்
66. கார்த்தி, திரு. மு. - சேலம்—2

67. காளிமுத்து, டாக்டர் கா. - திருமங்கலம்
68. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. - அரூர் (செ.வ.)
69. கிருஷ்ணன், திரு. ஆர். - அந்தியூர் (செ.வ.)
70. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்
71. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ.. - ஆண்டிமடம்
72. கோதண்டராமன், திரு. ஜி. - முகையூர்
73. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
74. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். - விருத்தாசலம்
75. கோவிந்தராஜ், திரு. வெ. - கிருஷ்ணகிரி
76. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
77. சக்திவேல் முருகன், திரு. எம். - அம்பாசமுத்திரம்
78. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்
79. சசிகலா, திருமதி ஆர். - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
80. சண்முகநாதன், திரு. எஸ்.பி. - ஸ்ரீவைகுண்டம்
81. சண்முகம், திரு. சி. - பூந்தமல்லி
82. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
83. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
84. சந்தானம், திரு. லா. - உசிலம்பட்டி
85. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். - இராணிப்பேட்டை
86. சந்திரமோகன், திரு. நா. - சீர்காழி (செ.வ.)
87. சந்திரன், திரு. வீ. - சிவகங்கை
88. சம்பத், திரு. எம்.சி. - நெல்லிக்குப்பம்
89. சரவணன், திரு. துரை. கி. - சிதம்பரம்
90. சரோஜா, திருமதி இரா. - உப்பிலியாபுரம் (ஆ.வா.)



91. சாமி, திரு. ஆர். - மேலூர்
92. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
93. சிதம்பரம், திரு. ப. - பவானிசாகர்
94. சிவகாமி, திருமதி வி. - தாராபுரம் (செ.வ.)
95. சிவசாமி, திரு. கே.கே. - அருப்புக்கோட்டை
96. சிவசாமி, திரு. செ. - திருப்பூர்
97. சிவசுப்பிரமணியன், திரு. டி.என் - கரூர்
98. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
99. சிவபெருமாள், திரு. அ. - ஓட்டப்பிடாரம் (செ.வ.)
100. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
101. சின்னசாமி, திரு. மா. - பழனி (செ.வ.)
102. சீனிவேல், திரு. எஸ்.எம். - திருப்பரங்குன்றம்
103. சுதர்சனம், திரு. கே. - கும்மிடிப்பூண்டி
104. சுதர்சனம், திரு. டி. - திருவள்ளூர்
105. சுந்தரம், திரு. பி.ஆர். - ராசிபுரம்
106. சுந்தராம்பாள், திருமதி செ. - மேட்டூர்
107. சுப்பிரமணியன், திரு. வீ. - கண்டமங்கலம் (செ.வ.)
108. சுப்பையா பாண்டியன், திரு. எம். - கடையநல்லூர்
109. சூரியகலா, திருமதி சி.எம். - குடியாத்தம்
110. செம்மலை, திரு. செ. - ஓமலூர்
111. செல்லையா, திரு. வி.ஏ. - மருங்காபுரி
112. செல்வம், திரு. எஸ்.கே. - வீரபாண்டி
113. செல்வராஜ், திரு. ஆ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)
114. செல்வராஜ், திரு. ஏ.கே. - மேட்டுப்பாளையம்

| | | |
|---|---|---|
| 115. | செல்வி முருகேசன், திருமதி | - காங்கேயம் |
| 116. | சேகரன், திரு. கே.என். | - திருவெறும்பூர் |
| 117. | சேகர்பாபு, திரு. பி.கே. | - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 118. | சோமசுந்தரம், திரு. வி. | - உத்திரமேரூர் |
| 119. | ஞானசேகரன், திரு. சி. | - வேலூர் |
| 120. | ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. | - திருநாவலூர் |
| 121. | தமிழரசன், திரு. செ.கு. | - நன்னிலம் (செ.வ.) |
| 122. | தமிழ்ச்செல்வன், திரு. தங்க. | - ஆண்டிப்பட்டி |
| 123. | தமிழ்மொழி திருமதி ஆர். | - மேல்மலையனூர் |
| 124. | தம்பிதுரை, டாக்டர் மு. | - பர்கூர் |
| 125. | தவமணி, திரு. க. | - திருவிடைமருதூர் |
| 126. | தளவாய் சுந்தரம், திரு. ந. | - கன்னியாகுமரி |
| 127. | தனபால், திரு. ப. | - சங்கரி (செ.வ.) |
| 128. | தாமோதரன், திரு. எஸ். | - விருதுநகர் |
| 129. | தாமோதரன், திரு. செ. | - கிணத்துக்கடவு |
| 130. | தாமோதிரன், திரு. ப.வெ. | - பொங்கலூர் |
| 131. | திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. | - பேராவூரணி |
| 132. | திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். | - காஞ்சிபுரம் |
| 133. | திருமாவளவன், திரு. இரா. | - மங்களூர் (செ.வ.) |
| 134. | துரைமுருகன், திரு. | - காட்பாடி |
| 135. | துரைராஜ், திரு. கி. | - சேடப்பட்டி |
| 136. | தென்னரசு, திரு. கே.எஸ். | - ஈரோடு |
| 137. | நடராஜன், திரு. அ. | - குத்தாலம் |
| 138. | நடராஜன், திரு. எஸ். | - நாட்ராம்பள்ளி |



| | | |
|---|---|---|
| 139. | நடராஜன், திரு. பி.கே.டி. | - ஆத்தூர் |
| 140. | நடராஜன், திரு. வது. | - இளையான்குடி |
| 141. | நயினார் நாகேந்திரன், திரு. | - திருநெல்வேலி |
| 142. | நரசிம்மன், திரு. பி.எம். | - பள்ளிப்பட்டு |
| 143. | நளினி மனோகரன், திருமதி | - போளூர் |
| 144. | நன்மாறன், திரு. என். | - மதுரை கிழக்கு |
| 145. | நாகலெட்சுமி, செல்வி. க. | - திண்டுக்கல் |
| 146. | நீலகண்டன், திரு. ப. | - ஆற்காடு |
| 147. | நெப்போலியன், திரு. து. | - வில்லிவாக்கம் |
| 148. | பச்சைமால், திரு. தா. | - குளச்சல் |
| 149. | பதினெட்டாம்படியான், திரு. க. | - முதுகுளத்தூர் |
| 150. | பரணிகுமார், திரு. பா. | - திருச்சிராப்பள்ளி—I |
| 151. | பரிதி இளம்வழுதி, திரு. | - எழும்பூர் (செ.வ.) |
| 152. | பவானி கருணாகரன், திருமதி கே. | - அரக்கோணம் (செ.வ.) |
| 153. | பழனிசாமி, திரு. கே.எஸ். | - பெருந்துறை |
| 154. | பழனிசாமி, திரு. ஜி. | - திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 155. | பழனியப்பன், திரு. பெ. | - மொரப்பூர் |
| 156. | பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. | - குறிஞ்சிப்பாடி |
| 157. | பன்னீர்செல்வம், திரு. ஓ. | - பெரியகுளம் |
| 158. | பாண்டுரங்கன், திரு. கே. | - அணைக்கட்டு |
| 159. | பாப்பா சுந்தரம், திரு. அ. | - குளித்தலை |
| 160. | பாரமலை, திரு. க. | - மானாமதுரை (செ.வ.) |
| 161. | பாரிமோகன், திரு. கி. | - தர்மபுரி |
| 162. | பாலகிருஷ்ணன், திரு. சோ. | - கடலாடி |

163. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். - தொண்டாமுத்தூர்
164. பாலசுப்பிரமணியன், திரு. கே.கே. - ஸ்ரீரங்கம்
165. பாலன், திரு. எஸ்.எம். - லால்குடி
166. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். - சேரன்மகாதேவி
167. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
168. புகழேந்தி, திரு. இ. - கடலூர்
169. பூபதி மாரியப்பன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
170. பெருமாள், திரு. என்.கே. - விளாத்திக்குளம்
171. பெருமாள், திரு. வை. - சைதாப்பேட்டை
172. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
173. பொன்னம்பலம், திரு. ப. - சமயநல்லூர் (செ.வ.)
174. பொன்னையன், திரு. சி. - திருச்செங்கோடு
175. போளூர் வரதன், திரு. - செங்கம் (செ.வ.)
176. மகாலிங்கம், திரு. எஸ். - அவினாசி (செ.வ.)
177. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)
178. மகேஸ்வரி, திருமதி எஸ். - கோயம்புத்தூர் மேற்கு
179. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
180. மணி, திரு. டி. - விளவங்கோடு
181. மணி, திரு. ஜி.கே. - பெண்ணாகரம்
182. மணி நாடார், திரு. எஸ்.எஸ். - சாத்தான்குளம்
183. மலையப்பசாமி, திரு. அ.இரா. - கபிலர்மலை
184. மல்லிகா, திருமதி சி. - முசிறி
185. மாணிக்கராஜ், திரு. எஸ். - நாங்குநேரி



186. மில்லர், திரு. அ. - கூடலூர்
187. முரளிதரன், திரு. கே.வி. - தளி
188. முருகவேல் ராஜன், திரு. க. - வந்தவாசி (செ.வ.)
189. முருகேசன், திரு. ஆ.கு. - ஆத்தூர்
190. முனுசாமி, திரு. கா.பூ. - காவேரிப்பட்டினம்
191. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை
192. மோகன், திரு. ப. - சின்னசேலம்
193. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
194. ரங்கநாதன், திரு. ப. - புரசைவாக்கம்
195. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை
196. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். - கோபிச்செட்டிப்பாளையம்
197. ராதாகிருஷ்ணன், திரு. எம். - திருமயம்
198. ராமச்சந்திரன், திரு. கே. - ஆரணி
199. ராமராஜ், திரு. ச. - போடிநாயக்கனூர்
200. ராம்குமார், திரு. எம். - பாபநாசம்
201. ராஜகோபால், திரு. ஆ. - சிவகாசி
202. ராஜம்மாள், திருமதி எஸ். - தூத்துக்குடி
203. ராஜா, திரு. எச். - காரைக்குடி
204. ராஜாங்கம், திரு. வி.ஆர். - சோழவந்தான்
205. ராஜு, திரு. எச்.எம். - உதகமண்டலம்
206. ரெங்கநாதன், திரு. என். - பூம்புகார்
207. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. - பேரூர்
208. லட்சுமணன், திரு. வி.கே. - கோயம்புத்தூர் கிழக்கு

| | | |
|---|---|---|
| 209. வியாவுதீன் சேட், திரு. இ.ஏ. | - | அரவக்குறிச்சி |
| 210. வளர்மதி, திருமதி பா. | - | ஆலந்தூர் |
| 211. வளர்மதி ஜெபராஜ், திருமதி | - | மதுரை மேற்கு |
| 212. வள்ளல் பெருமான், டாக்டர் பி. | - | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 213. வாசுதேவன், திரு. பெ. | - | மதுராந்தகம் |
| 214. விசுவநாதன், திரு. இரா. | - | நத்தம் |
| 215. வில்வநாதன், திரு. இரா. | - | சோளிங்கர் |
| 216. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. | - | பூங்கா நகர் |
| 217. விஜயபாஸ்கர், டாக்டர் சி. | - | புதுக்கோட்டை |
| 218. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | - | பனமரத்துப்பட்டி |
| 219. வீரபாண்டியன், திரு. ஜெக. | - | மயிலாடுதுறை |
| 220. வெங்கடாசலம், திரு. அ. | - | ஆலங்குடி |
| 221. வெங்கடாஜலம், திரு. செ. | - | சேலம்—I |
| 222. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | - | வேதாரண்யம் |
| 223. வேலுசாமி, திரு. செ.மா. | - | பல்லடம் |
| 224. வேலு, திரு. எ.வ. | - | தண்டராம்பட்டு |
| 225. வேல் முருகன், திரு. தி. | - | பண்ருட்டி |
| 226. வைதியலிங்கம், திரு. மீ.அ. | - | தாம்பரம் |
| 227. வைத்திலிங்கம், திரு. ஆர். | - | ஒரத்தநாடு |
| 228. ஜீவானந்தம், திரு. இரா. | - | நாகப்பட்டினம் |
| 229. ஜெயக்குமார், திரு. கு. | - | நாமக்கல் (செ.வ.) |
| 230. ஜெயக்குமார், திரு. டி. | - | இராயபுரம் |
| 231. ஜெயராமன், திரு. வி. | - | பொள்ளாச்சி |



| | | |
|---|---|---|
| 232. ஸ்டாலின், திரு. மு.க. | - | ஆயிரம் விளக்கு |
| 233. ஹக்கீம், திரு. எம்.ஏ. | - | மதுரை மத்தி |
| 234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | - | திருவட்டாறு |
| 235. (வெற்றிடம்) | - | நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | | |
|---|---|---|
| (வெற்றிடம்) | - | தலைமை வழக்கறிஞர் |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## வைகாசி 17, விசு – திருவள்ளுவர் ஆண்டு 2032

## 2001 மே 31, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை

வீயாது அடிஉறைந் தற்று."

ஒருவருடைய நிழல் அவரை விடாமல் அவரைத் தொடர்ந்து வருதல் போன்று அவரது தீய செயல்களினால் வரும் கேடும் அவரைத் தொடர்ந்து வந்து துன்பம் தரும்.

### 1. தகவல் கோரல்

### (அ) நீதிமன்றக் கட்டடங்கள் கட்டியதில் ஊழல் நடந்ததாக செய்தி

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இந்த அவையிலே நான் ஒரு முக்கியமான பிரச்சினையைக் கிளப்பினேன். நீதிமன்றங்கள் கட்டியதிலே தமிழகத்தில் 44 கோடி ரூபாய் அளவிற்கு ஊழல் நடைபெற்றதாகப் பல செய்திப் பத்திரிகைகளிலே செய்திகள் வந்திருக்கின்றன. அதிலே 1993–94 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அன்றைய முதல்வராக இருந்தபோது தான் நீதிமன்றங்களுக்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் தீர்மானத்தைக் கொடுத் திருக்கிறீர்கள். அது ஆய்விலே இருக்கிறது. துறைக்கு பதில் வந்தவுடன் அது எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினமே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் . . .

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேற்றையதினம் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், நீங்கள் தந்திருக்கிற விவரம் ஆய்விலே இருக்கிறது. துறைக்கு பதில் வந்தவுடன் விளக்கமாகப் பதில் தரப்படும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கே இந்த அவையிலே தீர்மானம் கொடுத்திருந்தேன். இன்றைக்காவது அமைச்சர் தயாராக இருந்து, எப்போது அமைச்சர் பதில் சொல்வார்கள் என்று பதில் வருமானால் எனக்குத் திருப்தியாக இருக்கும். நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்வது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முழுமையான விளக்கம் வர வேண்டும். நீங்கள் மட்டும் பேசினால் போதாது. ஒரு கை ஓசை சரியாக வராது. அவர்களிடத்திலிருந்து விளக்கம் வந்ததற்குப் பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்த தகவல்கள் உடனே சேகரிக்கப்பட வேண்டும் என்று துறைக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. உயர்நீதி மன்றத்தோடும் கலந்து என்ன தகவல் என்பதை அறிய நாங்கள் அறிவுறுத்தியிருக்கிறோம். தகவல் வந்தவுடன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல் அவைக்குத் தகவல் தரப்படும்.

## 2. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் தொடர்ச்சி, திரு. ஆஸ்டின்.



**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீதான விவாதத்தில் எம்ஜி.ஆர்.அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன். தேர்தல் முடிவுற்று புதிய ஆட்சி பொறுப்பேற்றிருக்கிறது. ஆட்சிப் பொறுப்பிலே அமர்ந்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மகிழ்ச்சியோடு அமர்ந்திருக்கிற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் புதியதாகப் பொறுப்பேற்றிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய நல் வாழ்த்துக்களை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் உரை என்பது ஒரு அரசாங்கத்தினுடைய கொள்கைகள், அதனுடைய நோக்கங்கள், அந்த அரசாங்கத்தினுடைய திட்டங்களி னுடைய முன்னோட்டமாக இருந்தாலும்கூட, இந்த ஆளுநர் உரையிலே ஒருசில திட்டங்களைத் தவிர, பொதுமக்கள் எதிர்பார்த்த அளவிலே, வரவேற்கக்கூடிய திட்டங்கள் இடம் பெறவில்லை.

ஆளுநர் உரையின் இரண்டாவது பக்கத்திலே, நடைபெற்று முடிந்த தேர்தல் வரலாறு படைத்த தேர்தல் என்றும், அந்தத் தேர்தல் தீர்ப்பானது மாநில வரலாற்றில் இதற்கு ஈடு இணையே இல்லையென்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1977-ல் புரட்சித் தலைவர் எம்ஜி.ஆர். அவர்கள் நான்கு முனைப் போட்டியில், தனித்துப் போட்டியிட்டு ஆட்சியைப் பிடித்தார்கள். அந்தத் தேர்தல் வரலாறு படைத்த தேர்தல் ஆகும். அதைப்போன்று 1980-லே திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய தேசிய காங்கிரஸ் என்ற பலமான கூட்டணியை எதிர்த்து, புரட்சித் தலைவர் எம்ஜி.ஆர். அவர்கள் ஆட்சியைப் பிடித்தார்கள். அந்தத் தேர்தல் வரலாறு படைத்த தேர்தல் ஆகும். அதைப்போன்று 1984-லே அமெரிக்காவிலே மருத்துவமனையிலே இருந்து கொண்டே தமிழகத்தினுடைய ஆட்சியை புரட்சித் தலைவர் எம்ஜி.ஆர். அவர்கள் பிடித்தார்கள். அந்தத் தேர்தல் வரலாறு படைத்த தேர்தல் ஆகும். அதைப்போன்று 1989-லே 13 ஆண்டுகாலம் ஆட்சியை இழந்த பிறகு அந்தத் தேர்தலிலே நான்கு முனைப் போட்டியிலே திராவிட முன்னேற்றக் கழகம், டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியைப் பிடித்தார்கள். அந்தத் தேர்தல் வரலாறு படைத்த தேர்தல் ஆகும். அதைப்போல, கடந்த தேர்தலிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தனித்துப் போட்டியிட்டு ஆட்சியைப் பிடித்திருக்கும் என்று சொன்னால் அந்தத் தேர்தலை வரலாறு படைத்த தேர்தல் என்றும், அந்தத் தேர்தல் தீர்ப்பினை மாநிலத்திலே ஈடு இணையற்றது என்று சொல்வதையும் நாங்கள் ஏற்றுக் கொண்டிருப்போம். ஆனால், நடந்து முடிந்த தேர்தல் என்பது ஒரு....

[2001 மே 31

முற்பகல் 10–05

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மிக முக்கிய வரலாற்றுச் சிறப்பு மிக்க தேர்தல் ஆகும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் முதல்வர், முதல் மந்திரியாக, முதலமைச்சராக .....(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களே, திரு. ஆஸ்டின் அவர்கள் ஏற்கெனவே புரட்சித் தலைவியால் மாநிலங்களவைக்கு அனுப்பப்பட்டு அங்கே பயிற்சி பெற்று வந்திருப்பவர். அவர் இப்போது பேசுகிறார். அவர் இப்போது பேசுவதற்கு நாளைக்கு முதல்வர் அவர்கள் விளக்கம் சொல்வார்கள். நீங்கள் அமைதியாக இருங்கள். அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்து முடிந்த தேர்தல் என்பது, அந்தத் தேர்தலுடைய தீர்ப்பு என்பது சாதாரண கணக்கு ரீதியான தீர்ப்பே தவிர, வேறு ஒன்றும் இல்லை. தமிழகத்தைப் பொறுத்தவரையிலே .....

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசி முடித்துவிடுகிறேன். அநேகமாக எனக்கு இது கன்னிப் பேச்சு என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களே, திரு. ஆஸ்டின் பேசட்டும். ஏனென்றால், பயிற்சியை அவர் புரட்சித் தலைவியிடமிருந்துதான் பெற்றுவிட்டுச் சென்றிருக்கிறார். அவர் பேசட்டும். முதலமைச்சர் அவர்கள் அதற்குப் பிறகு விளக்கம் சொல்வார்கள்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையிலே ஒவ்வோர் அரசியல் இயக்கத்திற்கும் ஒவ்வொரு ஓட்டு வங்கி என்பது தனியாக இருக்கிறது. தமிழ் மாநிலக் காங்கிரஸைப் பொறுத்தவரையிலே எத்தனை பேர் அந்த இயக்கத்திலேயிருந்து வெளியேறி இருந்தாலும்கூட அதற்கென்று தமிழகத்திலே ஒரு ஓட்டு வங்கி உள்ளது. அதை யாராலும் மறுக்க



2001 மே 31] [திரு. ஆஸ்டின்]

முடியாது. அதைப்போல, தேசியக் கட்சிகளான, இந்தியக் தேசிய காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, அதைப் போன்று பாட்டாளி மக்கள் கட்சி, இந்திய தேசிய லீக் போன்ற அரசியல் இயக்கங்களுக்கெல்லாம் தமிழகத்திலே அவற்றிற்கென்று தனியாக ஓட்டு வங்கி உள்ளது. இப்படி ஓட்டு வங்கிகள் உள்ள அரசியல் கட்சிகள் எல்லாம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தி னுடைய கூட்டணியிலே இணைந்து அந்தக் கூட்டணி ஏதோ மதச்சார்பற்ற கூட்டணி என்பது போல ஒரு மாயத் தோற்றத்தை மக்களிடையே ஏற்படுத்திய காரணத்தினாலே, ஒரு கணக்கு ரீதியான வெற்றி இந்தத் தேர்தலிலே கிடைத்திருக்கிறது என்பதுதான் உண்மை....

***மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓட்டு வங்கியைப் பற்றி இந்த மாண்புமிகு உறுப்பினர் பேசுவது பொருத்தமாக இருக்காது என்று கருதுகிறேன். காரணம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு என்று ஒரு தனி ஓட்டு வங்கி இருப்பதை யாராலும் மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) அதைத் திரும்பத் திரும்ப ஒவ்வொரு பொதுத் தேர்தலிலும், ஒவ்வொரு சட்டமன்றத் தேர்தலிலும் சந்தேகமற நிரூபித்து இருக்கிறோம். ஆனால், இவர் எந்தக் கட்சியைச் சார்ந்திருக்கிறாரோ அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினால் வளர்க்கப்பட்டவர்கள்; அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினால் வளர்ந்தவர்கள்; உலகத்திற்கு அடையாளம் காண்பிக்கப் பட்டவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அவர்கள், வளர்த்த கழகத்திற்கே துரோகம் புரிந்து, திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணி வைத்துக்கொண்டு, தி.மு.க. ஓட்டு வங்கியை வைத்துக் கொண்டு தான் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த அவைக்கு வந்திருக்கிறார்கள். அதனால் திராவிட முன்னேற்றக் கழக ஓட்டு வங்கியால் பலனடைந்து, இலாபம் அடைந்து இந்த அவைக்கு வந்தவர்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஓட்டு வங்கியைப் பற்றிப் பேசும் அருகதை அற்றவர்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்..... (குறுக்கீடு)

## 1. தகவல் கோரல் — தொடர்ச்சி

### (ஆ) பேரவை நிகழ்ச்சிகளைத் தனியார் தொலைக்காட்சியில் ஒளிபரப்ப அனுமதித்தது

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. I am on a point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதல்வர் அவர்கள் விளக்கம் சொல்லி இருக்கின்றார்கள். திரு. ஆஸ்டின் பேசிக்கொண்டு இருக்கிறார். உங்கள் ஓட்டு வங்கியால் அவர் பலன் பெற்றார் என்று சொல்கிறார். உங்கள் ஓட்டு வங்கியால் அவர் பலன் பெறவில்லை என்று சொல்கிறீர்களா?

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஆளுநர் உரையாற்றுகின்றபோதோ அல்லது நிதிநிலை அறிக்கை அளிக்கும்போதோதான் இந்த மாதிரி தொலைக்காட்சியில் படம் பிடித்துக் காண்பிக்க ஏற்பாடு செய்வார்கள். ஆனால், இப்போது நிகழ்ச்சிகளைக் காண்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதுகுறித்து விளக்கம் தங்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு இங்கே விளக்கம் தர நான் விழைகிறேன். வேறு மாநிலங்களில் தினசரி, அன்றாட சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள் எல்லாம் தொலைக்காட்சிகளில் காண்பிக்கப் படுகின்றன.

*முற்பகல் 10–10*

இன்னும் சொல்லப்போனால், மாண்புமிகு உறுப்பினர் எந்தக் கட்சியைச் சார்ந்திருக்கிறாரோ அந்தக் கட்சித் தலைவரின் குடும்ப டி.வியான சன் டி.வி—யின் இன்னொரு பிரிவான Teja T.V. ஆந்திர மாநிலத்தில் நடைபெறும் சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சிகளைத் தினமும் காண்பித்துக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதை மாண்புமிகு உறுப்பினர் தெரிந்துகொள்ளவில்லை என்று நம்புகிறேன். ஆகவே, தனியார் தொலைக்காட்சிகள் சட்டமன்றப் பேரவைக் கூட்ட நடவடிக்கைகளைக் காண்பிப்பதற்கு அனுமதி வழங்குவது என்பதற்கு ஏற்கெனவே முன்மாதிரி உள்ளது. அதில் எந்தத் தவறும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. என்னால் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. சன் டி.வி.–க்கும் சேர்த்துத்தான் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) திரு. பரிதி இளம்வழுதி, உட்காருங்கள். (குறுக்கீடு) சன் டி.வி.–க்கும் சேர்த்தே அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துவிட்டேன்.

***மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சன் டி.வி. குழுவினர் இப்போதும் இந்த அவைக்குள்ளேயே இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பரிதி இளம்வழுதி:** போராடித்தான் பெற்றிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போராட்டமே கிடையாது. என்னிடத்தில் பூப்பறிப்பதைப் போல, வந்து பறித்துவிட்டுப் போய் இருக்கிறார்கள். ஒரு பிரச்சினையும் இல்லை.

## 2. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின், பேசுங்கள்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ...

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கட்சியினுடைய தலைவர் ஆஸ்டின் பேசிக் கொண்டிருக்கிறார். நீங்களும் எழுகிறீர்கள், என்ன இரட்டை நாயனமா? அவர் பேசுகிறார். பேசி முடிக்கட்டும்.

**திரு.ஆஸ்டின்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் ஒரு ஓட்டு வங்கி உள்ளது என்பதை நாங்கள் யாரும் மறுக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு தோழமைக் கட்சிகளாகச் சேர்ந்திருக்கின்ற மற்ற கட்சிகளுடைய ஓட்டு வங்கியும் சேர்ந்துதான் கணக்கு ரீதியாகத்தான் இந்த வெற்றி கிட்டியிருக்கிறது என்பதைக் குறிப்பிடுவதற்காகத்தான் நான் இதைக் குறிப்பிட்டேன்.

[திரு. ஆஸ்டின்] [2001 மே 31

எல்லா இயக்கங்களும் ஏதாவது ஒரு தோழமைக் கட்சியோடு சேர்ந்துதான் தேர்தல்களிலே போட்டியிட முடியும். அதைப்போல, எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையிலே அப்படி திராவிட முன்னேற்றக் கழகத்தோடு நாங்கள் கூட்டணி வைத்து போட்டியிட்டாலும்கூட இந்தக் கட்சியினுடைய தனித் தன்மையை இழக்காமல் ஒரு தனிச் சின்னத்திலேயே நாங்கள் போட்டியிட்டுத்தான் வெற்றி பெற்றோமே தவிர, வேறு கட்சிகளுடைய சின்னத்தை நாங்கள் இரவல் வாங்கிப் போட்டியிடவில்லை. அதைப் போன்று துரோகம் என்று சொல்கின்றபோது இப்போது ...

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிப்படைக் கொள்கைக்கே துரோகம் புரிந்தவர்கள் கொள்கையைப்பற்றிப் பேசுவது வேடிக்கையாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இவருடைய கட்சியின் தலைவர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் வளர்க்கப்பட்டவர். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினால்தான் இந்த உலகத்திற்கு அவர் யார் என்று தெரிய வந்தது. அப்படிப்பட்டவர் ஒரு தனிக் கட்சியைத் தொடங்கி, வளர்த்த கழகத்திற்கே துரோகம் புரிந்திருக்கிறார். அதுமட்டும் அல்லாமல், புரட்சித் தலைவர் அவர்கள் எந்தக் காரணத்திற்காக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்று வித்தாரோ அதையே மறந்துவிட்டு (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உறுப்பினர் பேசுவது வேதனையளிக்கிறது. புரட்சித் தலைவர், திரு. கருணாநிதி அவர்களை எதிர்ப்பதற்காகவே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்தார். (மேசையைத் தட்டும் ஒலி) திரு. கருணாநிதி, ஒரு தீய சக்தி என்றும், அந்தத் தீய சக்தியை எதிர்ப்பதுதான் (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நோக்கம் என்றும், அதற்காகத்தான் இந்தக் கழகமே தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது என்றும் புரட்சித் தலைவர் அவர்கள் காலமெல்லாம் கூறினார்கள். யாரை எதிர்க்க வேண்டும்; யாரை அரசியலை விட்டே அப்புறப்படுத்த வேண்டும் என்று புரட்சித் தலைவர் காலம் எல்லாம் சொல்லிக் கொண்டிருந்தாரோ அவர்களோடு இந்த மாண்புமிகு உறுப்பினரின் கட்சித் தலைவர் கூட்டணி வைத்துக் கொண்டு, அவர்களுடைய ஓட்டு வங்கியைப் பயன்படுத்திக்கொண்டு இந்த அவைக்கு வந்து புரட்சித் தலைவரைப் பற்றிப் பேசுவதற்கு அவர்களுக்கு அருகதை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2001 மே 31]

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அரசியல் கட்சி சார்பாக இன்னோர் அரசியல் கட்சியைக் குற்றம் சாட்டுகிறபோது, sweeping remarks என்று சொல்லப்படுகிற முறையில் தீய சக்தி என்று சொல்லி, கலைஞர் கருணாநிதி அவர்களைக் குறிப்பிடுவதை, சட்டமன்றத்தில், அதிலேயும் ஒரு எதிர்க்கட்சியாக இருக்கிறபோது, எம்.ஜி.ஆர். அவர்கள் எந்த நோக்கத்திற்காக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கினாலும், இந்த வார்த்தையைச் சொல்லுவதை, இந்த அவையில் இடம் பெறச் செய்யலாமா என்று தங்களை நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சொந்தக் கருத்தை நான் இங்கே தெரிவிக்கவில்லை. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தெரிவித்த கருத்தைத்தான் நான் இங்கே சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதே கருத்தை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இதே அவையில் பல முறை சொல்லியிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. பரிதி இளம்வழுதி:** இன்றைய முதலமைச்சரைப் பற்றியும் அன்றைக்கு எம்.ஜி.ஆர். சொல்லியிருக்கிறார். அதைச் சொன்னால் பதிவு செய்துகொள்வீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் தலைவர் பேசுகிறார்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் ஏற்கெனவே எந்த முறையில் யார் என்ன பேசியிருந்தாலும்கூட, தொடர்ந்து அதே முறையைப் பின்பற்றுவது என்பது, இந்த மன்றத்தில் தவறான முறையில் பேசியிருப்பார்க ளேயானால் பின்பற்றுவது முறையல்ல. அதேபோல, எம்.ஜி.ஆர். அவர்கள் யார் யாரைப் பற்றி என்னென்ன, எவ்வெப்போது சொன்னார்கள் என்பதை இந்த அவையில் பேசுவது முறையல்ல என்று நான் கருதுகிறவன். ஏனென்றால் சட்டமன்றம் தனிப்பட்டவர் களைவிட உயர்ந்தது என்பது என்னுடைய உளமார்ந்த நம்பிக்கை. எனவே, இந்தச் சட்டமன்றத்தில் அப்படிப்பட்ட கருத்து இடம் பெறுவது நியாயம் அல்ல, அவசியம் அல்ல என்பதை நான் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2001 மே 31

*முற்பகல் 10–15*

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசிக் கொண்டிருப்பது வேறு கட்சியைச் சேரந்த மாண்புமிகு உறுப்பினர் ஆஸ்டின் அவர்கள். ஆஸ்டின் அவர்களுடைய வரலாறு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரியாது என்றே நம்புகிறேன். அப்படியிருக்கும்போது, மாண்புமிகு உறுப்பினர் ஆஸ்டின் பேசுகின்றபோது, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏன் அடிக்கடி குறுக்கிடுகிறார் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. (கூச்சல்–குழப்பம்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில உண்மைகளை (கூச்சல்–குழப்பம்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாண்புமிகு உறுப்பினர் ஆஸ்டின் அவர்கள் (கூச்சல்–குழப்பம்) நான் பதில் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளும் கட்சி உறுப்பினர்கள் அமைதியாக இருக்கலாம். முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் விளக்கத்தை முதலமைச்சர் அவர்கள் சொல்வார்கள். நீங்கள் அமைதியாக அமருங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** ஆளும் கட்சி உறுப்பினர்கள் அமைதியாக உட்காருங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆஸ்டின் அவர்கள் யார் என்பதை நான் தங்கள் மூலமாக இந்த அவைக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆஸ்டின் அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினராக இருந்தவர். நான் அவரைத் தேர்ந்தெடுத்து கன்னியாகுமரி மாவட்ட கழகச் செயலாளர் ஆக்கினேன். 1991 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது எப்படியாவது ஆஸ்டின் அவர்களுக்கு நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதியில் தேர்தலுக்கு நிற்கும் வாய்ப்பைப் பெற்றுத் தர வேண்டுமென்று பெரிதும் முயன்றேன். அன்றையதினம் காங்கிரஸ் கட்சியோடு கூட்டணி வைத்துக்கொண்டிருந்ததால் அந்தச் சட்டமன்றத் தொகுதி நாகர்கோவில் தொகுதி, கூட்டணிக் கட்சியான காங்கிரஸ் கட்சிக்குப் போய்விட்டது. அப்போதே ஆஸ்டினை அழைத்து வருத்தப்பட வேண்டாம். முதல் வாய்ப்பு வரும்போது உங்களுக்கு ஒரு நல்லதைச் செய்கிறேன் என்ற வாக்குறுதியை அவருக்கு அளித்தேன். 1991 ஆம் ஆண்டில் கழகம் அமோக வெற்றி பெற்று ஆட்சியமைத்தது. விரைவிலேயே மாநிலங்களவைக்கான தேர்தல் வந்தது. அப்போது முதல் வேலையாக ஆஸ்டினை ராஜ்ய சபா உறுப்பினராக்கி அவர் பெயரை



2001 மே 31] [செல்வி ஜெ. ஜெயலலிதா]

நானே முன்மொழிந்து, அவரைத் தேர்ந்தெடுக்கச் செய்து (மேசையைத் தட்டும் ஒலி) மாநிலங்களவைக்கு அனுப்பினேன். ஆனால், 1996—ல் ஆட்சியிழந்த உடனேயே திரு. ஆஸ்டின் அவர்கள் எனக்கும் கழகத்திற்கும் செய்த கைமாறு என்ன தெரியுமா? சில துரோகிகளோடு சேர்ந்துகொண்டு எங்கள் நாடாளுமன்றக் கட்சியை உடைத்தார்கள். ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்களோடு திரு. ஆஸ்டினும் சேர்ந்துகொண்டு கழகத்தை விட்டு வெளியேறினார். அதன் விளைவாக, ஆண்டாண்டு காலமாக, புரட்சித் தலைவர் காலந்தொட்டு நாடாளுமன்றத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கென்று ஒதுக்கப்பட்டிருந்த அலுவலகத்தை இழந்தோம். இன்று வரை அந்த அலுவலகத்தை மீட்க முடியவில்லை. இப்படிப்பட்ட துரோகத்தைப் புரிந்த ஆஸ்டின் அவர்கள், ஏற்கெனவே இந்தக் கழகத்திற்குத் துரோகம் புரிந்த திரு. திருநாவுக்கரசுடன் (மேசையைத் தட்டும் ஒலி) சேர்ந்துகொண்டு, புரட்சித் தலைவர் பெயரை உச்சரித்துக்கொண்டு, யாரை புரட்சித் தலைவர் அவர்கள் காலமெல்லாம் எதிர்க்க வேண்டுமென்று எங்களுக்கெல்லாம் சொல்லித் தந்தார்களோ அவர்களோடு கூட்டணி வைத்துக்கொண்டு இந்த அவைக்கு வந்து புரட்சித் தலைவர் அவர்களின் பெயரை உச்சரித்தால் அதை எங்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் இந்த விளக்கத்தை அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் அவர்கள் ஆஸ்டின் அவர்களுடைய வரலாற்றைச் சொல்லி, அதற்குரிய பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். இனிமேல் ஆஸ்டின் அவர்கள்தான் அதற்குப் பதில் சொல்ல வேண்டும். இது தி.மு.க.வுக்கும் எங்களுக்கும் உள்ள பிரச்சினை அல்ல.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ..

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாதம் செய்வது ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறார்கள். பொன்முடி, தாங்கள் கொஞ்சம் அமருங்கள். நீங்கள் அந்தக் கட்சியிலேதானே உறுப்பினராக இருக்கிறீர்கள்? தலை இருக்க வால் ஆடக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி)

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாதம் செய்வது என்னுடைய நோக்கமும் அல்ல. இந்தச் சட்டமன்றம் அமைதியாக நடைபெறுவதில் குறுக்கிடுவது என்னுடைய விருப்பமும் அல்ல. ஆஸ்டின் அவர்களைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன சொன்னாலும் அதற்கு விடை அளிக்க வேண்டியவர்கள் அவர்களே தவிர நான் அல்ல. திராவிட முன்னேற்றக் கழகக் கட்சித் தலைவராக கலைஞர் இருக்கிறார். அவருடைய தலைமையில் நாங்கள் செயல்படுகிறோம். அவருடைய தலைமையை வைத்துத்தான் நாங்கள் இங்கே உள்ளே வந்திருக்கிறோம். அப்படி வந்திருக்கிற ஒரு கட்சி எதிர்க்கட்சியாக இருக்கிறபோது, அந்தத் தலைவரைத் தீய சக்தி என்று இந்த அவையில் சொல்லி அது பதிவாகலாமா? அதே வார்த்தையை நாங்கள் சொல்ல நேரிட்டால் இந்த அவை ஏற்றுக்கொள்ளுமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

*முற்பகல் 10–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். கடந்த முறை இந்த சட்டமன்றக் கூட்டத்தொடர்களில் உங்கள் ஆட்சி இருக்கிறபோது இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பற்றி ஒலித்த, இதைவிடக் கொடுமையான, நாராசமான சொற்கள் எல்லாம் அவைக்குறிப்பில் அப்படியே இருக்கின்றன. நாங்கள் அந்த மரபுக்குள்ளே போகவில்லை. அதைத்தான் நாங்கள் அன்றைக்கே சொன்னோம். மிகக் கடுமையான, கொடுமையான, கேவலமான, கீழ்த்தரமான, தரம் குறைந்த வார்த்தைகள் எல்லாம் இன்றைய முதலமைச்சரைப் பற்றி அன்றைக்குப் பேசியவை அவைக் குறிப்பிலே இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், கலைஞர் அவர்களைப் பற்றிச் சொன்ன வார்த்தைகளை, உச்சரித்த வார்த்தைகளைத் தான் இங்கே சொன்னார்கள்; அதைத்தான் சொன்னார்களே தவிர, அவருடைய சொந்தக் கருத்தைக்கூட அவர்கள் சொல்லவில்லை. ஆகவே, இது ஒன்றும் தவறான மரபு அல்ல. தவறான முன்னுதாரணமும் அல்ல என்கின்ற விளக்கத்தை எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள். இந்த அவையிலே எந்த அடிப்படையில் வாதம் நடைபெற்றாலும், ஏற்கெனவே அப்படி இடம்பெற்ற காலத்தில், எது இடம் பெற்றாலும், எதிர்த்து, மறுத்து பலரும்





சொல்லியிருக்கிறார்கள். எதிர்ப்புத் தெரிவிக்கவே வாய்ப்பு இல்லாத நிலைமை கிடையாது. ஆகவே, ஒரு பிரச்சினையையொட்டி வருகிற போது கூட, அப்படிச் சொல்லிவிடலாம். ஆனால் ஒரு பிரச்சினையில் நேரடி சம்பந்தம் இல்லாமல், திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிக் குறிப்பிடவேண்டிய நேரத்தில், தீய சக்தி என்ற அடைமொழியைத் தந்துதான் சொல்ல வேண்டுமா? அதைத் தாங்கள் ஏற்றுக்கொண்டால், அதேபோல வார்த்தைகளை யார் சொன்னதாக இருந்தாலும், அதேபோன்ற வார்த்தைகளை இந்த அவையில் சொல்ல அனுமதிப்பீர்களா, அப்படி அனுமதித்தால் அது அவைக்கு நல்ல மரபா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டு காலத்தில், அன்றைக்கு ஆளும் கட்சியாக இருந்த தி.மு.க.வினர், இந்த அவையில் பயன்படுத்தாத கொடுஞ்சொற்களே கிடையாது. பல கொடுமையான சொற்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். பல அவதூறான சொற்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். பல அவதூறான, கீழ்த்தரமான செய்திகளை, இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அதையெல்லாம் தாங்கிக் கொண்டோம். அதை எல்லாம் தாங்கிக்கொண்ட எங்களுக்கு, இனிமேல் அவர்கள் எத்தகைய சொற்களைப் பயன்படுத்தினாலும் அதைக் கண்டு நாங்கள் அஞ்சப் போவதில்லை (மேசையைத் தட்டும் ஒலி) வார்த்தைகளை நாங்கள் சொன்னால், நீங்கள் தாங்கிக்கொள்வீர்களா என்றால், என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள். எல்லாவற்றையும் தைரியமாக நாங்கள் எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறோம். இது எங்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர் ஆஸ்டினுக்கும் இடையே உள்ள ஒரு பிரச்சினை. ஆகவே, இதற்கு ஆஸ்டின் அவர்களை, பதில் சொல்ல அனுமதிப்பதே நல்லது என்று கருதுகிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆஸ்டின் பதில் சொல்லுங்கள். உங்களுடைய பேச்சைத் தொடருங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆஸ்டின் அவர்கள் பேச்சைத் தொடரலாம். திரு. பொன்முடி உட்காருங்கள். (குறுக்கீடு) முதலமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்தை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். ஆஸ்டின் அவர்கள் இனி மேல் பேச்சைத் தொடரலாம்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய உண்மையான தொண்டர்களுக்குத் துரோகம் செய்யவேண்டும் என்ற எண்ணம் மனதளவில் கூட எழவேண்டியதில்லை. எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எப்படி உருவானது என்பதைப் பற்றியெல்லாம் இங்கே நான் தெளிவாக எடுத்துச் சொல்லவேண்டும் என்றால், அவையிலே, அதற்கு நேரமும் போதாது. அதனால் பல பேருடைய மனங்களும் புண்படக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும். (குறுக்கீடு) எனவே, அதை நான் விட்டுவிடுகிறேன். ஏற்கெனவே எம்.ஜி.ஆருடைய சிலைகள் எல்லாம் எப்படிச் சிறை வைக்கப்பட்டன, திரைப்பட நகருக்கு எம்.ஜி.ஆர். பெயர் ஏன் வைக்கப்படவில்லை, அதைப் போன்று 5 ஆண்டு காலம், நடந்த ஆட்சி, எம்.ஜி.ஆர். ஆட்சியாக நடந்ததா என்பதைப் பற்றியெல்லாம், நான் இங்கே விளக்கிச் சொல்வதற்குத் தயாராக இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆஸ்டின் அவர்களே, ஆளுநர் உரைக்கு வாருங்கள். ஏனென்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உங்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். சொல்லியிருப்பதற்கு ஏதாவது விளக்கம் சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள். மாநிலங்களவைக்கு புரட்சித் தலைவி அவர்கள் உங்களைத் தேர்ந்தெடுத்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள், அவரால் வராமல், உங்களுடைய சொந்த முயற்சியால் வந்ததாக, ஏதாவது விளக்கம் சொல்வதாக இருந்தால், சொல்லுங்கள். அப்படி இல்லாவிட்டால், நீங்கள் தயவுசெய்து ஆளுநர் உரைக்கு வாருங்கள். மற்ற பிரச்சினைகளுக்குள்ளே போய் வசமாக மாட்டிக்கொண்டு, வெளியே வர முடியாமல் (மேசையைத் தட்டும் ஒலி) திணறாதீர்கள்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வதைப் போல், மாநிலங்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு, இன்றைய முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு முன்மொழிந்ததையோ, அவர் என்னைத் தேர்வு செய்ததையோ நான் மறுக்கவில்லை. 1987—ல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் மறைவுக்குப் பிறகு, 1991—92—லே மாநிலங்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய இடைப்பட்ட காலங்களில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற இயக்கத்திற்காக, அந்த இயக்கத்தை, குமரி மாவட்டத்திலே வளர்ப்பதற்காக நான் எவ்வளவெல்லாம் பாடுபட்டிருப்பேன் என்பது பலருக்குத் தெரிவதற்கு வாய்ப்பு இல்லை. (குறுக்கீடுகள்) என்னுடைய தந்தையார் ...



**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இயக்கத்திற்காக 1991-க்கு முன்பாக இவர் பாடுபட்டார், உழைத்தார் என்பதற்காகத்தான், அதற்குப் பரிசாகத்தான், அதனுடைய அங்கீகாரமாகத்தான் அவருக்கு (மேசையைத் தட்டும் ஒலி) மாநிலங்களவைக்கு உறுப்பினராகச் செல்லும் வாய்ப்பளித்தேன்.

அதன் பிறகு, இவருக்கு என்ன தீங்கு நடைபெற்றது என்பதை அவர் விளக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன். 1996—ல் இந்தக் கழகம் தேர்தலில் தோல்வியடைந்த உடனேயே, ஆட்சியை இழந்த உடனேயே, இவர் கழகத்திற்கே துரோகம் செய்துவிட்டு, வெளியேறிவிட்டு, புரட்சித் தலைவர் காலந்தொட்டு கழகத்திற்கென்று நாடாளுமன்றக் கட்டடத்திலே இருந்த அலுவலகத்தை இழக்கச் செய்தாரே, இதை எந்த வகையில் இவர் நியாயம் என்று கூறுகிறார் என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–25

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர்களுடைய தலைவர்.. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆஸ்டின் அவர்கள் விளக்கம் சொல்லலாம், பேசலாம். இன்னும் 2 நிமிடங்களில் உரையை முடித்துக் கொள்ளுங்கள். 22 நிமிடங்களுக்கு மேலே ஆகிவிட்டன.

**திரு. ஆஸ்டின்:** புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ..(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராதாகிருஷ்ணன், உட்காரலாம். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். திரு. ஆஸ்டின் அவர்கள் விளக்கம் சொல்வார்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996—லே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியை இழந்தபோது, போட்டி அண்ணா தி.மு.க. என்று ஒன்று அன்றைக்கு உருவாக்கப்பட்டது. அந்தப் போட்டி அண்ணா தி.மு.க.வில் நான் இணையவில்லை. அந்த இயக்கம், போட்டி அண்ணா தி.மு.க. உருவாவதற்கு யார் யாரெல்லாம் காரணமாக இருக்கப் போகிறார்கள் என்பதைக்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு நான் அன்றைக்கு உரையாடியிருக்கிறேன். இந்த இயக்கத்திலே போட்டி அண்ணா தி.மு.க. என்று ஒன்று உருவாகக்கூடாது என்பதற்காக 3, 4 மாத காலமாக நானும் பல்வேறு தகவல்களை மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களிடத்திலே சொல்லி, இந்த இயக்கத்திற்கு உண்மையானவனாகத்தான் இருந்தேன். (மணியடிக்கப்பெற்றது) இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர்களாக இருக்கக்கூடிய ஒரு சிலரின் மனநிலை என்ன என்பதை அறிந்து வரச்சொல்லி அன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்னை அனுப்பியிருந்தார்கள்.

அதைப்போலவே, நான் ஏன் இந்த இயக்கத்தைவிட்டு வெளியே வந்தேன் என்பதற்கு ஒருசில காரணங்கள் இருக்கின்றன. அதை நான் இந்த அவையிலே சொல்வது சரியாக இருக்காது. இந்த இயக்கத்திற்குத் துரோகம் செய்துவிட்டு நான் வெளியே வரவில்லை. இந்த இயக்கத்திலே ஒரு சில பேர் இந்த இயக்கத்தைத் தங்களுடைய கையிலே வைத்துக்கொண்டு ஆட்டம் போட்ட காரணத்தால் அந்த மனக்கசப்பின் காரணமாகத்தான் இந்த இயக்கத்திலிருந்து நான் வெளியே வருவதற்கு வாய்ப்பிருந்ததே தவிர, புதுக்கோட்டை இடைத்தேர்தல் வரைக்கும் நான் என்னுடைய தந்தையார் என்னுடைய மூதாதையர் சம்பாதித்த சொத்துக்களையெல்லாம் இழந்துவிட்டுத்தான், இந்த இயக்கத்திற்காக நான் பணியாற்றி இருக்கிறேன் என்பதை இந்த மன்றத்திற்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) இதோ நான் ஆளுநர் உரை விவாதத்திற்கு வருகிறேன். இதைப்பற்றி நான் பேசிக் கொண்டிருந்தால் நீங்கள் நேரம் கொடுக்கமாட்டீர்கள். ஆளுநர் உரையிலே இன்றைக்கு அரசு அதிகாரிகள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின் அவர்களே, நீங்கள் சொத்துக்களை இழந்தீர்களோ, ஏதோ தெரியாது; நேரத்தை அபகரித்துக்கொண்டிருக்கிறீர்கள். தயவுசெய்து பேச்சை முடியுங்கள்.

**திரு. ஆஸ்டின்:** அரசு அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகளெல்லாம் இந்த 15 நாட்களாக இடமாற்றம் செய்யப்படுவதும், பந்தாடப்படுவதுமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த 15 நாட்களாகத்தான் மன உளைச்சல் ஏற்பட்டு இருப்பதாக நான் அறிகிறேன். முதல் தினம் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் பொன்முடி அவர்கள் பேசுகிற போதுகூட 'அரசு அதிகாரிகள் என்னிடம் பேசிக்கொண்டிருந்த போது, உங்களுடைய ஆட்சிக் காலத்திலே எங்களுக்குப் பிரச்சினை இல்லை. அடுத்த ஆட்சி எப்படி இருக்குமோ என்று சொன்னார்கள்' என்று யதார்த்தமாகத்தான் சொன்னார்கள். அதைக்கூட பொறுத்துக் கொள்ள முடியாத ஆளும் கட்சி, கூட்டணிக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள், ஒரு சட்டமன்ற உறுப்பினரிடத்திலே ஓர் அதிகாரி பேசுவதுகூட தவறு என்பதுபோல, அதிகாரிகளுக்கு எச்சரிக்கை விடுவது போல, அதைவிட



ஒரு படி மேலே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வளர்மதி ஜெபராஜ் அவர்கள் பேசுகிறபோது, நமக்கு விசுவாசமில்லாத அதிகாரிகளைத் தூக்கி எறியுங்கள் என்று சொல்லி.. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி வளர்மதி ஜெபராஜ், அவர் பேசி முடிக்கட்டும். அதற்குப் பிறகு விளக்கம் சொல்லலாம்.

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** அரசுக்கு விசுவாசமில்லாதவர்கள் என்று சொல்லவில்லை. கட்சிக்கு விசுவாசமில்லாதவர்களைத் தூக்கி எறியுங்கள் என்றுதான் சொன்னேன்.

**திரு. ஆஸ்டின்:** நீங்கள் அந்த உரையை எடுத்துப் பார்த்தால் தெரியும். நமக்கு என்றுதான் இருக்கிறது. இருந்தாலும்கூட அதிகாரிகள் சுதந்திரமாகச் செயல்படுவதற்கு இந்த அரசு வழிவிட வேண்டும். அவர்கள் மிரட்டப்படுவதும், இந்த அவையிலேயே மிரட்டப்படுவதும், அவர்களுக்கு எச்சரிக்கை விடுவதுமாக இருந்தால் எதிர்க்கட்சி உறுப்பினர்களான எங்களைப் போன்ற மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களோடு பேசுவதற்குக்கூட அவர்கள் அஞ்சுகின்ற சூழ்நிலை ஏற்பட்டுவிடும். எனவே அரசு அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள் சுதந்திரமாக பணியாற்றுவதற்கு இந்த அரசு அவர்களுக்கு வழிவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம். (குறுக்கீடு) திரு. ஆஸ்டின், போதும். (குறுக்கீடு) ஓரே ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) திரு. அன்பழகன், உட்காருங்கள், அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. ஆஸ்டின்:** அதைப்போல விவசாயிகளுக்கு இந்த ஆளுநர் உரையிலே எதிர்பார்த்த சலுகைகள் இல்லை. பல்வேறு திட்டங்களை, நவீன நீர்ப்பாசனங்கள் என்று சொல்லி, பல்வேறு திட்டங்களை அறிவித்திருந்தாலும்கூட, அவர்கள் எதிர்பார்த்த கடன் தள்ளுபடி, வட்டித் தள்ளுபடி இதில் இல்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் முதல் நாள் பேசுகிறபோது, கடன் தள்ளுபடி, வட்டித் தள்ளுபடி பற்றி அமைச்சரவைக் கூட்டத்திலே ஆலோசித்து, பட்ஜெட் உரையிலே சொல்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். வட்டியை மட்டும் தள்ளுபடி செய்யக் கூடாது. கடன் சுமையால் அந்த விவசாயிகள் இன்றைக்கும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, பட்ஜெட் உரையிலே அவர்களுடைய கடனிலே பாதி அளவாவது குறைக்கக்கூடிய அளவிலே

[திரு. ஆஸ்டின்] [2001 மே 31

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், இந்த அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–30*

அதேபோன்று, போக்குவரத்துத் தொழிலாளர்களை அரசு ஊழியர்களாக்க வேண்டுமென்று அன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் எல்லாம், போராட்டமெல்லாம் நடத்தினார்கள். அதைப் பற்றியும் இந்த ஆளுநர் உரையிலே எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனவே, பட்ஜெட் உரையிலேயாவது போக்குவரத்துத் தொழிலாளர்களை அரசு ஊழியர்களாக ஆக்கக்கூடிய ஓர் அறிவிப்பை இந்த அரசு வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதைப் பற்றியோ அல்லது வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொள்வதற்காக அவர்களுக்கு ஏதாவது நிதியுதவி அளிப்பதைப் பற்றியோ இங்கே குறிப்பிடப்படவில்லை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக, எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், புரட்சித் தலைவர் திருநாவுக்கரசு அவர்களுடைய தலைமையிலே, இளைஞர் அணி சார்பிலே பேரணி நடத்தி, இளைஞர் சுயவேலை வாய்ப்பு நிதியுதவிக் கழகம் ஒன்றை அமைக்க வேண்டுமென்று அன்றைய முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களிடத்திலே மனு கொடுக்கப்பட்டு, அந்த அடிப்படையிலே அதை ஆய்வு செய்து அறிக்கை கொடுப்பதற்காக ஓய்வு பெற்ற நிதித் துறைச் செயலாளர் வெங்கட்ராமன், I.A.S. அவர்கள் அன்றைக்கு நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் இன்று அரசுக்கு அறிக்கையும் கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையின் அடிப்படையிலே இளைஞர்கள் தொழில் தொடங்குவதற்காக, அவர்களுக்கு ஒரு நிதியுதவிக் கழகம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, ஆசிரியர் பணியிடங்களைப் பொறுத்தவரையிலே வேலைவாய்ப்பு அலுவலகத்தினுடைய seniority–படி இன்றைக்கு appointment நடக்கின்றது. அதை நாங்கள் வரவேற்கிறோம். அதைப்போல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஆசிரியர்களின் இடமாற்றத்திலும் அந்தந்த இடங்களிலே counselling வைத்து, இடமாற்றம் செய்யப்படுவார்கள் என்று சொல்லியிருக்கின்றார்கள். அதையும் வரவேற்கின்றோம். அதேநேரத்திலே, ஆசிரியர்கள் பணியிடங்கள் மட்டுமல்ல,



2001 மே 31] [திரு. ஆஸ்டின்]

அரசாங்கத்திலே எந்தப் பணியிடத்தை அல்லது காலியிடத்தை நிரப்புவதாக இருந்தாலும் அதை சீனியாரிட்டி அடிப்படையில் நிரப்புவீர்கள் என்று சொன்னால், அதிலே எந்தப் பரிந்துரைகளும், அரசியல் தலையீடுகளும் இல்லாமல் இருந்தால், இந்த அரசுக்கு ஒரு நல்ல பெயர் ஏற்படக்கூடிய வாய்ப்பு ஏற்படும். அதையும் நீங்கள் கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வதோடு... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சந்தானம். (குறுக்கீடு) போதும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற உறுப்பினர்கள் பேசுகிறபோது, எழுத்துக்கு எழுத்து, வரிக்கு வரி குறுக்கிட வேண்டும் என்கிற அவசியம் இல்லை. அவர்கள் சொல்கின்ற விளக்கங்களையெல்லாம் முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பதிலுரையிலே சொல்ல வேண்டிய பதிலை விளக்கமாகச் சொல்வார்கள். ஆகவே, நாம் அடிக்கடி இதிலே குறுக்கிட வேண்டும் என்கிற அவசியம் இல்லை. ஆஸ்டின் அவர்களே, உங்களுக்குக் கொடுத்த நேரம் முடிந்துவிட்டது. அடுத்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சந்தானம். (குறுக்கீடு) போதும். சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டீர்கள். போதும். (குறுக்கீடு) ஓரேயொரு மணித் துளியில் முடியுங்கள்.

**திரு. ஆஸ்டின்:** கிராம உயர்நிலைப் பள்ளிகளெல்லாம் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள். அதை நாங்கள் பாராட்டுகின்றோம். அதேபோன்று, தொழிற்படிப்புக் கல்லூரிகளிலே கிராமப்புறத்து மாணவர்களுக்கு இருந்த 15 சதவிகித இட ஒதுக்கீடு 25 சதவிகிதமாக உயர்த்தப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதையும் நான் பாராட்டுகின்றேன். அதேபோன்று, ஆதிதிராவிட பழங்குடியினர் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவிகளுக்கு மிதிவண்டிகள் வழங்கப்படும் என்றும் அரசுக் கலைக் கல்லூரிகளிலே அவர்களுக்கு பட்ட மேற்படிப்பு இலவசமாகக் கொடுக்கப்படும் என்றும் சொல்லியிருக்கின்றார்கள். இதைக் கொஞ்சம் விரிவுபடுத்தி, அரசுக் கல்லூரி என்று இல்லாமல், அனைத்துக் கல்லூரிகளிலுமே அவர்களுக்கு இலவசமாக மேற்படிப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ஏனென்றால், பல மாவட்டங்களிலே இன்றைக்கு அரசு கலைக் கல்லூரிகள் இல்லை. அதையும் கருத்தில் கொண்டு, இதை இன்னும் சற்று விரிவுபடுத்தி, மாணவ மாணவிகளுக்காக இந்த அறிவிப்பை அரசு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கத் தேர்தலை செப்டம்பர் மாதம் நடத்துவதாக அரசு அறிவித்திருக்கின்றது. அதை நான் வரவேற்கிறேன். அப்படி 

தேர்தல் நடத்துகின்றபோது, என்றைக்கு இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் கலைக்கப்பட்டதோ, அன்றைக்கு யார்யாரெல்லாம் அதிலே உறுப்பினர்களாக இருந்தார்களோ அவர்கள் மட்டுமே தேர்தலில் பங்கேற்கக்கூடிய அளவிலே இந்தத் தேர்தலை நடத்த வேண்டும். (குறுக்கீடுகள்) கால அவகாசம் கொடுப்பீர்களானால், நிச்சயமாக அங்கே போலி உறுப்பினர்கள் சேர்வதற்கான வாய்ப்பு ஏற்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்கள் பேசலாம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்கள் பேசலாம். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் உட்காருங்கள்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறப்பு மிகுந்த ஆளுநர் உரையிலே எங்களது அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் இயக்கத்தின் சார்பில்...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம், கொஞ்சம் உட்காருங்கள். வரதன் அவர்கள் ஏதோ சொல்ல விரும்புகிறார்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலே மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் பேசுகின்றபோது சொன்ன கருத்தை நான் என்னுடைய உரையிலே சொன்னேன். இன்று மாண்புமிகு உறுப்பினர் ஆஸ்டின் அவர்கள், உறுப்பினர்களை அதிகாரிகள் சந்திப்பதைக் குறை கூறுகிறார்கள் என்று சொன்னார்கள். உறுப்பினர்களை அந்தந்த சட்டமன்றப் தொகுதியிலே இருக்கின்ற அதிகாரிகள் சந்திப்பது, பார்ப்பது தவறல்ல. இந்த அரசு வந்தவுடன் காவல் துறை அதிகாரிகளைப் பந்தாடுகிறார்கள் என்று சொன்னார்கள். ஒரு ஐந்தாண்டுகள் பின்னாலே திரும்பிப் போனால், நம்முடைய பேரவை எதிர்க்கட்சித் தலைவர்கூட இங்கே அவை முன்னவராக இருந்தவர். I.A.S., I.P.S. அதிகாரிகளை அவர்கள் என்ன ஆடினார்கள்? கிரிக்கெட் ஆடினார்களா? (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது இவர்கள் 'ball' எடுத்துப் போட்டார்களா? இவர் கட்சித் தலைவரும், இவரும். (கூச்சல்—குழப்பம்) ஆட்சி மாற்றம் வருகின்றபோது, அதிகாரிகளின் மாற்றம் என்பது ஒரு வரலாறு, இயற்கை. அதை வைத்துக்கொண்டு பந்து ஆடுகிறோம், அது ஆடுகிறோம், இது ஆடுகிறோம் என்று சொன்னால் சரியல்ல.





*முற்பகல் 10-35*

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே....

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதன், சொல்ல வேண்டிய விளக்கத்தைச் சொல்லிவிட்டீர்கள். திரு. சந்தானம் பேசலாம்.

(திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் ஆளுங்கட்சி உறுப்பினர்களைப் பார்த்து கையை நீட்டி ஏதோ பேசினார்.)

(சில ஆளுங்கட்சி உறுப்பினர்கள் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்களை அமரச் சொல்லி சத்தமிட்டனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம், நீங்கள் பேசலாம். திரு. வரதன் நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) பேசியது போதும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்கள் பேசலாம்.

(திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் தொடர்ந்து நின்று கொண்டே கையை நீட்டி ஏதோ பேசினார்.)

(சில ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அவரை அமரச் சொல்லி சத்தமிட்டுக் கொண்டிருந்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் நீங்கள் பேசுங்கள். (கூச்சல்—குழப்பம்) உறுப்பினர்கள் அமைதியாக உட்காருங்கள். அனைவரும் அமைதியாக உட்காருங்கள். திரு. சந்தானம் அவர்கள் பேசலாம்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** நானும் ஜெயித்துத்தான் வந்திருக்கிறேன். நீங்கள் எல்லாம் என்ன சொன்னீர்கள் என்று எனக்குத் தெரியும்... (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்களுக்கு இது சாத்தூர் அல்ல, சட்டப் பேரவை என்பதைத் தாங்கள் அறிவுறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அவர் எழுந்து நின்று ஆளுங்கட்சி உறுப்பினர்களைப் பார்த்து கை நீட்டி ஆவேசமாக பேசுவதால்தான்,

இவர்களும் எழுந்திருக்கிறார்கள். அவரை நீங்கள் அமரச் சொன்னால், இங்கேயும் அமைதி காக்கலாம்.

*(எதிர்க்கட்சித் தலைவர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரனைப் பார்த்து உட்காரச் சொன்னார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய தலைவரே அமரச் சொன்னதற்குப் பிறகு பிடிவாதம் பிடிப்பது முறையல்ல. உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள்.

*(திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அமர்ந்தார்.)*

**திரு. பரிதி இளம்வழுதி:** தலைவர் அவர்களே, Point of Order.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறப்பு மிகுந்த—(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பரிதி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. சந்தானம் அவர்கள் பேசுகின்றார்கள். மற்ற விளக்கங்களை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்வார்கள்.

**திரு. லா. சந்தானம்:** ஆளுநர் உரையிலே, எங்கள் இயக்கத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை இந்த அவையிலே வைப்பதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய உளப்பூர்வமான நன்றியினைத் தெரிவித்து, நடந்து முடிந்த சட்டமன்றப் பேரவைத் தேர்தல் என்பது, இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருப்பதுபோல, ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தேர்தல்தான் என்பதை நான் சொல்லிக்கொள்வதற்கும் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கு வாதங்கள் செய்கின்றபோது, ஓட்டு வங்கி உள்ள கட்சிகளை இணைத்துக்கொண்டு தேர்தலை சந்தித்து இருக்கிறீர்கள் என்று குறிப்பிட்டார்கள். அந்த நிலையை எடுத்து, ஆக்கபூர்வமான பழமைவாய்ந்த அரசியல் கட்சிகளை எல்லாம் ஒருங்கிணைத்து, ஒரு கூட்டணியை ஏற்படுத்திய பெருமையே, அதுவே ஒரு வரலாற்று சிறப்புமிக்க செயல்தான் (மேசையைத் தட்டும் ஒலி).

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967–லேகூட, அன்றைக்கு இருந்த அரசை வீழ்த்துவதற்கு இதுபோன்று சிறப்புமிக்க ஒரு கூட்டணியை அமைத்துக் கொண்டுதான் அந்த ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். அதுபோலத்தான் இன்றைக்கும் அரசியல் கொள்கைகள், இலட்சியங்கள் கொண்ட பல்வேறு அரசியல் இயக்கங்களை, மக்களுக்குத் தொண்டு



செய்கின்ற இயக்கங்களை, மக்களுக்காகக் குரல் கொடுக்கின்ற இயக்கங்களை ஓர் அணியிலே இணைத்துக்கொண்டு, சிறுபான்மை மக்களுக்கும் ஆதரவு அளிக்கின்ற நிலையில் மதச்சார்பற்ற ஒரு கூட்டணியை, ஜாதிமத பேதங்களுக்கு எல்லாம் அப்பாற்பட்ட இனியதொரு கூட்டணியை அமைத்த பெருமை இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவி புரட்சித் தலைவி அவர்களைச் சாரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் கூட்டணியை அமைத்த நேரத்தில் எல்லாக் கட்சிகளும் ஒருங்கிணைந்து தொகுதிப் பங்கீட்டினை முடித்துக் கொண்டு அவர்களுக்குத் தொகுதிகள் அறிவிக்கின்ற நேரத்திலே என்னுடைய உசிலம்பட்டி தொகுதியை என்னுடைய ஃபார்வர்டு பிளாக் இயக்கத்திற்கு வழங்கப்பட்டிருக்கின்ற செய்தியைத்தான் முதன்முதலாக புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்தார்கள். எனக்குக்கூட அப்படி அறிவித்த நேரத்தில் முதன்முதலாக நம்முடைய தொகுதியை அறிவித்திருக்கிறார்களே நமது அணி வெற்றிப்பெற்று ஆட்சிக் கட்டிலிலே ஏற வேண்டுமென்கின்ற எண்ணம், நான் வெற்றி பெறுவதைக்காட்டிலும், இந்த அணி வெற்றி பெறவேண்டும் என்கின்ற எண்ணம்தான் எனக்கு மேலோங்கி இருந்தது.

*முற்பகல் 10–40*

அந்த அளவிற்கு ஏன் இந்த இயக்கத்திற்கு முதலிடம் கொடுத்தார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்த்தபோது, நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற தலைவர் நேதாஜி அவர்களும், பசும்பொன் தேவர் அவர்களும் இந்த நாட்டின் விடுதலைக்காகப் பல்வேறு தியாகங்களைச் செய்தவர்கள்; இந்த நாட்டின் நலத்திலே அக்கறை கொண்டு, இந்த நாடு உயரவேண்டும், சிறப்படைய வேண்டும் என்பதிலே ஆர்வம் கொண்டு இருந்தவர்கள்; அவர்கள் வாழ்க்கையையெல்லாம் இந்த நாட்டிற்காக அர்ப் பணித்தவர்கள் என்கின்ற காரணத்திற்காகத்தான், அந்த இயக்கத்தை முதன்முதலாக இந்த தேர்தல் களத்திலே அறிவித்தார்கள் என்கின்ற பெருமை அவர்களுக்கு உண்டு. அந்த சக்திதான், அவர்கள் தேசியத்தோடு தெய்வீகத்தையும் மனதிலே மதித்தவர்கள் என்கின்ற காரணத்தினால், அந்த சக்தி இன்றைக்கு இந்த அணிக்கு மாபெரும் வெற்றியைத் தேடித் தந்திருக்கிறது. எனவே, இந்த வெற்றி என்பது, ஒரு சரித்திரப் புகழ் வாய்ந்த வெற்றிதான். தமிழகத்திலே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களும், தொழிலாளர்களும், ஏழை விவசாயக் கூலிகளும் சேர்ந்துதான் இந்த வெற்றியைத் தேடித் தந்து இருக்கிறார்கள்.

"உழவுக்குந் தொழிலுக்கும் வந்தனைசெய்வோம்—வீணில்
உண்டுகளித் திருப்போரை நிந்தனைசெய்வோம்"

என்று சொன்னான் பாரதி. ஆனால், கடந்த ஆட்சிக் காலத்தில் உழவும் தொழிலும் எப்படியெல்லாம் நலிந்து இருந்தன? அனைத்து விவசாயிகளும், கரும்பு விவசாயியாக இருந்தாலும் சரி, தென்னை பயிரிடுகின்ற விவசாயியாக இருந்தாலும் சரி, தேயிலை பயிரிடுகின்ற விவசாயியாக இருந்தாலும் சரி தங்களுடைய வாழ்க்கையில் எத்தனை போராட்டங்களை, அவலங்களைச் சந்தித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் உபயோகிக்கின்ற இடு பொருட்கள் எல்லாம் விலை கூடிக் கொண்டிருந்தன. ஆனால், அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு மட்டும் விலை இல்லை. இப்படிப்பட்ட ஓர் அவலமான நிலையில், அவர்கள் பட்டிருந்த விவசாயக் கடன்களுக்காக நாங்கள் எல்லாம் குரல் கொடுத்தோம், தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டோம்; அதற்காகப் போராட்டம் நடத்தி, வெளியிலே சாலை மறியலில் ஈடுபட்டிருந்த எங்களையெல்லாம் பார்த்து முன்னாள் முதலமைச்சர் என்ன குறிப்பிட்டார்கள் தெரியுமா? அன்றைக்குச் சட்டமன்றத்திற்கு வந்திருந்த அவர்கள், நாங்கள் மறித்துக்கொண்டிருந்த சாலை வழியாகச் செல்லாமல், வேறு வழியே சென்றுவிட்டு, மறுநாள் சட்டமன்றத்திற்கு வந்து, இந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் மறியலில் ஈடுபட்டிருந்தீர்கள்; துஷ்டர்களைக் கண்டால் தூர விலகிச் செல் என்ற பழமொழிக்கு ஒப்ப, நீங்கள் அமர்ந்திருந்த வழியைவிட்டு, வேறு வழியே சென்றுவிட்டேன் என்று சொன்னார்கள். மக்களுக்காகக் குரல் கொடுக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்த்து, இந்த அவையிலே துஷ்டர்கள் என்று குறிப்பிட்டவர்கள்தான் அன்றைக்கு ஆளுங்கட்சியிலே இருந்தார்கள் என்கின்ற நிலையை மக்கள் உணர்ந்துகொண்டுதான் இன்றைக்கு இந்தச் சிறப்பான ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கு பேசுகின்றபோது விவசாயிகளைப்பற்றி ஒன்றும் குறிப்பிட வில்லையே என்று குறிப்பிடுகின்றபோது, முதலமைச்சர் அவர்கள் மிகப் பெருந்தன்மையோடு எழுந்து, இது ஆளுநர் உரை: மிக விரைவாக 5 நாட்களுக்குள் தயாரிக்கப்பட்ட உரை; அவற்றையெல்லாம் குறிப்பிடு வதற்குக் கால அவகாசம் இல்லை என்கின்ற காரணத்தினால் அந்த விவசாயிகளுடைய எண்ணங்களை நாங்கள் அமைச்சரவையைக் கூட்டிப் பேசி ஒரு சிறந்த முடிவு எடுப்போம் என்கின்ற கருத்தைச் சொன்னார்கள். அதற்காக என்னுடைய பாராட்டுதல்களை நான் அவர்களுக்குத்





தெரிவித்துக்கொள்கிறேன். அதை நிறைவேற்றவும் வேண்டுமென்று அன்போடு அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

42 சீரிய திட்டங்களை ஒவ்வொன்றும் முத்துக்களாக, அந்த முத்துக்களை ஒன்றாக இணைத்துச் செய்யப்பட்ட நல்ல மாலையாக, முத்துமாலையாக இன்றைக்கு தமிழக மக்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) சிறந்த ஆபரணமாக ஆளுநர் உரை அளிக்கப்பட்டு இருக்கிறது. இங்கு குறிப்பிட்டார்கள். I.A.S., I.P.S. அதிகாரிகள் எல்லாம் மிகுந்த ஆதங்கத்திலே இருக்கிறார்கள் என்று இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிட்டு இருப்பதைச் சொல்லி, அந்த நிலை இன்றைக்கு இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால், உண்மையிலே கடந்த காலத்திலே நானே எத்தனையோ அதிகாரிகளிடத்திலே அவர்களுடைய ஆதங்கத்தைக் கேட்டு இருக்கிறேன். இந்த அவையிலேயே அதைப்பற்றிக் கூட குறிப்பிட்டி ருக்கிறேன். அவர்கள் எந்தத் தவறும் செய்ய வில்லை. கடந்த காலத்தில் முதலமைச்சர் அலுவலகத்திலே பணி புரிந்தவர்கள் என்பதற்காக ஐந்தாண்டு காலம் ஒரு நாற்காலியை மட்டும் கொடுத்து உட்கார வைத்திருந்த கதையை எல்லாம் நாங்கள் பார்த்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10–45*

இன்றைக்கும் அவர்களுக்கு அதே நாற்காலி மட்டும் தான் இருக்கிறது. I.A.S. அதிகாரி என்ற பணி அந்தஸ்து வழங்கப்படவில்லை. எத்தனை I.A.S. அதிகாரிகள் தங்கள் பணிகளை இழந்து தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டு, ஐந்தாண்டுகளாக அவர்கள் பட்ட அல்லல்களையெல்லாம் நாங்கள் பார்த்திருக்கிறோம். பார்த்ததோடு மட்டுமல்ல, அந்த அரசு இருக்கின்ற நேரத்திலே இதே அவையிலே நான் எல்லாம் பலமுறை குரல் எழுப்பியிருக்கிறேன். அரசியல் என்பது எப்படியும் இருக்கலாம். அதிகாரிகள் என்பவர்கள் நிரந்தரமாக அனைத்து ஆட்சியிலும் பணி செய்யக்கூடியவர்கள். ஆகவே இந்தப் போக்கு வேண்டாம், பழி வாங்குகிற நிலை இருக்கவேண்டாம். இதனால் பல்வேறு அதிகாரிகள் இப்படியெல்லாம் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆனால் இன்றுவரைக்கும் அவர்களுக்கு ஒரு நல்ல நிலை கிடைக்கவில்லை. நீங்களாவது உங்களுடைய ஆட்சியில் நல்ல நிலையைத் தந்து, உங்களிடத்தில் பணி புரிந்தார்கள் என்பதற்காகப் பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கு எல்லாம் ஒரு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, தீவிரவாதம் ஒழிக்கப்படவேண்டும் என்று இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள். நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். கடந்த காலங்களிலே இனக்கலவரத்தின் மூலமாக, வன்முறைகளின் மூலமாக பாதிக்கப்பட்டவர்களிலே நாங்களும் எங்களைச் சேர்ந்த மக்களும் மிகுந்த துன்பங்களையும் துயரங்களையும் அனுபவித்திருக்கிறோம். காட்டிலே இருக்கிற வீரப்பனைக் காட்டிலும் நாட்டிலே பல்வேறு கொலைக் குற்றச்சாட்டுக்களை காவல் துறை அவர்கள் மீது புனைந்திருந்தும், உச்ச நீதிமன்றம்கூட அவர்களைக் கைது செய்ய வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருந்தும் இதுவரையிலே எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருக்கிறது. கணவனை இழந்துவிட்டு கண்ணீர் வடித்துக்கொண்டு நீதி கேட்டு அபலைப் பெண்களாக நின்று கொண்டிருக்கும் அந்தப் பெண்களுடைய கண்ணீரைத் துடைக்க வேண்டிய பொறுப்பும் உங்களுடைய பொறுப்பாகும். அந்த வகையில் காட்டிலே இருக்கும் வீரப்பனைக் காட்டிலும் நாட்டிலேயிருக்கிற கொடியவர்கள் இன்றைக்கும் நல்லவர்களாக நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள்மீது கொலை வழக்குகள் சுமத்தப்பட்டிருக்கின்றன. நீதிமன்றம் கைது செய்ய ஆணை பிறப்பித்திருக்கிறது. இப்படியெல்லாம் இருக்கின்ற நிலையைப் போக்க வேண்டியது உங்களுடைய கடமை. இந்த மன்றத்திலேயே நான் நீதி கேட்டிருக்கிறேன். நீங்கள் சோழ நாட்டிலேயிருந்து வந்தவர்கள். சோழ மன்னர்கள் நீதிக்குப் பெயர் பெற்றவர்கள். அப்படியிருக்கும்போது, இங்கே ஒருவனுக்கு ஒரு நீதி, இன்னொருவனுக்கு ஒரு நீதி என்ற நிலை இருக்கிறது என்று நானே இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொடுத்திருக்கிறேன். அதெல்லாம் இன்று வரைக்கும் நிறைவு செய்யப்படவில்லை. இந்த அரசாவது அதை நிறைவு செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் அதை மீண்டும் உங்கள் கவனத்திற்கு வைக்கிறேன்.

பல்வேறு சீர்திருத்தங்கள் பற்றி இங்கே ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. மகளிருக்கு 33 சதவீதம் இட ஒதுக்கீடு சட்டமன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் பெற்றுத் தருவதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ளும் என்று அறிவித்திருக் கிறீர்கள். மற்றவர்களைப் போல நீங்கள் வெறும் வாய் அறிவிப்பு மட்டும் செய்வதோடு நின்று விடாமல், நீங்கள் செயல்படுகிறவர்கள் என்பதைக் காட்டுவதற்காக, இந்த ஆளுநர் உரையை அறிவிப்பதற்கு முன்னாலேயே ஒரு கட்சியினுடைய தலைவி என்ற முறையில், இந்த அவைக்கு வர எத்தனை பெண்களுக்கு வாய்ப்பளித்து இடம் கொடுத்திருக்கிறீர்கள் என்பதைப் பார்க்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதை நாங்கள் பாராட்ட வேண்டாமா?





சட்டம் ஒருபுறம் இருந்தாலும்கூட அந்தச் சட்டத்தையெல்லாம் தாண்டி, உங்களாலும் ஒரு கட்சித் தலைவர் என்ற முறையில் செயலாற்ற முடியும் என்ற நிலையிலே இத்தனை பெண்களை இந்த அவையில் உட்கார வைத்து அழகு பார்க்கிறீர்களே, அதை நாங்கள் பாராட்டாமல் எப்படி இருக்க முடியும்?

முற்பகல் 10–50

உண்மையிலேயே நான் நேரடியாகத் தேர்தல் நேரத்தில் பார்த்தது இது. இந்த அரசு வரவேண்டும், புரட்சித் தலைவி அவர்கள் ஜனநாயக ரீதியில் போட்டியிடுவதைக்கூடத் தடுத்திருக்கிறார்கள், அந்த ஜனநாயகக் கடமையைச் செய்வதற்குக்கூட முடியாத அளவிற்குத் தடுக்கப் பட்டிருக்கிறது. இதை எப்படியும் முறியடித்தே ஆகவேண்டும், அவர்களை ஆட்சிக் கட்டிலிலே ஏற்றி ஆகவேண்டுமென்கிற எண்ணத்தோடு தாய்மார்கள்தான் முழுக்க முழுக்க (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கூட்டணிக்கு ஓட்டுப் போட்டார்கள். அதை நான் கண்கூடாக பல இடங்களில் பார்க்க முடிந்தது. இன்றைக்குக்கூட சர்ச்சையாகச் சொல்கிறார்கள். இன்றைக்கு ஆளுநராக இருப்பவர்கள் ஒரு சிறந்த நீதிபதியாக இருந்தவர்கள். அந்த நீதிபதி அவர்கள் அளித்த தீர்ப்பையே குறையாகச் சொல்கிறார்கள். அவர்கள் ஜனநாயகக் கடமையைச் செய்திருக்கிறார்கள். இந்த ஜனநாயகத்திலே பெரும்பான்மை மக்களுடைய ஆதரவைப் பெற்றிருக்கின்ற ஓர் இயக்கத்தை ஆட்சிக் கட்டிலிலே அமர்த்துவது என்பதுதான் முறை என்பதைச் செய்திருக்கிறார்கள். ஆனால், அதற்கு எதிர்வாதம் செய்பவர்களுக்கு நான் சொல்லிக் கொள்கிறேன், நிச்சயமாக அந்த நிலை மறுக்கப்பட்டிருக்கும் என்று சொன்னால், இந்த 12—வது சட்டமன்றத்திலே நாம் பேசுகின்ற நிலைகூட இருந்திருக்காது. நாங்கள் எல்லாம் நிச்சயமாகப் பதவிப் பிரமாணத்தை ஏற்றுக்கொள்வதற்குக்கூட முடியாது என்று சொல்லி இருப்போம். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி வருகின்றபோது எந்தச் சட்டம் எங்களைத் தடுத்து நிறுத்த முடியும்?

தேர்தலிலே வெற்றி பெற்றவர்கள்—நமது சபாநாயகர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்களே, தலையில்லாமல் வால் ஆடக்கூடாது என்று—அந்தத் தலை இல்லாத ஒரு சட்டமன்றத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுக்குப் பதவி தேவையில்லை என்று சொன்னால் (மேசையைத் தட்டும் ஒலி) அதை எந்தச் சட்டம் மறுத்து இருக்கமுடியும் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. லா. சந்தானம்] [2001 மே 31

எனவே, இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை யெல்லாம் கொண்டு வந்த இந்த அரசைப் பாராட்டுவதோடு, ஒருவேளை நமது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் உங்களுக்கு அளிக்கப்பட்ட நேரம் சரியாகிவிட்டது, உங்களுடைய பேச்சை குறைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்வதற்கு முன்னால், என்னுடைய தொகுதியைப் பற்றியும் சிலவற்றைச் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் நான் இருக்கிறேன். இப்படி இந்த ஜனநாயக முற்போக்குக் கூட்டணியைப் பற்றிப் பேசிக்கொண்டே போனால், இன்னும் நிறையப் பேசிக்கொண்டிருக்கலாம்.

இருந்தாலும் நம்முடைய கடமையையும் ஆற்றவேண்டு மென்ற நோக்கத்தோடு நான் பேசுகிறேன், என்னுடைய உசிலம்பட்டி தொகுதி என்பது வெள்ளையர்கள் காலத்திலிருந்து அவர்கள் மூலமாகக் கொண்டுவரப்பட்ட வன்கொடுமைச் சட்டம்–C.T. Act என்று சொல்வார்கள்; Criminal Tribes Act–குற்றப் பரம்பரைச் சட்டம்–என்கின்ற கொடிய சட்டத்திற்கு ஆட்படுத்தப்பட்டு, இன்றைக்கும் கல்வி, பொருளாதாரம், இவற்றிலே முன்னேறாத நிலையிலே மிகுந்த சிரமங்களை அனுபவித்துக்கொண்டு இருக்கின்ற மக்கள் வாழ்கின்ற பகுதி. அந்தப் பகுதிக்கு ஒரு நீர்ப்பாசனத் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு 1996 நிதிநிலை அறிக்கையிலே பணம் ஒதுக்கப்பட்டது. அந்தப் பணத்திற்கு என்ன குளறுபடி நேர்ந்ததோ, என்ன தவறு நேர்ந்ததோ தெரியவில்லை. 1999—லேதான் அதற்கு விடப்பட்ட tender settle ஆகி, ஓர் ஆண்டுதான் வேலை நடந்திருக்கிறது. அதற்கு 33 கோடி ரூபாய் ஒதுக்கியதில், 12 கோடி ரூபாய்தான் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை நிறைவு செய்யவேண்டுமென்று எங்களுடைய தொகுதி மக்கள் தேர்தலின்போது என்னிடத்திலே அதை தலையாய கோரிக்கையாக வைத்திருக்கிறார்கள். இந்தத் திட்டம் ஏற்கெனவே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும்கூட அடிக்கல் நாட்டப்பட்ட திட்டம்தான். இதைத் தாங்களும் நன்கு அறிவீர்கள். நீங்கள்தான் சட்டசபை முடிந்தவுடனே நன்றி சொல்லப் போங்கள் என்று எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஆலோசனை கூறி இருக்கிறீர்கள். நான் நன்றி சொல்லச் செல்கின்ற நேரத்திலே இந்தத் திட்டத்தைச் செயல் படுத்துகின்ற ஒரு நிலையை ஏற்படுத்திக் கொடுத்தால், நாங்களும் உவகையோடு அந்த மக்களைச் சந்தித்து நன்றி சொல்கின்றவர்களாக இருப்போம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அதுபோல அஸ்வமா நதி அணைத் திட்டம். அது ஒரு பகுதி மக்களுக்கு பெரும்பாலான நீர்ப்பாசன வசதியைக் கொடுக்கிற திட்டம்.



2001 மே 31] [திரு. லா. சந்தானம்]

அதையும் தங்களிடத்திலே சொல்லியிருக்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

எங்களுக்கு கள்ளர் சீரமைப்புத் துறை என்று ஒன்று இருக்கிறது. அது இந்தப் பின்தங்கிய மக்களைக் கல்வி ரீதியாக உயர்த்த வேண்டு மென்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒன்று. கடந்த ஆட்சிக் காலத்திலேகூட, வேலைவாய்ப்பிலே எந்தெந்த இனங்கள் பின்தங்கியவர்கள், மிகவும் பின்தங்கியவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என்று குறிப்பிட்டு, இவர்களுக்கெல்லாம் அளிக்கப்பட்டிருக்கின்ற வேலைவாய்ப்பை வெள்ளை அறிக்கையாகச் சமர்ப்பித்தார்கள். அந்த அறிக்கையிலே நாங்கள் சார்ந்திருக்கின்ற மிகவும் பின்தங்கிய இனத்தைச் சார்ந்தவர்கள்தான் வேலைவாய்ப்பிலே மிகவும் பின்தங்கியிருக்கிறார்கள். ஏறக்குறைய 5,000 வேலைகளுக்கு மேலாக எங்களுக்கு வழங்கப்பட வேண்டிய வேலைகள் இன்றைக்கும் நிலுவையில் இருந்து கொண்டிருக்கின்றன. அவையெல்லாம் இந்த மிகவும் பின்தங்கிய மக்களுக்குக் கிடைப்பதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டும்.

*முற்பகல் 10–5.5*

இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளி என்பது கள்ளர் சீரமைப்புத் துறையிலே உங்கள் காலத்திலே ஏற்படுத்தப்பட்டு. நடந்து கொண்டிருந்தது; அது நடுவிலே நிறுத்தப்பட்டு விட்டது. இப்போது அந்த மக்கள் எல்லாம் அந்த ஆசிரியர் வேலைக்குச் செல்கின்ற நேரத்திலே, உரியவர்கள், அந்தப் பயிற்சியைப் பெற்றவர்கள் இல்லை என்கின்ற காரணத்தால் அந்தப் பணியிடங்கள் எல்லாம் இப்போது நிரப்பப்படமுடியாமல் இருக்கின்றன. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று இப்போது தனியாக ஆசிரியர் பயிற்சிப் பள்ளியிலே சில இடங்களை ஒதுக்குகிறார்கள். இந்த மிகவும் பின்தங்கிய வகுப்பு மக்களுக்கும் அவற்றில் ஓர் இடத்தை அதாவது, 20, 30 என ஒவ்வொரு இடங்களிலும் ஒதுக்கித் தர வேண்டும். இல்லையென்றால் பழைய முறையிலே கள்ளர் சீரமைப்புத் துறையிலே இருந்த அந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை நீங்கள் இந்த ஆண்டே மீண்டும் ஏற்படுத்தித் தரவேண்டும். நான் பலமுறை சென்ற அரசிலும் இதைக் கோரிக்கையாக வைத்திருக்கிறேன். அந்தத் துறையைச் சேர்ந்தவர்களும் இதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். தயவுசெய்து நீங்கள் அதைச் செயல்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுக்கு ஒரு மகளிர் கல்லூரி வேண்டும். பிற்படுத்தப்பட்ட பகுதி என்று சொல்லியிருக்கிறேன். அதோடு விவசாய நேரங்களைத் தவிர மற்ற நேரங்களில் எந்தத் தொழிலும் இல்லாது பாதிக்கப்பட்டிருக்கிற

[திரு. லா. சந்தானம்] [2001 மே 31

மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு தொழிற்சாலையும் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டு, வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் பெருமாட்டி அவர்கள் இந்த அவையில் நிகழ்த்திய சம்பிரதாயமான உரைக்கு நன்றி தெரிவிக்கும் திரு. பி.ஆர். சுந்தரம் அவர்கள் முன்மொழிந்த இந்தத் தீர்மானத்தில் வழிமொழிந்துப் பேசுவதற்கு வாய்ப்புப் பெற்றமைக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் அவர்கள் இந்த அவையில் தெரிவித்த கருத்துக்களின்மீது உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைப்பது மரபு, நன்றியைத் தெரிவிக்கும் முறைகளில் ஒன்று என்ற அளவுக்கு, இதைப் பாரம்பரியமாக இந்த அவையில் கடைப்பிடித்து வந்தாலும், ஆளுநர் அவர்களுடைய உரையில் அவர்கள் பயன்படுத்திய ஒரு சொற்றொடரை வைத்து, உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவிப்பதில் முனைப்புக் காட்டியிருக்கிறார்கள் என்பது எனக்கு வியப்பளிக்கிறது.

வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு திருப்பம் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மை. சிலருடைய விருப்பங்களுக்கு மாறான திருப்பங்களாகவும் இருக்கலாம். தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிற இந்த மாற்றம் மக்களுக்கு நம்பிக்கையை அளித்திருந்தாலும் சிலருக்கு இந்த மாற்றம் ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எதிரொலிகளை இந்த அவையில் நம்மால் கேட்க முடிந்தது. இந்தத் தேர்தலுக்கு முன்பு நடந்த அரசியல் எப்படி இருந்தது என்பதை நாடு நன்கு அறியும். குறிப்பாக ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று வரும்போது கொள்கை அடிப்படையிலே கருத்துக்களை எடுத்து வைத்து, எந்தக் கொள்கையாக இருந்தாலும் தாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிற கொள்கைக்கு மாறாக இருந்தால், அதனோடு முரண்படுவது கட்சி களிடையே இருக்கக்கூடிய ஒரு நிலைப்பாடு. அதிலே யாரும் குற்றம் கண்டுவிட முடியாது. ஆனால் ஒரு குறிப்பிட்ட தனிப்பட்ட நபரை மையமாக வைத்து தேர்தலுக்கு முன்பு. தமிழகத்திலே அரசியல் நடந்தது. அவர்களை எப்பாடுபட்டேனும் மறுபடியும் ஆட்சிப் பொறுப்பிற்கு வருவதை அனுமதிக்க மாட்டோம் என்ற பிடிவாத குணம் பத்திரிகைகளிலும், மக்கள் மன்றங்களிலும் வெளிப்பட்டதை நம்மால் அறிய முடிந்தது.



2001 மே 31] [திரு. ம. அப்துல் லத்தீப்]

முற்பகல் 11-00

ஒன்று தெளிவாகச் சொல்லப்பட்டது. மாண்புமிகு இன்றைய
முதலமைச்சர் அவர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் மீண்டும்
ஆட்சிப் பொறுப்புக்கு வாமுடியாது என்பது சிலருடைய நிலையாக
இருந்தது. அதற்காக அவர்கள் மேற்கொண்ட முறை, அது சரியானது
தானா, ஆரோக்கியமான அரசியலுக்கு ஏற்புடையதுதானா? இன்னும்
சொல்லப்போனால், அரசியலிலே நீண்டகாலம் இருந்து இளைய
சமுதாயத்தினருக்கு மட்டுமல்ல, ஏனைய கட்சிகளுக்கும்கூட வழிகாட்டி
களாக, எடுத்துக்காட்டுகிறவர்களாகத் திகழக்கூடியவர்கள்கூட இந்த
விஷயத்தில், நாடு ஏற்றுக்கொள்ளாத, சட்டம் ஏற்றுக்கொள்ளாத, நாகரிகம்
ஏற்றுக் கொள்ளாத, நம்முடைய பண்பாட்டிற்குப் பொருந்தாத பல
நிலைகளை மேற்கொண்டு, சட்டம் அனுமதித்தாலும், அனுமதிக்
காவிட்டாலும், நாங்கள் இன்னாரை ஆட்சிப் பொறுப்பில் மீண்டும்
அமர அனுமதிக்கமாட்டோம் என்ற ஒரு நிலைமைய மேற்கொண்டது
ஜனநாயகத்திற்குப் பேராபத்தை உருவாக்கியது மட்டுமல்ல, ஒரு பெரிய
கேள்விக்குறியையே ஏற்படுத்திவிட்டது. ஏனென்றால், சில பேர், சிலருக்கு
எடுத்துக்காட்டுகிறவர்களாக இருக்கவேண்டுமென்று நாடு விரும்புகிறது.
ஆனால், இங்கே என்ன நடந்தது என்றால், ஒரு புதிய பாரம்பரியத்தை
சிலர் ஏற்படுத்தினார்கள். அவர்களிடத்திலே இருந்து எங்களைப்
போன்றவர்கள் கூட இதனை எதிர்பார்க்கவில்லை.

இந்த அவைக்கு நாம் வருவது, குறிப்பாக இன்றுள்ள ஆட்சியினுடைய நடவடிக்கைகளைக் கண்காணிக்க; அவர்களுடைய ஆட்சிமுறையைப் பற்றி விமர்சிக்க; தவறுகள் இருந்தால் சுட்டிக்காட்ட, குறைகள் இருந்தால் போக்கிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள, இவற்றிற்காகத் தான் இந்த அவை முக்கியமாகக் கூடுகிறது. கடந்த கால ஆட்சியில் என்ன நடந்தது என்பது வரலாற்றினுடைய ஒரு பகுதியாக இருக்கலாம். நமக்கெல்லாம் படிப்பினைகளாக அமைந்துவிடலாம். கடந்த காலத்தில் நடந்த இந்தச் செயலினுடைய விளைவுகள் இவை என்ற முறையிலே அவை வருங்கால சமுதாயத்திற்குப் பயன்படுவதாக அமையாது. ஆனால், கடந்த காலத்தைப் பற்றி மட்டும் பேசிக்கொண்டு, நிகழ்காலத்தில் இவர்கள் செய்கிற குறைகளுக்கெல்லாம், கடந்த காலத்தில் நடந்தவற்றை உதாரணமாக எடுத்துச்சொல்லி, ஏன் இப்படி நடந்தது என்றால், அதற்குப் பதில் சொல்லாமல், கடந்த காலத்தில் இப்படி நடந்தது, 1946-ல் இப்படி நடந்தது; 1950-ல் இப்படி நடந்தது; 1960-ல் இப்படி நடந்தது என்றெல்லாம் கடந்த காலத்தைச் சுட்டிக்காட்டி, தன்னுடைய குறைகளை, கறைகளை மறைத்துக்கொள்வதற்கு, கடந்த காலத்தைப் பயன்படுத்தி, இந்தக் காலத்தில்

[திரு. ம. அப்துல் லத்தீப்] [2001 மே 31

இருந்த சட்டமன்றத்தை உதாசீனமாகக் கருதி, அந்தப் பணியைச் செய்வதற்கு அவர்களுக்கு வாய்ப்பளிக்காமல் நடந்த நிகழ்ச்சிகள் உண்மையிலேயே எங்களைப் போன்றவர்களுக்குப் பெருத்த வேதனையை ஏற்படுத்துவதாக அமைந்தது.

இந்த அவையிலே நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக்காட்டுகிறேன். சில மரபுகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். உண்மைகளாக இருந்தாலும் சிலவற்றை மறைக்க வேண்டும் என்பது இந்த அவையிலே நாம் காலந்தொட்டு கடைப்பிடித்து வருகிற மரபாகும். உதாரணமாக, பொது நன்மைக்கு உகந்ததல்லாத சில விஷயங்களைச் சட்டமன்றத்திலேகூட விளக்கிச் சொல்லக்கூடாது என்பது இந்த அவையிலே கடைப்பிடித்து வருகிற மரபாகும்.

Anything that is patently opposed to public policy should be withheld, even from the knowledge of the Assembly என்பது நான் மட்டும் சொல்வதல்ல, கடந்த கால வரலாற்றை நீங்கள் பார்த்தால், பெரிய, பெரிய, நம்முடைய தலைவர்கள் எல்லாம், அது பனகல் ராஜாவாக இருந்தாலும், பொப்பிலி ராஜாவாக இருந்தாலும் அல்லது தங்குத்துாரி பிரகாசமாக இருந்தாலும், ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாராக இருந்தாலும் அல்லது குமாரசாமி ராஜா காலமாக இருந்தாலும், சக்கரவர்த்தி இராஜ கோபாலாச்சாரியார் அவர்களுடைய காலமாக இருந்தாலும், பெருந்தலைவர் காமராஜர், பேரறிஞர் அண்ணா, நம்முடைய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர், ஏன் பெருமைக்குரிய நம்முடைய அண்ணன் கலைஞர் அவர்களுடைய காலத்தினுடைய ஒரு பகுதியாக இருந்தாலும், கேள்விக்குப் பதில் அளிக்கும்போது, இந்த மாதிரியான பதில்கள் சில நேரங்களிலே வரும். அரசுக்கு விவரம் தெரியும், ஆனால், அவற்றை வெளியிடுவதற்கில்லை. காரணம், அப்படி வெளியிடுவது பொது நன்மைக்கு உகந்தது அல்ல என்ற விவரம் இந்த அவையிலேயே சொல்லப்படும். ஆனால், இந்த மரபுக்கு மாறாக நான் பெரிதும் போற்றும், போற்றிய முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இந்த அவையின் மரபை மீறினார் என்பது மட்டுமல்ல, பொது வாழ்க்கையை, இப்படி களங்கமுடைய பொது வாழ்க்கை என்பதற்கு ஒரு புதிய காவியத்தையே அவர் படைத்தார் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதுதான் எனக்கு இருக்கிற ஒரே ஒரு குறை ஆகும்.

*முற்பகல் 11–05*

நான் கேட்கிறேன், உங்களுக்கு எவ்வளவோ உண்மைகள் தெரியலாம். நீங்கள் முதலமைச்சராகி விட்டீர்கள், அரசு கோப்புகள் உங்களிடத்திலே



2001 மே 31] [திரு. ம. அப்துல் லத்தீப்]

வரலாம். அந்தக் கோப்புகளையெல்லாம் நான் வெளியிடமாட்டேன் என்று நீங்கள் இரகசியக்காப்புப் பிரமாணம் எடுத்துக்கொள்கிறீர்கள். ஒவ்வொரு மந்திரியும் இரகசியக்காப்புப் பிரமாணம் எடுத்துக் கொள்கிறார்கள். கோப்பிலே இருப்பதையெல்லாம் அவையிலேயும் அம்பலத்திலேயும் சொல்வதற்குத்தான் இரகசியக்காப்புப் பிரமாணம் எடுத்துக்கொள்கிறீர்களா? (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் அந்தக் கோப்புகளிலே இருப்பவற்றைப் படித்து, எதைச் சொல்ல வேண்டும், எதைச் சொல்லக்கூடாது என்று முடிவு செய்கிற முழு உரிமை உங்களைச் சார்ந்தது. அதை யாரும் கேட்கமுடியாது. சில உண்மைகளை நீங்கள் சொல்லலாம். சில உண்மைகளை மறைக்கலாம். அது உங்களுடைய அதிகார வரம்பிற்கு விடப்படுகிறது. அரசு கோப்பிலே இருப்பது எல்லாம் நாட்டுக்குத் தெரிய வேண்டும் என்று சொன்னால் நாட்டிலே நீங்கள் இதற்கு இரகசியக்காப்புப் பிரமாணம் எடுத்துக் கொள்ளத் தேவையில்லையே? அது என்ன சம்பிரதாயமாகத்தானே போகிறது.

மாண்புமிகு நம்முடைய முன்னாள் முதலமைச்சரவர்கள் — மன்னிக்க வேண்டும்—நான் அவர்களிடத்திலே தனியாகப் பேசும்போதுகூட பல தடவை சொல்லியிருக்கிறேன். நான் சொல்கிறேன், ஒரு முதலமைச்சர் ஊழல் செய்தார்கள், அமைச்சர்கள் ஊழல் செய்தார்கள், ஐஏஎஸ் அதிகாரிகள் ஊழல் செய்தார்கள் என்பதை நாட்டு மக்கள் வரையிலே பரப்பி, இவர்கள் எல்லாம் அயோக்கியர்கள் என்ற ஒரு உணர்வை இந்த நாட்டுக்கு முதன்முதலாகத் தந்தவரே என்னுடைய அருமை அண்ணன் கலைஞர் அவர்கள் என்று சொல்வதிலே (மேசையைத் தட்டும் ஒலி) நான் மிகுந்த வேதனைப்படுகிறேன்.

இதே அவையிலே நான் பேசினேன். இதே அவையிலே இரண்டு மூன்று தடவை நான் பேசினேன். இதற்காகத்தான் இந்த சபை கூடுகிறதா? முன்னாள் முதலமைச்சர் என்ன செய்தார் என்று பேசுவதற்கா, அதை அறிவதற்கா நாங்கள் வருகிறோம். நீ என்ன செய்தாய்? உன்னுடைய விவஸ்தை என்ன (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைக் கேட்பதற்குத்தான் நாங்கள் வந்திருக்கிறோமே தவிர, பத்தாவது, ஒன்பதாவது சட்டமன்றத்திலே பேசப்பட்ட பேச்சுக்களையெல்லாம் இங்கே பேசி, ஏண்டா இப்படித் தவறு செய்தாய் என்றால், நானா செய்தேன் தவறை, அவர்களும் செய்தார்கள் என்று சொல்வது எந்த அளவிற்கு நியாயத்தின்பாற்பட்டது என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று பலமுறை நாங்கள் எச்சரித்தோம். இப்போது என்ன ஆகிவிட்டது? –"Anything that is patently opposed to public policy"–இப்போது என்ன ஆகிவிட்டது? நான் சொன்னேன். ஒரு சின்னப் பையன் சாப்பாட்டுக்கு இல்லாதவன்

திருடிவிட்டான் என்று சொன்னால், அது செய்தியாக வந்தால்கூட அதிலே ஒன்றும் தாக்கம் ஏற்படாது. சமூக தாக்கம் ஏற்படாது. நான் திருடிவிட்டேன் என்று வந்தால், லத்தீப் இந்த மாதிரி கடையிலே வந்து திருடிவிட்டான் என்று சொன்னால், எல்லோரும் யோசனை பண்ணுவார்கள் அல்லது நான் சோரம் போய்விட்டேன் என்று சொன்னால் யோசனை பண்ணுவான். என்ன சொல்வான். தாடியும் மீசையும் வைத்துக்கொண்டு இப்படி இருக்கிறான், தர்மம் பேசிக்கொண்டு அலைகிறான், அவனாடா அப்படிச் செய்தான், அவனே அப்படிச் செய்யும்போது நாங்கள் செய்வதற்கு என்ன என்று சின்னப் பிள்ளைகள் எல்லாம் நினைத்தால் அதிலே என்ன தவறு? எனவே தான், அதைச் சொல்லக்கூடாது என்பது பெரியவர்கள் வகுத்துத் தந்த ஒரு மரபாகும். அதை வெளியே சொல்லக்கூடாது. வேண்டுமானால் நீங்கள் உள்ளுக்குள்ளே நடவடிக்கை எடுத்துக்கொள்ளுங்கள். அதை விட்டுவிட்டு கடந்த காலத்தில் அவர்கள் செய்தது – The major contribution of the previous Government is, to pollute the entire administration, to pollute the entire society and to taint it with misconduct.— இந்தமாதிரியெல்லாம் செய்வது சரிதானா என்று நான் கேட்டேன். வேண்டாம் என்று சொன்னேன். ஏங்க அந்த அம்மாவைப் பற்றியே பேசுகிறீர்கள் நீங்கள். ஏங்க அவர்களைப் பற்றிப் பேசுகிறீர்கள்? உங்களைப் பற்றிப் பேசுங்கள் என்று நான் சொன்னேன். கேட்கவில்லை அவர்கள்.

கடைசியிலே என்ன பண்ணினார்கள்? ஏகப்பட்ட, இருப்பது, இல்லாதது, கேட்பதற்கே பிடிக்காத அளவிற்கு – தனிப்பட்ட அரசியல் கட்சித் தலைவர் அவர்கள், ஒரு பெண்மணியைப் பற்றிப் பேசுவதற்கு வரம்பு உண்டு. அதற்குச் சில முறைகள் உண்டு – முறை மீறி, வரம்பு மீறி, நம்முடைய பண்பாட்டுக்கு மாறாக, ஒரு பெண்மணியைப் பற்றி இப்படி ஒரு அவையில் நீங்கள் பேசாதீர்கள் என்பது எனக்கிருந்த ஒரு குறை. இப்படி நடந்ததா? என்னென்னமோ சொன்னீர்கள். கேஸ் போட்டீர்கள். ஜெயிலில் வைத்தீர்கள். எப்படி ஐயா மனசு வந்தது? (மேசையைத் தட்டும் ஒலி) நான் சொன்னேன் அவர்களை ஜெயிலில் வைக்கலாமா ஐயா என்று சொன்னேன். கேட்கவில்லை. ஜெயிலில் வைத்தீர்கள். என்னென்னமோ சொல்கிறார்கள். இங்கே எல்லாம் சொன்னார்கள். அங்கே அந்த ஜெயிலிலே என்னென்னமோ இருந்தது, பாம்பு இருந்தது, தேள் இருந்தது. பெருச்சாளி இருந்தது என்றெல்லாம் சொன்னார்கள். நான் சொன்னேன். இந்தப் பெருச்சாளிகள்கிட்டே இருந்ததைவிட நீங்கள் கொஞ்சம் நாள் அங்கே போய் இருந்தது நல்லது என்று நான் சொல்லமுடியும். (மேசையைத் தட்டும் ஒலி)





*முற்பகல் 11–10*

இவ்வளவு எல்லாம் செய்தீர்கள். அந்த அம்மாவை மிகவும் களங்கப் படுத்தினீர்கள். களங்கப்படுத்தியதற்குப் பிறகு தேர்தல் வந்தது. நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் எப்படி வரலாறு என்பதற்காக நான் சொல்கிறேன். வரலாற்றுப் பேராசிரியர்கள் இருக்கலாம், வரலாற்றுப் பெரியவர்கள் இருக்கலாம். அவர்களுடைய கருத்தோடு நான் மோதவில்லை. ஆனால், எப்படி வரலாறு, இவ்வளவு அநியாயங்கள் செய்து தனிப்பட்ட ஒரு பெண்மணியை இவ்வளவு தூரம் நீங்கள் அடக்கவேண்டும் என்று நினைத்தும்கூட தேர்தல் வந்தது. தேர்தலில் என்ன நடந்தது? எங்களுக்குத் தெரியாதா? அவர்கள் சொல்வதை எல்லாம், பத்திரிகைகளில் வருவதை எல்ாம் நாங்கள் நம்பவா? அவர்கள் வந்து வேட்புமனு தாக்கல் செய்தார்கள். எங்கள் ஊர் கிருஷ்ணகிரியில் செய்தார்கள். பிறகு இன்னொரு வேட்புமனு ஆண்டிப்பட்டியிலே செய்தார்கள். அதற்குப் பிறகு இன்னோர் இடத்திலே. சரி. அதை எதற்காகச் செய்தார்கள் என்பது அவர்களுக்கும் தெரியும். அவர்களுக்குத் தெரியாது என்பதல்ல. ஒரு இடத்தில் இல்லை, எல்லா இடத்திலும் சொல்லி வைத்திருக்கிறார்களா என்று கண்டுபிடிப்பதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு இடத்திலே இல்லை, பல இடங்களிலே எல்லா இடங்களிலும் இப்படிச் சொல்லி வைத்திருக்கிறார்களா என்று கண்டுபிடிப்பதற்காக இப்படி எல்லா இடங்களிலேயும் வேட்புமனு போட்டார்கள். எல்லா இடத்திலும் சொல்லி வைத்தமாதிரி rejected. Her candidature is rejected. இது எல்லாம் பத்திரிகையிலே வந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) பத்திரிகையிலே வந்த பிறகு தேர்தல் வந்தது. நீங்கள் யாரை விரும்பவில்லையோ அவர்கள் தேர்தலில் நிற்கவில்லை. நிற்காமல் நீங்கள் என்ன சொன்னீர்கள்? உங்களுக்கு யார் முதலமைச்சர் என்றீர்கள். உனக்கு என்ன அந்தக் கவலை? (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுக்கு யார் முதலமைச்சர் என்று சொல்லணும் என்று கேட்கிறான்யா. (மேசையைத் தட்டும் ஒலி) நிற்காமல் செய்துவிட்டு உங்களுக்கு யார் முதலமைச்சர் என்று கேட்கிறான். ஜனங்களுக்கு எல்லாம் தெரியும் இது. 'உங்களுக்கு யார் முதலமைச்சர்? நான்தான் முதலமைச்சர்.' (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்).

**திரு. பரிதி இளம்வழுதி:** உறுப்பினர் ஒருமையில் 'வாயா போயா' என்று பேசுகிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் இப்போது விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

(குறுக்கீடுகள்) நீங்கள் எதற்காகத் தலையிடுகிறீர்கள்? அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) சொல்ல வேண்டிய விளக்கத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்வார்கள். (குறுக்கீடுகள்) திரு. இளம்வழுதி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் உட்காருங்கள். திரு. லத்தீப் அவர்கள் விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் அமருங்கள்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. லத்தீப் அவர்கள் பேசுகிறபோது சொன்ன சில வார்த்தைகள் ஒருமையில் அமைந்த காரணத்தால் சிலபேர் மறுப்புத் தெரிவித்தார்கள். இருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களைக் கட்டுப்படுத்த வேண்டிய கடமை எனக்கிருக்கிற காரணத்தால் அவரவர்களுடைய பாணியிலே அவரவர்கள் பேசுவதிலே நாம் தலையிடத் தேவையில்லை. அது இங்கே பதிவாகி அந்தக் கருத்து அவருடைய கருத்து என்பதை நாடு தெரிந்துகொள்ள வேண்டும் என்ற அளவில் யாரும் குறுக்கிடக் கூடாது என்று நான் ஏற்றிருக்கிற பொறுப்பு காரணமாக கழக உறுப்பினர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒருமையில் தனிப்பட்ட முறையில் யாரையும் குறிப்பிட்டு நான் பேசவில்லை. பொதுவான கேள்வி ஒன்று பொதுவாக எழுப்பப்பட்டது பொது மக்களிடையே. எந்த பாஷையில் எழுப்பப்பட்டது என்று அவர்கள் பேசிய பேச்சைத்தான் பேசிக் காட்டினேனே தவிர பேராசிரியர் அவர்கள் அது யாரையாவது தனிப்பட்ட முறையில் குறிப்பிடும் என்று நினைத்தால் என்னைத் திருத்திக்கொள்கிறேன். பேராசிரியர் அவர்களோடு நான் எப்போதும் மோதுவதில்லை. அப்படி அது என்னுடைய நிலை. எனவே, அவர் என்ன கருத்து சொன்னாலும், அதை ஏற்றுக்கொள்ள நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அதிலே தவறு இருக்கிறது என்று பேராசிரியர் கருதுவார்களேயானால் அதைத் திருத்திக்கொள்கிறேன். அவர் என்னை பல தடவை திருத்தியவர். திருத்துவதற்கு உரிமை பெற்றவர். நான் யாரையும் தனிப்பட்ட முறையில் சொல்லவில்லை. இப்படிப் பொதுமக்கள் பேசினார்கள் என்று சொன்னேன். அவ்வளவுதான். அதிலேயும் தவறு, அது இந்த அவைக்கு ஒவ்வாதது என்று அவர்கள் கருதுவார்களேயானால் அவர்கள் சொல்வதைப்போல அந்த வார்த்தைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்வதற்கு நான் தயாராக இருக்கிறேன். எனவே கேட்டார்கள் அவர்கள். யார் முதலமைச்சர்



என்றால் அவர்தான் முதலமைச்சர், இவர்தான் முதலமைச்சர் என்று சொன்னார்கள். இவர்களைக் குறித்து, வரவே முடியாது. அவர்கள் முதலமைச்சராக வரவே முடியாது, தளபதி இல்லாத பட்டாளமாக இருக்கிறது, என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டார்கள்.

*முற்பகல் 11–15*

இந்த நிலையிலேதான் தேர்தல் களத்திலே இறங்கினார்கள். மாண்புமிகு இன்றைய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். யார் எது சொன்னாலும் நான்தான் தலைமை ஏற்று ஆட்சி நடத்துவேன் என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் சொன்னார்கள். இந்த நிலையில் எல்லோரும் தேர்தல் களத்திலே இறங்கினோம். தமிழ்நாட்டு மக்கள், சட்டப்படி தேர்தலில் நிற்க முடியாது என்று சொன்ன பிறகும்கூட சட்டம் எதுவாக இருந்தாலும் தமிழ்நாட்டினுடைய அடுத்த முதலமைச்சர் இன்னார்தான் வேண்டுமென்று திட்டவட்டமாக (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் அறிவித்தார்கள். எவ்வளவோ அவர்களைத் திசைத் திருப்ப முயன்றாலும், அவர்கள் அசையாமல் நிலையாக இருந்து புரட்சித் தலைவி ஜெயலலிதாதான் அடுத்த முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். இது வரலாறு இல்லையா? யார் முதலமைச்சர் என்று குறிக்க வேண்டுமென்று சொல்லப்பட்ட பிறகு அவர் முதலமைச்சராக ஆக முடியாது என்று முதலமைச்சராக இருந்தவர்களே சொன்னபோதுகூட, மக்கள், நீங்கள் என்ன சொல்வது நாங்கள் எடுத்த முடிவு இதுதான் (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்லியிருக்கிறார்கள். இது வரலாறு இல்லையா? தமிழகத்திலே இப்படி எப்போதாவது நடந்தது உண்டா? எனக்கும் தெரியும். 1952–லேயிருந்து நான் தேர்தலைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அரசியலிலே இருக்கிறேன். நேரடியாக தேர்தல் களத்திலே இருந்து கொண்டிருக்கிறேன். இந்த மாதிரியான ஒரு தேர்தல் எப்போதும் தமிழ்நாட்டில் நடக்கவேயில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) உண்மை நிலை, ஏதோ இங்கே பேசுவதற்காக நான் பேசவில்லை. அப்படிப் பேசமாட்டேன். ஒருகாலத்திலும் நான் பேச மாட்டேன். யாரையும் தேவையில்லாமல் புகழ மாட்டேன். தேவைப்படும்போது புகழாமல் இருக்கவும் மாட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவேதான், நான் இதை ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்கத் தேர்தலாகவே கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னொன்று அடுத்த கேள்வி. தமிழகத்தில் இப்போது கேள்வி கேட்கப்படுகிறது. சிலபேர் சில இடங்களுக்குச் சென்று இந்தக் கேள்வியை

எழுப்பியிருக்கிறார்கள். ஆளுநர் பெருமாட்டி இவர்களை அழைத்து பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்களே சரியா என்று சொன்னால், ஆளுநர் பெருமாட்டியினுடைய கருத்தில் இது ஒன்றுதான் சரி, மற்றதெல்லாம் சரியில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய கருத்து சரிதான் உன் கருத்து என்ன என்று நீங்கள் கேட்டால், என் கருத்துக்கு இங்கே இடமில்லை. ஒரே ஒரு கருத்து இந்த இடத்தில் கவனிக்கப்பட வேண்டிய கருத்து, is that of Her Excellency, the Governor of Tamil Nadu. It is her discretionary powers, discretionary powers under Article 163, Clause 2 of the Constitution of India. The Governor of the State, whoever she or he may be, is entitled to take such decision as is appropriate and warranted under the circumstances and she or he is the master of the situation. Whatever decision that she or he takes is the final and complete decision and nobody can take any cognisance of anything that happens outside her Chamber, outside the State and outside the Legislature. In this case, it is now established that immediately after the elections, . the Hon. Chief Minister of this State has taken prompt steps to convene a meeting of her newly elected Members of the Assembly and sought their mandate. Immediately their mandate was sought and the majority of the Members of the ruling party took a decision, an unanimous decision that she would be the leader of the Legislature Party of the A.I.A.D.M.K. (Thumping of desks) என்று அவர்கள் முடிவு எடுத்த பிறகு What is the thing that you expect from the Governor? (Thumping of desks) The Governor is a constitutional functionary. She is a constitutional functionary. Do you think that the Governor must reject? இவர்களுடைய முடிவை அவர்கள் reject பண்ண வேண்டுமென்று விரும்புகிறீர்களா? Come out with your statement and tell me that the Governor should reject. (Thumping of desks). அப்படிச் சொல்லுங்கள்.

**THIRU. PARITHI ELLAMVAZHUTHI:** Wait and see *(உட்கார்ந்து கொண்டு)*

**திரு. ம. அப்துல் லத்தீப்:** அண்ணாவினுடைய கருத்து என்ன கவர்னரைப்பற்றி? நம்முடைய கருத்து என்ன கவர்னர் பற்றி? ஏன் அண்ணன் கலைஞருடைய கருத்து என்ன? அவர்கள்தான்.... (குறுக்கீடு)

*முற்பகல் 11–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் உட்கார்ந்து கொண்டு பேசக்கூடாது. லத்தீப் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அதிலும் தேர்ந்த உறுப்பினர்கள், இந்த அவையிலே ஏற்கெனவே இருந்த உறுப்பினர்கள் அந்த மரபைக் கடைபிடிக்கவேண்டும்.





**திரு. ம. அப்துல் லத்தீப்:** கவர்னர் 'reject' பண்ண வேண்டுமா, இதை 'reject' பண்ண வேண்டுமா சொல்லுங்கள். நான் ஒன்றைச் சொல்கிறேன். There is a basic difference between the constitutional provision and the statutory provision. What you have offered to contain the decision of the Governor is a statutory provision. You said that Section 8(3) of the Representation of the people's Act prevents you from inviting so and so, to accept the responsibility of the governance of this country – of this State என்று தானே இருக்கிறது. Because she has been tainted or he has been tainted. That is the provision under Section 8(3) of the Representation of the People's Act. But Section 8(3) of the Representation of the People's Act is a statutory provision. When the question raised is, which is the dominating provision – whether the constitutional provision is the dominating one or the statutory provision is the dominating one, you must come out with the above answer. In my opinion, as a student of Constitutional and International Law, I submit with all sense of responsibility at my command that the constitutional provision is the dominating provision; constitution dominates the statute. But the statutory provision is subject to definite interpretation. In my view the decision of the people, the constitutional verdict, the democratic decision of the people of this State is final, complete and irrevocable. (Thumping of desks) என்ற முறையிலே. The Hon. the present Chief Minister, Sister J. Jayalalithaa was elected as the Leader of her legislature party. The Governor has no option. If she would have used her discretionary powers anything otherwise than what she had already decided, it would have spelt disaster. It will undermine the very basis of our Constitution. She has no option. Eventhough it is within the discretionary powers of the Governor என்ற முறையிலே அவர்கள் reject செய்திருந்தால் it is a dangerous trend; it is a very very dangerous trend. It would be said that " here is a Governor who has undone what has been done by the Legislature Party". That is the expression, true democratic expression that cannot be altered by the Governor.

சரி, அந்த அம்மா 'reject' பண்ணியிருக்க வேண்டுமென்று யார் சொல்கிறார்கள், சொல்லுங்கள். The matter will have to be scrutinised judicially also. I don't want to enter into that field. That will be assessed and judicially scrutinised in the appropriate period. But in my view as a student of Constitutional Law, I tell that the Governor has no discretion whatsoever so far as this matter is concerned. So, it is well within the Constitutional realm that has been decided and I congratulate the Hon. Chief Minister for her boldness;

(Thumping of desks) for her courage; for her clarity and even now I tell that the Hon. Chief Minister has such capabilities and capacities that very few people in this State can boast of having that capability. I will not praise anybody without there being any basis for that. I know my sister, Hon. Chief Minister. She is very capable; she is very able; she is very content. (Thumping of desks). She is able to face any situation, any eventuality that I have been observing without opening my mouth for the past three days. I have been very silently, keenly observing her performance as the Chief Minister. (Thumping of desks) As an elder, I praise her, I bless her. That is all I can say. (Thumping of desks)

நான் உங்களுக்குச் சொல்கிறேன், நாட்டுக்கு என்ன செய்யவேண்டும்? அதையே பேசிக்கொண்டிருக்க வேண்டுமா? என்ன முடிவுதான் செய்யப்போகிறீர்கள்? நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன், ' leaders' இருக்கிறார்கள். Hon. Chief Minister is your leader. 'Leader' என்று எப்போது இருக்கிறார்களோ, அந்த 'leader—க்கு' தெரியாமல் அவருடைய 'voice-ஐ' விட உங்களுடைய 'voice' உயரக்கூடாது. அவர்களுக்கு மட்டுமல்ல உங்களுக்கும்தான். Leader என்று ஒருவர் இருக்கும்போது அந்தத் தலைவருடைய குரலைவிட மற்றவர்களுடைய குரல் உயரக்கூடாது. ஒரேயொரு குரல் உயர்த்த வேண்டிய குரல் எது தெரியுமா? பேசாத ஒரு நபர், சட்டமன்றத்திலே பேசக்கூடாத ஒரு நபர், பேச்சாளர் என்று பெயரைப் பெற்றிருப்பவர் யார் என்றால் Speaker—தான். அந்த Speaker—தான் யாரும் பேசமுடியாத நிலையில் அவர் பேசுவார். நமக்கு அறிவுரை கூறுவார்கள். அதன்படி நாம் நடந்துகொள்ள வேண்டும். இன்றைக்கும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு யார் மீதும் பகை இல்லை.

*முற்பகல் 11–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்களே, பேசாத நபர் இப்போது பேச வேண்டிய நிலைமையில் இருக்கிறேன். நான் எப்போதும் உங்களுடைய ரசிகன் என்பது உங்களுக்குத் தெரியும். ஆனாலும், அவைத் தலைவர் என்கின்ற முறையிலே என்னுடைய கடமையை ஆற்ற வேண்டியிருக்கிறது. அரை மணி நேரம் ஆகியிருக்கிறது. பேச்சினுடைய நிறைவுக்கு வாருங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** எப்போதுமே Speaker சொல்லாமல் உட்கார்ந்து பழக்கமில்லை. நான் கேட்டுக்கொள்வது, நமக்கு collective responsibility இருக்கிறது என்பதிலே சந்தேகம் கிடையாது. இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் எப்படி இருக்கிறது என்று சொன்னால்,



ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்றால் அவர்களுக்கு இருக்கின்ற கூட்டுப் பொறுப்பை உணர்ந்து நடந்துகொள்ள வேண்டும். ஆளுங்கட்சிதான் பெரிது, எதிர்க்கட்சிக்கு ஒன்றும் முக்கியத்துவம் இல்லை என்று யாரும் கருதி, அவை நடவடிக்கைகளில் நம்முடைய முன்னோர்கள் ஏற்படுத்தித் தந்த அந்தப் பாரம்பரியத்தை, பண்பாட்டை நாம் எந்த வகையிலும் குறைத்துவிடக்கூடாது என்று உங்களிலே கொஞ்சம் பேருக்கு — பலருக்கு அல்ல. பேராசிரியர் போன்ற பெருந்தகைகள் எல்லாம் இருக்கிறார்கள். நான் அவர்களுக்கெல்லாம் சொல்லவில்லை. தயவுசெய்து இனிமேல் தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கு நாம் என்னென்ன பேச வேண்டுமோ அதையெல்லாம் பேசலாம். தயவுசெய்து இங்கே எழுந்து நிற்பது, அங்கே எழுந்து நிற்பது வேண்டாம் என்பது என்னுடைய வேண்டுகோள். அது தவறு என்று சொன்னால் அதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

அடுத்து, ஓரிரு வார்த்தைகள் தொகுதியைப் பற்றிச் சொல்லி விடுகிறேன். (சிரிப்பு) இப்போதுதான் M.L.A. ஆனேன். M.L.A. ஆன மறுநாளே எங்களுடைய tanneries–களுக்கெல்லாம் notice வந்திருக்கிறது. மாசுக் கட்டுப்பாட்டுத் துறை notice அனுப்பியிருக்கிறது. 15 நாட்களுக்குள் இதைச் செய்ய வேண்டும் என்றும் — மாசுக் கட்டுப்பாடு சுத்திகரிப்பு நிலையங்கள் – இதிலே இரண்டு மூன்று நிறுவனங்கள் இருந்துகொண்டு அலைக்கழித்துக்கொண்டிருக்கின்றன. NEERI, NAGPUR, another one is C.L.R.I. இவையெல்லாம் சேர்ந்து 3 மாசுக் கட்டுப்பாட்டு நிறுவனங்களிலிருந்து எல்லோருக்கும் notice வந்து, போச்சுடா லத்தீப் M.L.A. ஆகி 8–வது நாளே இந்த notice வந்துவிட்டது என்று சொல்லுகிறார்கள். லத்தீப்பைப் பற்றிப் பேசினால் பரவாயில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உங்களுக்கு ஒரு விளக்கம் சொல்ல எழுகிறார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் லத்தீப் அவர்கள் பேசுகின்றபோது, தன்னுடைய தொகுதியில் மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் notice அனுப்பியிருப்பதாகத் தெரிவித்தார்கள். இது எல்லோருக்கும் பொது. தவறு செய்கின்ற எந்த இடத்திலும் எங்களுடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சி நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும். அவருடைய தொகுதியில் மட்டுமல்ல, என்னுடைய தொகுதி காஞ்சிபுரத்திலே கூட அதிகமான 'dyeing factories' இருக்கின்றன. அவர்களுக்கும் notice கொடுத்திருக்கிறோம். இதிலே பாகுபாடு [illegible]

இல்லை. யார் தவறு செய்தாலும், எந்தத் தொழிற்சாலையினர் தவறு செய்தாலும், தவறு செய்தவர்கள்மீது நிச்சயமாக நாங்கள் நடவடிக்கை எடுப்போம். அதுதான் முன்னெச்சரிக்கையாக notice கொடுத்திருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நான் notice கொடுப்பதையே தவறு என்று சொல்லமாட்டேன். நிர்வாகம் என்று இருக்கிறபோது நடவடிக்கை எடுப்பார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கருணைப் பார்வைக்கு இதை வைத்து என்ன செய்யவேண்டுமென்று தயவுசெய்து பார்க்க வேண்டும். தொழிற்சாலைகள் மூடப்படக்கூடாது. முதலாளிகளைப் பற்றி கவலை இல்லையென்றாலும், தொழிலாளர்களைப் பற்றிய பெருங்கவலை எனக்கு இருக்கிறது. எங்கள் மாவட்டத்தினுடைய பொருளாதாரமே இதுதான். இதுமாதிரி திண்டுக்கல், திருச்சி, பல்லாவரம், மாதாவரம் போன்ற பகுதிகளில் எல்லாம் ஜீவநாடியாக இருப்பது இந்தத் தொழிற்சாலைகள்தான். பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் தெருவுக்கு அனுப்பப்படுவார்கள். தங்களுடைய ஆட்சியின் தொடக்கத்திலே அப்படி நடக்கக்கூடாது என்ற நல்ல எண்ணத்தில் நான் இதைச் சொல்லுகிறேன். இதுகுறித்து என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை எடுக்க வேண்டும். முன்னாள் முதலமைச்சர் அவர்கள் முத்தரப்பு மாநாடு ஒன்றை நடத்தினார்கள். நான் வேண்டுகோள் வைத்ததின்பேரில் அந்த மாநாட்டை நடத்தினார்கள். ஆனால் எந்த முடிவும் ஏற்படவில்லை, எந்தப் பலனும் ஏற்படவில்லை. தயவுசெய்து இதுகுறித்து நீங்கள் சிந்தித்து தற்போதைய இந்த notice மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டும்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தில் இருக்கின்ற அதிகாரிகள் இந்த notice—ஐ அனுப்பியிருக்கிறார்கள். அதாவது, இந்த நிறுவனங்கள், தொழிற்சாலைகள் குறிப்பிட்ட காலத்திற்குள் சுத்திகரிப்பு நிலையங்களை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் விதி. ஆகவே, அந்தச் சுத்திகரிப்பு நிலையங்களை ஏற்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குப் போதிய கால அவகாசம் தரப்பட வேண்டும். ஏற்கெனவே தேர்தல் வந்துவிட்டதால் இவற்றை நிறுத்தி வைத்திருந்தார்கள். இப்போது தேர்தல் முடிந்து M.L.A. வெற்றி பெற்ற மறுநாளே அதிகாரிகள் இந்த notice—ஐ அனுப்பியிருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்கள் முந்தைய ஆட்சியாளர்களுக்கு நெருக்கமான



அதிகாரிகள். அதனால், வேண்டுமென்றே இந்த நோட்டீசை அனுப்பியிருக்கிறார்கள் என்பது தெரிய வருகிறது. சம்பந்தப்பட்ட நிறுவனத்தாருக்கு சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்குப் போதிய கால அவகாசம் தரப்பட வேண்டும். அதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–30*

**திரு. ம. அப்துல் லத்தீப்:** முதலமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுகுறித்து வழக்கமான பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும். அவர்களை முதலமைச்சர் அவர்களே அழைத்துப் பேசினால் பயனுடையதாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து.

இன்னொன்று, கடைசியாக நான் தொகுதியைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். ஆண்டாண்டு காலமாக நான் சொல்லிக் கொள்வது: என்னுடைய தொகுதியிலே இருக்கிற வெள்ளைக்கல் அணைக்கட்டு. பற்றி மாண்புமிகு தளவாய் சுந்தரம் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். வெள்ளைக்கல் அணைக்கட்டு – எங்கள் பகுதியிலே தண்ணீரே கிடையாது. இப்போது அதைக் கட்டினால்தான் ஆம்பூர் மற்ற பகுதிகளுக்கெல்லாம் தண்ணீர் கிடைக்கும்.

இன்னொன்று, ஜவ்வாது மலையில் கிடைக்கின்ற சந்தன மரங்களை வைத்து சந்தனத் தொழிற்சாலை ஒன்று நிம்மியம்பட்டுப் பகுதியிலே ஏற்படுத்த வேண்டுமென்பது என்னுடைய நீண்ட நாள் கோரிக்கை. கடந்த கால ஆட்சியில் இருந்தவர்களும் அதைச் செய்கிறேன் என்று சொல்லியிருந்தார்கள். தயவுசெய்து அதைத் துரிதப்படுத்தி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கொஞ்சம் நேரம் அதிகமாகி இருந்தால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த அளவுக்கு நீங்கள் வாய்ப்பளித்தமைக்கு உங்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைச் செலுத்தி விடைபெறுகின்றேன், நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு முன் வரிசைத் தலைவர்கள் மட்டும்தான் என்று ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) நேற்றைய உங்களுடைய கருத்திலே எல்லா கருத்தும் சேர்த்து வந்துவிட்டது. அவற்றை எல்லாம் குறித்து வைத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஒரு தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது. திருவட்டாறு தொகுதியிலிருந்து சட்டமன்றப் பேரவைக்கு நான் நான்காவது தடவையாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறேன். அந்தத் தொகுதி மக்களுக்கு இந்த அவை வழியாக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தேர்தல் காலத்திலேயும், அதற்கு முன்னாலேயும், தமிழகத்திலே ஒரு அரசு அமையுமா, ஒரு முதலமைச்சர் பதவி ஏற்றுக்கொள்ள முடியுமா என்ற பிரச்சினைகளையெல்லாம் கிளப்பினார்கள். அந்த நேரத்திலே மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சி தெளிவாக ஒன்றைச் சொன்னது. எங்களுடைய கட்சியினுடைய அகில இந்திய பொதுச் செயலாளர் தோழர் உறர்கிஷன்சிங் சுர்ஜித் அவர்கள் பத்திரிகை நிருபர்களைச் சந்தித்த நேரத்திலே தமிழகத்திலே அடுத்த முதலமைச்சர் யாராக இருக்க வேண்டும் என்று தேர்தலிலே மக்கள் தேர்ந்தெடுக்கிற மெஜாரிட்டி கட்சி முடிவு செய்யும். அவர்கள் ஒரு தலைவரைத் தேர்ந்தெடுப்பார்கள், அந்தத் தலைவர் முதலமைச்சராக அமைவார் என்று தெள்ளத் தெளிவாகச் சொன்னார்கள். அதை இன்றைய தமிழக மக்கள் நடைமுறைப்படுத்தியிருக்கிறார்கள்.

இந்தத் தேர்தலினுடைய வெற்றி என்பதில் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கட்சி முதல் பெரும்பான்மைக் கட்சியாக அமைந்திருக்கிறது என்று ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஒன்றை இந்த நாடு நன்கு அறியும். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களும் அதை மறுக்கமாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். இந்தத் தேர்தலிலே அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலே அமைக்கப்பட்ட மதச்சார்பற்ற தேசிய ஜனநாயக அணிதான் இந்த வெற்றியைத் தேடிக் கொடுத்திருக்கிறது. அந்த அணி பலப்பட வேண்டும் என்று தமிழக மக்கள் முடிவு செய்திருக்கிறார்கள். இன்று தமிழக மக்கள் முடிவு செய்திருக்கின்ற இந்தப் பின்னணியிலேதான் அந்த அணியிலே majority





கட்சி அல்லது பெரும்பான்மைக் கட்சியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற அந்தக் கட்சியின் தலைவரை ஆட்சிப் பொறுப்பிலே அமர்த்த அழைக்க வேண்டும் என்ற தைரியம் கவர்னருக்கு ஏற்பட்டது. மக்கள் கொடுத்த அந்தத் தீர்ப்பை நிராகரிக்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் லத்தீப் அவர்கள் Constitution பற்றியெல்லாம் சொன்னார்கள்.

முற்பகல் *11–35*

ஒரு விஷயம் இந்த நாடு ஏற்றுக்கொண்டிருக்கிற உண்மை. அதாவது ஒரு சட்டப் பேரவையினுடைய majority கட்சி தேர்ந்தெடுத்திருக்கிற தலைவரை ஆளுநர் முதலமைச்சராகப் பொறுப்பேற்பதற்கு அழைத்தே ஆக வேண்டும். அழைக்கக்கூடாது அல்லது அழைத்ததற்குத் தடையாக எதுவும் அப்போது குறுக்கே நிற்கவில்லை என்பது உண்மை. ஆனால், மக்களைத் திசை திருப்புவதற்காக அப்படி இப்படி என்றெல்லாம் அதைப் பேசிக்கொள்ளலாம். அந்த நேரத்திலேதான் எங்களுடைய கட்சியினுடைய பொதுச் செயலாளர் தெளிவாகச் சொன்னார். அது, தேர்தலுக்குப் பிறகு எடுக்கப்பட வேண்டிய முடிவு. தேர்தலுக்குப் பிறகு பார்க்கப்பட வேண்டிய முடிவு. இன்று அதைப் பற்றிப் பேசி மக்களைக் குழப்ப வேண்டிய அவசியமில்லை. அந்த முறையிலே ஒரு தெளிவான நிலை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியால் ஆரம்பிக்கப்பட்ட பிறகுதான் அதுபற்றி உள்ள சிந்தனைக் குழப்பம் ஒரு அளவிற்கு முடிந்தது என்று நான் கருதுகிறேன். ஆகவேதான், ஆளுநர் அவர்களால் எடுக்கப்பட்டிருக்கிற முடிவை நான் ஆதரிக்கிறேன். அவரைப் பாராட்டிக்கொள்கின்றோம் என்று நாங்கள் தெள்ளத் தெளிவாகச் சொல்லி இருக்கிறோம்.

இந்த நேரத்திலே நான் ஒன்றைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்தத் தேர்தல் முடிவு என்பது இப்போது மக்களுடைய ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மக்கள் கொடுத்திருக்கிற தீர்ப்பு. ஏனென்றால் அன்று மக்களுடைய உரிமைகளுக்கும், உயிருக்கும், சொத்துக்கும் பாதுகாப்பு அளிப்பதற்குக்கூட சென்ற ஆட்சியாளர்கள், மத்திய மாநில அரசினர் தவறிவிட்டார்கள் என்பது வரலாற்றில் இப்போதும் குறிக்கப்பட்டிருக்கிற ஒன்று. அந்த முறையிலே நான் ஒன்றை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தத் தேர்தல் என்பது வகுப்புவாதத்திற்கும் அதேபோல மக்கள் விரோதக் கொள்கைகளைக் கடைபிடிக்கக் கூடியவர்களுக்கும் எதிராக இப்போது மக்கள் கொடுத்திருக்கிற தீர்ப்பு என்பது தெள்ளத் தெளிவு. (மேசையைத் தட்டும் ஒலி). அந்த முறையிலே அந்தத் தீர்ப்பை மக்கள் கொடுத்திருக்கிற நேரத்திலே, மக்களுக்கு என்று சில எதிர்பார்ப்புகள் உண்டு. அந்த

எதிர்பார்ப்புகளை ஓர் அளவிற்கு எடுத்துக்காட்டக்கூடிய முறையிலே ஆளுநர் உரை அமைந்திருக்கிறது என்பது என்னுடைய கருத்து.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, எல்லா விஷயங்களையும் ஆளுநர் உரையிலே சொல்லிவிட முடியாது. இப்போது இந்தக் காலத்திலே பொருத்தமாக இருக்கிற சில முக்கியமான விஷயங்கள், செய்யப்படவேண்டிய சில முக்கியமான விஷயங்கள் அதிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிற விஷயங்களிலே, சில விஷயங்களை இப்போது மக்கள் எப்படி எதிர்பார்க்கிறார்கள்; மக்கள் எப்படி அவை அமல்படுத்தப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும், அரசினுடைய கவனத்திற்கும் கொண்டு வருவதற்கு நாங்கள் முயல்கிறோம்.

இப்போது பிரதானமாக இருக்கிற பிரச்சினை என்ன? எங்கள் குமரி மாவட்டம் பற்றி ஒரு நேரத்திலே வாஜ்பாய் அவர்களும், அத்வானி அவர்களும்கூடச் சொன்னார்கள்; தங்களுடைய கோட்டை என்று. ஆனால், ஒரு பி.ஜே.பி.—க்காரர்கூட அங்கே வெற்றிபெற முடியவில்லை. ஏனென்றால், மத ஒற்றுமையும், மக்கள் ஒற்றுமையும் நிலைநாட்டப்பட வேண்டும் என்று தமிழக மக்கள், குமரி மாவட்ட மக்கள் விரும்புகிறார்கள். சில மத fanatics அங்கே சிறுபான்மையின மக்களைப் பல முறைகளிலே இம்சைப்படுத்த முயற்சித்தார்கள் என்பதை இந்த அவையிலேயே ஏற்கெனவே சுட்டிக்காட்டியிருக்கிறேன். அந்த நேரத்திலே குமரி மாவட்ட சிறுபான்மையின மக்கள் பாதுகாப்புக் குழுவினுடைய convenor அவர்கள் முதலமைச்சருக்கு அனுப்பிய கடிதத்தையும் முதலமைச்சருக்குக் கொடுத்து, இதன்மேல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டேன். ஆனால், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அப்போது காவல் துறை சிறுபான்மையின மக்களைப் பாதுகாப்பதற்குத் திராணியற்றவர்களாக இருந்தார்கள் என்பது ஓர் உண்மை. அந்த நிலைக்கு நிச்சயமாக ஒரு மாறுதலை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த மாவட்ட மக்களின் சார்பிலே பணிவன்புடன் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஒன்றை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஜாதி மத மோதல் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்ற எண்ணத்தை இந்தத் தேர்தலில் மக்கள் பிரதிபலித்திருக்கிறார்கள். துரதிருஷ்டவசமாக இன்று





காலையிலே, இந்து பத்திரிகையிலே நெல்லை மாவட்டத்திலே வீரவநல்லூரிலே ஒரு ஜாதிக் கலவரம் ஏற்பட்டு, சில பிரச்சினைகள் ஏற்பட்டு இருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. முதலிலே நாம் அதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

*முற்பகல் 11–40*

இந்த நேரத்திலே பணிவன்போடு நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட இங்கே சொன்னார்கள். அதாவது ஏற்கெனவே மாவட்டங்களுக்கோ அல்லது போக்குவரத்துக் கழகங்களுக்கோ, தலைவர்களுடைய பெயர்களைச் சூட்டுவது சம்பந்தமாக இந்த அரசு ஒரு முடிவு எடுக்கவில்லை என்று. எங்களுடைய தாழ்மையான வேண்டுகோள் என்னவென்றால், அது மூடப்பட்ட ஒரு chapter. அதைத் திறப்பதற்கான முயற்சியிலே நாம் ஈடுபட வேண்டாம். அது ஒரு pandora's box. மீண்டும் நாம் குழப்பத்தை ஏற்படுத்தும் முறையில் திறப்பதற்கு ஒப்பாகும். ஆகவே, அந்த முறையிலே ஒரு சிந்தனையே நமக்கு வேண்டாம் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு மிக முக்கியமான பிரச்சினை என்ற முறையிலே இன்றைக்கு நாம் கடைப்பிடிக்க வேண்டியது. மக்களுக்குக் குடி தண்ணீர் கிடைக்கச் செய்வதாகும். இதற்கு அரசு ஒரு Master Plan தயாரிக்க வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நாம் சுதந்திரம் பெற்று இன்றைக்கு 50 ஆண்டுகளுக்கு மேல் ஆனதற்குப் பிறகும்கூட பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் இன்னும் பல கிராமங்களுக்குப் போய்ச் சேரவில்லை என்பது மட்டுமல்ல, நமது மலைவாழ் மக்கள் இன்றைக்கு மிகப் பெரிய அவல நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். புதிய Forest சம்பந்தமான சட்டங்கள்மூலம் குளிப்பதற்கு கிணற்றை ஏற்படுத்துவதற்குக்கூட தகராறு பண்ணுகிறார்கள். சாலை வசதி அங்கே ஏற்படுத்துவதற்கு தகராறு பண்ணுகிறார்கள். மின்சாரக் கம்பி இழுப்பதற்குக்கூட தகராறு பண்ணுகிறார்கள். இந்த நாட்டிலே இருக்கிற மலைவாழ் மக்கள் என்ன, அவர்கள் மக்கள் இல்லையா? இந்திய நாட்டில் ஓட்டுரிமை உள்ள அந்த மக்களிடம் சென்று ஓட்டுப் போடுவதற்குக் கேட்கிறோம். அவர்களிடம் போய் நீ அங்கே ஓட்டுப் போடு என்று சொல்கிற நேரத்தில் இந்த நாடு இன்றைக்கு ஏற்றுக் கொண்டிருக்கிற இந்த அடிப்படை வசதிகளை அந்த மக்களுக்குச் செய்து கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [2001 மே 31

அடுத்து ஒரு மிக முக்கியமான விஷயம் பட்டா. மலைப் பகுதியிலே இருக்கிற மக்களுக்கு பட்டா வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். நம்முடைய பல கிராமங்களில் மட்டுமல்லாமல் சென்னை மாநகரத்திலேகூட பட்டா என்பது மிக முக்கியமான பிரச்சினையாக மாறியிருக்கிறது. மதுரை கிழக்குத் தொகுதியிலே இருக்கிற சில பகுதியிலே கூட இன்று அப்படிப்பட்ட பிரச்சினை இருந்துகொண்டிருக்கிறது. அதாவது, மதுரை கிழக்குத் தொகுதியிலே காமராஜபுரம், என்.எம்.ஆர்.புரம் போன்ற பகுதிகளிலே இருக்கின்ற மக்களுக்கு பட்டா கொடுக்கப் படவில்லை என்று அவர்கள் சங்கடப்படுகிறார்கள்.

இன்று மிக முக்கியமாக இந்த அரசு செய்ய வேண்டும் என்று நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புவது, இன்று மூடிக்கிடக்கும் ஆலைகளைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

நேற்றையதினம் கோவை கிழக்குத் தொகுதியிலே இருந்து வந்த உறுப்பினர் அவர்கள் அது சம்பந்தமாக ஏராளமான கருத்துகளைப் பேசினார்கள். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்கூட அது சம்பந்தமாக சில விளக்கங்களைச் சொன்னார்கள். ஆனால், நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தத் தொழில்களைப் பாதுகாப்பது என்ற நேரத்திலே சென்ற அரசுகூட இந்த அவையிலே ஒரு தீர்மானத்தைப் போட்டார்கள். சேலம் ஸ்டீல் உருக்காலையைத் தனியாருக்குத் தாரை வார்க்கக் கூடாது என்று. அது ஒரு ஏமாற்றுகிற தீர்மானமாகத்தான் இருந்ததே தவிர, அதை அரசு எந்த அளவிற்கு அமல்படுத்துவதற்கு முடிந்தது என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. இன்று அப்படிப்பட்ட பல ஆலைகள் மூடிக்கிடக்கின்றன. இலட்சக்கணக்கான தொழிலாளிகள் இன்று வாழ்க்கை நடத்துவதற்கு முடியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது.

அதேபோன்றுதான் இன்று விவசாயப் பொருட்களின் விலை வீழ்ச்சி. இந்தத் தமிழகத்தைப் பொறுத்த அளவிலே பிரதான விவசாயப் பொருட்களாக இருக்கிற கரும்பானாலும் சரி, தேயிலையானாலும் சரி, பருத்தியானாலும் சரி, இரப்பரானாலும் சரி, மிளகாயானாலும் சரி எந்தப் பொருளுக்கும் இன்றைக்கு விலை பாதுகாக்கப்படுகிற நிலை இல்லாத நிலை இருந்துகொண்டு இருக்கிறது. இதற்குக் காரணமாக இருக்கிற Globalisation-Liberalisation–லும் ஒரு தெளிவான நிலையை இந்த அரசு எடுக்க வேண்டும். இது சம்பந்தமாக ஏற்கெனவே நிதி சம்பந்தமான சில கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசிடமிருந்து இந்த மாநிலத்திற்குப் பெறவேண்டிய நிதியைப் பெற வேண்டும் என்று நாம்



2001 மே 31] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

சொல்வதுபோல, இந்தத் தொழில்களை, விவசாயிகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கு மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயலாற்றினால் சில விஷயங்களை நாம் சாதிக்க முடியும். அதற்காக மத்திய அரசை வலியுறுத்தி இந்த மாநிலத்திலே இருக்கிற மக்களுடைய ஆதரவோடு அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*முற்பகல் 11–45*

அதேபோன்று, 1998—லே B & C ஆலையைத் திறப்பது சம்பந்தமாக ஒரு settlement போடப்பட்டது. ஆனால், அது இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. சென்னை மாநகரிலே உள்ள பல ஆயிரக்கணக்கான தொழிலாளிகளுக்கு வேலை கொடுக்கிற இந்தத் B & C தொழிற்சாலையைத் திறப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இவையெல்லாம் ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிற கொள்கைகளுக்கு உட்பட்டு வருகின்ற விஷயங்கள் என்ற முறையிலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்கான நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுக்க வேண்டும்.

சிறுதொழில்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கை என்பது மிக முக்கியமான நடவடிக்கையாகத் தேவைப்படுகிறது. ஏனென்றால் பல இலட்சக்கணக்கான தொழிலாளிகள் இந்தச் சிறு தொழில்களை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதற்கான பாதுகாப்பினை ஏற்படுத்தித் தருவதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொதுத் துறை நிறுவனங்களைப் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டும். இந்த அரசு மத்திய அரசை நிர்பந்தப்படுத்தி, அதற்குரிய பாதுகாப்பினை ஏற்படுத்தித் தரும் என்று மக்கள் எண்ணுகிறார்கள். மக்கள் அதனை எதிர்பார்க்கிறார்கள். அதற்கான நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள நான் விரும்புகிறேன்.

அடுத்து, மின்சாரத்தைப் பொறுத்த அளவிலே, இதனைத் தனியார் மயமாக்குவதற்கு மத்திய அரசு எடுத்துக்கொண்டிருக்கின்ற முயற்சி, நிச்சயமாக மாநிலத்தினுடைய நலனைப் பாதுகாக்காது; மக்களுடைய நலனைப் பாதுகாக்காது. ஆகவே, மின்சாரத் துறை தனியார் மயமாக்கப்படுகின்ற முயற்சியை இந்த அரசு நிச்சயமாக ஏற்கக்கூடாது என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

நிலச் சீர்திருத்தத்தினை அமல்படுத்தவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கோலப்பன் கமிட்டி என்ற ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. தமிழகத்திலே இருக்கிற எல்லா விவசாயச் சங்கங்களும் இந்தக் கோலப்பன் கமிட்டி பரிந்துரைகள் அமல்படுத்தப்பட வேண்டுமென்று கடந்த கால அரசினிடத்திலே வலியுறுத்தின. இதை இந்த அரசு நன்கு அறியும். அந்தப் பரிந்துரைகளை அமல்படுத்துவதற்கான நடவடிக்கைகளைக் கடந்த ஆட்சி எடுக்கவில்லை. ஆயிரக்கணக்கான விவசாயத் தொழிலாளிகள் அதனால் பாதிக்கப்பட்டு நிற்கின்றார்கள் என்பதையும் இந்த அரசு நன்கு அறியும் என்று நான் நம்புகிறேன். அதற்கான நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நான் சுட்டிக்காட்ட விரும்புவது கல்வி. கல்வி சம்பந்தமான சில நல்ல நடவடிக்கைகள் ஆளுநர் உரையிலே எடுத்துச் சொல்லப் பட்டிருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது) கல்வி இன்றைக்கு சாதாரண மக்களுக்குக் கிடைப்பது அரிதானது என்ற நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஒரு பள்ளிக்கூடத்திலே அட்மிஷன் வேண்டுமென்றால்கூட, பணம் கொடுத்தால்தான் கிடைக்கும் என்ற ஓர் அவல நிலை இருந்து கொண்டிருக்கிறது. இதனால் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகளும் பயில வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுக்க வேண்டும்.

G.O.44 சம்பந்தமாக ஏராளமான கருத்துகள் இங்கே பேசப்பட்டன. நான் அந்த விஷயத்திற்குள்ளே வரவில்லை. அந்த G.O.44–ஐ மீண்டும் அமல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டும்.

எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒன்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிற சில கொள்கைகளை அமல்படுத்தினால் நல்லது. கன்னியாகுமரி மாவட்டம் இன்றைக்குத் தொழில் வளர்ச்சியிலே பின்தங்கிய மாவட்டமாக இருந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த அரசு நன்கு அறியும். அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே சுற்றுலா வளர்ச்சி என்பது ஒரு பெரிய தொழிலாக வளர்க்கப்படுவதற்கு உரிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. நான் இது சம்பந்தமான ஒரு memorandum கூட இந்தத் துறையினுடைய அமைச்சர் அவர்களிடத்தில் கொடுத்திருக்கிறேன்.





கன்னியாகுமரியில் உள்ளது திற்பரப்பு நீர்வீழ்ச்சி. இப்போது குற்றாலத்தில்கூட 4 மாதங்கள்தான் தண்ணீர் வருகிறது. ஆனால் திற்பரப்பு நீர்வீழ்ச்சியில் 12 மாதங்களும் தண்ணீர் வருகிறது. தினசரி ஏராளமான மக்கள் அங்கே வந்து கொண்டிருக்கிறார்கள். அதேபோல ஆசியாவிலேயே ஒரு பெரிய மியூசியமும் இருக்கிறது. சுசீந்திரம் போன்ற பல பிரசித்தமான கோயில்கள் இருக்கின்றன. இவையெல்லாவற்றையும் இணைத்து கன்னியாகுமரி மாவட்டத்தை ஒரு பெரிய சுற்றுலா village என்ற முறையிலேகூட அபிவிருத்திப்படுத்தினால் ஆயிரக்கணக்கான வெளிநாட்டுப் பயணிகளைக் கவரக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படும். குறிப்பாக கன்னியாகுமரி என்பது ஒரு பெரிய International Tourist Centre. அந்த International Tourist Centre–ஐ இணைத்துக் கொண்டு அதனை ஒரு பெரிய Tourist Village ஆக மாற்றி ஆயிரக்கணக்கான நபர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு இருந்து கொண்டிருக்கின்றது. (மணியடிக்கப்பெற்றது) எனவே, இதற்கு அரசு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–50

அதேபோன்று, எங்களுடைய மாவட்டத்திலே ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டிருப்பது ஒரு மருத்துவக் கல்லூரி. ஏற்கெனவே இரண்டு கோடி ரூபாய், இரண்டு ராஜ்ய சபா உறுப்பினர்களால் கொடுக்கப்பட்டு அந்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும், இந்த அரசு வருகிற கல்வியாண்டில் அதற்குத் தேவையான நிதியினைக் கொடுத்து அங்கே அந்த மருத்துவக் கல்லூரியை நடைமுறைப்படுத்தித் தர வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, அங்கேயிருக்கிற குளச்சல் Harbour. அதுசம்பந்தமான பல ஐயப்பாடுகள் இன்றைக்கு மக்களிடையிலே இருந்து கொண்டிருக்கின்றன. இன்று குளச்சல் துறைமுகம் என்பது ஒரு பெரிய Natural Harbour என்ற கருத்தை அங்கே investigation செய்த Agency கூடத் தெரிவித்திருக்கின்றது. ஆகவே, அந்த குளச்சல் துறைமுகத்தை விரிவுபடுத்துவதன் வாயிலாக அதை அமல்படுத்துவதன் வாயிலாக இன்று தமிழகத்தினுடைய வளர்ச்சிக்கு, அதிலும் குறிப்பாக தென் தமிழகத்தினுடைய – கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய வளர்ச்சிக்கு மட்டுமல்ல, தென் தமிழகத்தினுடைய – வளர்ச்சிக்கு அது ஒரு பெரிய அளவிற்கு உதவியளிக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. (மணியடிக்கப்பெற்றது) ஆகவே, அது சம்பந்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தேர்தல் சம்பந்தமான சில கருத்துகள் ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கின்றன. ஒரு கோடி மக்களுக்கு ஓட்டுப் போடுவதற்கு முடியவில்லை என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதற்குக் காரணம், ஏற்கெனவே இருந்த அரசு அதுசம்பந்தமாக ஏற்படுத்திய சில தில்லுமுல்லுகள் என்பதைக்கூட இந்த நாடு நன்கறியும். ஆகவே, நான் இன்று இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது என்னவென்றால், ஏற்கெனவே கூட்டுறவுத் துறையிலே தேர்தல்கள் நடத்தப்பட்ட காலத்திலேகூட அதேபோன்ற பல தில்லுமுல்லுகள் ஏற்பட்டன. ஆகவே, கூட்டுறவுத் துறையைப் பொறுத்த அளவிலே தேர்தலுக்கென்று ஒரு தனி தேர்தல் ஆணையம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தை நான் வலியுறுத்திக்கொள்ள விரும்புகின்றேன். இப்போது எப்படி உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடத்துவதற்கு என்று ஒரு தேர்தல் ஆணையம் அமைக்கப்பட்டிருக்கின்றதோ அதேபோன்று, கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேர்தல் நடத்துவதற்கு இந்த அரசு ஒரு தனி ஆணையம் அமைத்திட வேண்டும். செப்டம்பர் மாதத்திலே தேர்தல் நடத்துவதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதை அந்தத் தேர்தல் ஆணையமே நடத்தக்கூடிய முறையிலே ஏற்பாடு செய்தால் (மணியடிக்கப்பெற்றது) ஜனநாயகபூர்வமாகத் தேர்தல் அமையும் என்று மார்கிசிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்தை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதேபோன்று, அரசு ஊழியர்கள் சம்பந்தமாகப் பல கருத்துகள் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. அரசு ஊழியர்களைப் பொறுத்த அளவிலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். Retirement அன்றைக்கு suspend பண்ணுகிற ஒரு நடைமுறை இன்றைக்கு அரசிலே இருந்து கொண்டிருக்கின்றது. ஏராளமான அரசு ஊழியர்கள் Retirement அன்றைக்கு suspension செய்யப்படுகிறார்கள். அவர்கள் பணியிலே இருந்த காலத்திலே ஏதோ சில குறைபாடுகள் இருந்தன என்பதைச் சுட்டிக்காட்டி அவர்களை suspend பண்ணுகிறார்கள். அப்படி suspend பண்ணப்பட்ட பல ஊழியர்கள் இறந்துபோய்விட்டார்கள். அதற்குப் பிறகுகூட அவர்களுடைய retirement benefit அந்தக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்குப் போய்ச் சேராமல் அவர்களுடைய மனைவி.....

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, retirement ஆகும் நேரத்தில் அரசு ஊழியர்கள் suspend செய்யப்படும் வழக்கம் இந்த அரசில் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருத்திக்கொண்டு, கடந்த அரசில்





இருந்தது, கடந்த ஆட்சியில் இருந்தது என்று கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த அரசிலே இருக்கிறது என்று சொல்லவில்லை. அரசில் ஏற்கெனவே இருந்து கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டினேன்.

அதேபோன்று, இன்னொரு பிரச்சினை என்னவென்றால், ஒரு அரசு ஊழியர் ஒரு தவறுக்காகத் தண்டிக்கப்படுகிறார். அந்தத் தண்டனையை வைத்துக் கொண்டு அடுத்து அவருக்கு வருகிற Promotion-ஐயும் தடை செய்கிற ஒரு போக்கு இருந்து கொண்டிருக்கிறது. ஒரு குற்றத்திற்கு ஒரு தண்டனை கொடுக்கப்படலாமே தவிர, இப்படி இரண்டு தண்டனைகள் கொடுத்து அரசு ஊழியர்களைச் சித்திரவதை செய்வது என்பது ஒரு ஆரோக்கியமான...

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய பழிவாங்கும் நடவடிக்கைகள் கடந்த ஆட்சிக் காலத்தில் எடுக்கப்பட்டன. அந்தப் பழிவாங்கும் நடவடிக்கைகளை எல்லாம் திரும்பப் பெற்று நீதி வழங்குகின்ற பணியை இந்த ஆட்சிக் காலத்திலே செய்வோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–55

**திரு. ஜே.ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு மிக்க நன்றி. நான் இந்தநேரத்திலே, இன்னொன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கிற பறவா சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று நீதிமன்றம் தீர்ப்புக் கொடுத்ததற்குப் பிறகும், அவர்களுக்கு அந்த உரிமை, அதாவது மிகப் பிற்படுத்தப்பட்டோர் என்ற முறையிலே, அவர்களுக்கு அரசு வேலைகளும், அதேபோன்று அரசு சலுகைகளும் கொடுக்கப்பட வேண்டும் என்ற அந்த வேண்டுகோள், சென்ற அரசால் நிராகரிக்கப்பட்டது. இந்த அரசு அதை அனுதாபபூர்வமாகப் பரிசீலனை செய்து, அவர்களுக்கு நியாயம் வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். மீன்பிடித் தொழில் என்பது இந்த நாட்டிலே இருக்கிற ஒரு மிக முக்கியமான தொழில். அதிலே ஈடுபட்டிருக்கின்ற ஊழியர்களுக்கு, ஏற்கெனவே பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதற்கிடையிலே,

ஏற்பட்ட இப்படிப்பட்ட மனக் குமுறல்களை நீக்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஹேமச்சந்திரன் அவர்கள், இன்னும் 6 பேர் பேச வேண்டும். ஒரு நிமிடத்திலே பேசி முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் உள்ள பறவர் கிறிஸ்துவர் சமுதாயத்தைப் மிகப் பிற்படுத்தப்பட்டவர் என்று உயர்நீதிமன்றத்திலே வழங்கிய தீர்ப்பை அமல்படுத்தி, அதற்கான உரிமை வழங்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதுசம்பந்தமாக குமரி மாவட்ட ஆட்சித் தலைவர், அகஸ்தீஸ்வரம் தாலுகா தாசில்தார் ஆகியோர்மீது நீதிமன்றத்தில் வழக்கு எண் 203/2001 நிலுவையில் உள்ளது. இருவரும் அதுசம்பந்தமாக 15-6-2001-ல் நேரில் உயர்நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டிய நிலை உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. அவர்களுக்கு certificate கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)* ஒரு நிமிடத்தில் முடித்துக்கொள்கிறேன். அதாவது என்னுடைய மாவட்டத்திலே இருக்கிற ஒரு மிக முக்கியமான பிரச்சினை ரப்பர் தொழிலில் ஏற்பட்டிருக்கிற பிரச்சினை. ரப்பர் விவசாயத்திற்கும், ரப்பர் தொழிலுக்கும் ஏற்பட்டிருக்கிற பிரச்சினை. அதாவது ரப்பரினுடைய விலை, சர்வதேச கொள்கை அதாவது Globalisation, liberalisation கொள்கை காரணமாக ரப்பரின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இன்று நமது அரசுகூட அங்கே ஏறத்தாழ 15 ஆயிரம் ஏக்கர் நிலத்திலே ரப்பர் பயிரிட்டிருக்கிறது. 3 ஆயிரத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் அரசுத் துறையிலே வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அதேபோன்று, 10 ஆயிரத்திற்கும் அதிகமான ஆட்கள், ரப்பர் தொழிலிலே, தனியார் துறையிலே அதேபோன்று சிறு தொழிற்சாலைகளிலே இப்போது ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த ரப்பரைப் பயன்படுத்தி ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கலாம். அரசுக்குச் சொந்தமான 20 போக்குவரத்துக் corporations இருக்கின்றன. போக்குவரத்துக் corporation-களுக்குத் தேவையான டயர்களை உற்பத்திச் செய்வதற்கு அரசு ரப்பர் corporation-னுடைய அந்த ரப்பரைப் பயன்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டால், அந்தக் கழகத்திற்கும் உயிர் கிடைக்கும். அதிலே, அந்த மாவட்டத்திலே இருக்கிற





*(மணியடிக்கப்பெற்றது)* ரப்பர் தொழிலிலே ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும். அந்தத் தொழிலாளர்களுக்கு இரண்டு வருடங்களாகக் கொடுக்கப்பட வேண்டிய ஊதிய உயர்வுகூட கொடுப்பதற்கு முடியாத சூழ்நிலையில் விஷயங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, தனியார் தோட்டத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற ஊதியம்கூட, அரசுத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் கொடுக்கலாம் என்று ஒப்பந்தம் போட்டதற்குப் பிறகும் கொடுக்க முடியவில்லை. ஆகவே, இந்த அவல நிலையிலிருந்து அந்த மாவட்டத்திலே ரப்பர் தொழிலில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களை, அதேபோன்று ரப்பர் தொழிலிலே ஈடுபட்டிருக்கிற விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற முறையிலே நடவடிக்கைகள் அரசு எடுக்க வேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். இலட்சுமணன் அவர்கள்.

*நண்பகல் 12–00*

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அன்பான வணக்கங்கள். இந்தச் சட்டமன்றத்திலே மூத்த உறுப்பினர் மாண்புமிகு லத்தீப் அவர்கள். மாண்புமிகு லத்தீப் அவர்கள்தான் தங்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்கள். அப்பேர்ப்பட்ட மிக மூத்த, உயர்ந்த மாண்புமிகு லத்தீப் அவர்களுக்குப் பக்கத்திலேயே, புதிதாக இருக்கின்ற என்னை அமரச் செய்தமைக்கு உங்களை எவ்வளவு வேண்டுமானாலும் பாராட்டலாம். நன்றி, நன்றி எனக் கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் லட்சுமணன், இரண்டு பேரும் ஒன்று சேர்ந்துவிட்டால், நாட்டில் பிரச்சினையே கிடையாது. *(சிரிப்பு)*

**திரு. கே.என். இலட்சுமணன்:** பொதுவாக ஆட்சி புரிகின்றவர்கள், அடுத்த ஆண்டு, அதற்கு அடுத்த ஆண்டு, வருகின்ற ஐந்தாண்டுக் காலத்திலே ஆளுகின்ற கட்சி இந்தத் தமிழக மக்களுக்கு எத்தகையதொரு வளர்ச்சித் திட்டங்களையெல்லாம் கொடுத்து மக்களை நல்வாழ்வுக்கு இட்டுச் செல்லப் போகின்றது என்று திசை காண்பிப்பதுதான் கவர்னர் உரை என்று கருதப்படுகிறது. அத்தகைய கவர்னர் உரையிலே எத்தனையோ திட்டங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. சொல்லப்படாமலும் இருக்கின்றன.

இன்றையதினம் சென்னையிலே, மயிலாப்பூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தபோதிலும்கூட, குறிப்பாக சென்னையைப் பொறுத்தவரையிலே குடிதண்ணீர்ப் பிரச்சினை மிகக் கடுமையாக இருக்கின்றது. அந்தக் குடிதண்ணீர்ப் பிரச்சினை ஏன் தீர்க்கப்படாமல் இருக்கிறது என்பதையெல்லாம் ஆய்வு செய்யவேண்டும். இனியாகிலுமாவது உடனடியாக அது தீர்க்கப்படவேண்டும். சுதந்திரம் பெற்று ஏறக்குறைய 52 ஆண்டுகள் ஆன பிறகும்கூட குடிதண்ணீர்ப் பிரச்சினைகூட தீர்க்கப்படாமல் இருப்பது நமக்கு ஒரு பெரிய இழுக்காகத் தென்படுகிறது. கோகோ கோலா கம்பெனி, பெப்சி கம்பெனி இருக்கின்றன. மினரல் வாட்டர் கம்பெனிகள் எத்தனையோ இருக்கின்றன. அவர்களுக்கெல்லாம் எந்த கிராமத்திலேயும் சரி, தமிழகத்திலே எந்த மூலை முடுக்குகளிலேயும்கூட எத்தனையோ டசன் பாட்டில்கள், எத்தனையோ பேரல்கள்கூட தண்ணீர் கொடுப்பதற்கு வசதி இருக்கிறது. ஒரு தனி கம்பெனி, தமிழகத்திலே மூலை முடுக்குகளிலேயெல்லாம் மினரல் வாட்டரோ, பெப்சி கோலாவோ கொடுக்க முடிகிறது என்றால், நம்முடைய அரசாங்கம் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீரை ஏன் கொடுக்க முடியாது என்றுதான் என் மனதிலே கேள்வி எழுகிறது.

ஆக அவர்களுக்கு தண்ணீர்தான் Base. Raw material தண்ணீர்தான். சென்னையிலே தண்ணீர் வேண்டுமென்றால், லாரி 500 ரூபாய், எவ்வளவு வேண்டுமானாலும் சப்ளை ஆகிறது. ஆகவே எனக்குத் தோன்றுகிற ஐயம் தண்ணீர்ப் பிரச்சினை, குடிநீர்ப் பிரச்சினை என்பது குடிநீர்ப் பற்றாக்குறை அல்ல. விநியோகம் செய்கின்ற முறையிலே எங்கேயோ ஒரு குறை இருக்கிறது. இதை அமைச்சர் தீர விசாரித்து distribution system முழுவதையும் உடனடியாக ஒழுங்குபடுத்தி, ஏழை எளியோருக்கு குடிநீர் கொடுங்கள் என்று மிகத் தாழ்மையோடு, பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

குடியிருப்பு வசதிகள்; குடும்பத்திற்கு ஒரு வீடு கட்டித் தரப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். வரவேற்கிறோம். நம்முடைய நாட்டினுடைய பிரதமர் வாஜ்பாய் அவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே ஒரு திட்டத்தை அறிவித்து இன்றையதினம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆண்டொன்றுக்கு 10 இலட்சம் வீடுகள், அதிலே 3 இலட்சம் வீடுகள் நகர்ப்புறத்திலேயும், 7 இலட்சம் வீடுகள் கிராமங்களிலேயும் கட்டிக் கொடுப்பது என்ற திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு





செய்து நடைமுறையிலே இருந்து கொண்டு இருக்கிறது. தமிழக அரசும், இந்தத் தமிழ்நாட்டிலே அத்தகைய திட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு குடும்பத்திற்கு ஒரு வீடு மட்டுமல்ல, 3 இலட்சம் வீடுகளை, நகர்ப்புறத்திலே, சென்னை, மாநகரம், கோவை என்று இப்படி பெரிய நகரங்களிலே அந்த வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு, மத்திய அரசினுடைய ஆதரவை, உதவியை கேட்டுப் பெற்று மக்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னிப் பேச்சுதான். ஒரு விவரத்தைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். 7 இலட்சம் வீடுகள் என்று சொல்லுவது அகில இந்திய ரீதியிலா அல்லது தமிழகத்தில் மட்டுமா? அகில இந்திய ரீதியில் என்று சொன்னால், ஒரு யூனியனுக்கு எத்தனை வீடுகள் வரும் என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 12–05*

**திரு. கே.என். இலட்சுமணன்:** இந்தத் திட்டம் அகில இந்திய ரீதியிலே என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆண்டொன்றுக்கு 10 இலட்சம் வீடுகள் என்பது அகில இந்திய அளவிலே. அதில் தமிழகத்திற்கு எவ்வளவு வரவேண்டுமென்று நாம் கேட்க வேண்டுமென்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன்.

தென்னக நதி நீர் வாரியம் ஒன்றை அமைத்து விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்க வேண்டும். கோடைக் காலம் என்றால் காவிரிப் பிரச்சினை தலை தூக்கும்; மழைக் காலம் வந்தால் மறந்துவிடுவோம். நிரந்தரமாக 12 மாதங்களிலும் விவசாயிகளுக்குப் பாசனத்திற்கு நீர் கிடைப்பதற்கு இந்தத் தென்னக நதி நீர் வாரியம் கண்டிப்பாக அமைக்கப்பட வேண்டும். அதற்காக நாங்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்போம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கோதாவரி நதியை நான் பார்த்திருக்கின்றேன். கடலிலே கலக்கின்ற நேரத்திலே, விசாகப்பட்டினத்திற்கு அருகிலே ஐந்து கிலோமீட்டர் அகலத்திற்கு தண்ணீர் தடார் என்று கடலில் கலந்து விடுகின்றது. ஆனால், காவிரி கலக்கும்போது, தண்ணீர் ஒன்றுமே இல்லை. எல்லாமே நீர்ப்பாசனத்திற்கு இருக்கின்றது. மேற்குத் தொடர்ச்சி மலையிலே உற்பத்தியாகின்ற நதிகள் மேற்குப் பக்கமாக ஓடி, திடீரென்று கடலிலே கலந்து விடுகின்றன. பாசனத்திற்குப் பயன்பட முடியாது. அங்கே நிலம்

இல்லை. ஆகவே, இந்த மேற்குத் தொடர்ச்சி மலையிலேயும், கோதாவரி நதியிலேயும் 97 சதவிகிதம் தண்ணீர் கடலிலே வீணாகக் கலக்கின்றது. இந்தத் தென்னக நதிநீர் வாரியம் அமைக்கப்பட்டால், மேற்குத் தொடர்ச்சி மலையிலே உற்பத்தியாகின்ற நதிகளைத் திருப்பியும், கோதாவரி, கிருஷ்ணா காவிரியை இணைத்தும் செய்துவிட்டால் 12 மாதமும் நாம் மூன்று போகம் விளைவிக்க முடியும். பிரச்சினையே இருக்காது. ஆனால், ஒரு கற்பனையிலே, ஒரு நாளைக்கு வீணாகின்ற அந்த 97 சதவிகித நீரை தமிழகத்திலே நிற்கவைத்தால் தமிழகம் பூராவும் முழங்கால் அளவிற்கு தண்ணீர் இருக்கும். அத்தகைய தண்ணீரை, வீணாகின்ற தண்ணீரைப் பயன்படுத்திக்கொள்ள, இந்தத் தென்னக நதி நீர் வாரியம் அமைக்கப்படவேண்டும். அதற்காக நாங்களும் உங்களோடு சேர்ந்து மத்திய அரசுடன் போராடி வாங்குவதற்குத் தயாராக இருக்கின்றோம்.

நெசவாளிகள் பிரச்சினை கடுமையாக இருக்கின்றது. எப்பொழுதுமே இருக்கின்ற பிரச்சினை என்றாலும், புதிதாகப் பொறுப்பேற்றிருக்கின்ற அரசு அந்த நெசவாளிகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். இராஜாஜி அவர்களுடைய காலத்தில் 22 இரகங்கள் ஒதுக்கப்பட்டன. அந்த இரகங்களை விசைத் தறியிலே உற்பத்தி செய்ய முடியாது. கொஞ்சம் கொஞ்சமாகச் சுருங்கி 11 இரகங்கள்தான் இன்று வந்திருக்கின்றன. ஆகையினாலே, இந்த அரசு 22 இரகங்களையும் கைத்தறிக்கே ஒதுக்கீடு செய்து கைத்தறி வளர்ச்சிக்கு உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இதுதவிர, தமிழகத்திலே, எங்களுடைய கோரிக்கை — தேர்தல் அறிக்கையிலே சொல்லியிருக்கின்றோம் — அருந்தமிழிலே ஆரம்பப் பாடம்; கல்வி கற்றுக் கொடுக்க வேண்டும். ஐந்தாவது வகுப்பு வரை தமிழிலே பாடத்தைக் கற்றுக் கொடுப்பதிலே, அந்த மாணவன் சிறந்த அறிவு பெறுகின்றான். இராஜாஜி அவர்களும், இலட்சுமணசுவாமி முதலியார் அவர்களும், ஏ.எல். முதலியார் அவர்களும், இராமசாமி முதலியார் அவர்களும் இன்னும் எத்தனையோ படித்த மேதைகளெல்லாம் ஐந்தாம் வகுப்பு வரை அந்தக் காலத்திலே தமிழிலே படித்து, அதற்குப் பிறகுதான் ஆங்கில மொழியைப் படித்து பெரிய பெரிய விஞ்ஞானப் பாடங்களைப் படித்தார்கள். ஆகவே, வளர்கின்ற குழந்தைகளுடைய நுண்ணறிவு பெருகுவதற்காக அருந்தமிழிலே ஆரம்பப் பாடங்களைச் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம்.

பிற்பகல் 12–10

பெண்களுக்கு இந்த அரசில் சைக்கிள் வாங்கிக் கொடுப்பதற்கு முடிவு



செய்திருக்கின்றீர்கள்; வரவேற்கின்றோம். நம்முடைய பாரதப் பிரதமர் வாஜ்பாய் அவர்கள், தனக்கென்று குடும்பம் கிடையாது; குழந்தைகள் கிடையாது. ஆனால் நாட்டிலே இருக்கின்ற அத்தனை பெண் குழந்தைகளையும் தன்னுடைய குழந்தைகளாகத் தத்து எடுத்துக்கொண்டு — பெண் குழந்தைகள் பிறந்துவிட்டாலே கழுத்தை நெரித்துக் கொல்லுகின்ற படுபாவங்கள் இன்றைய நிலையிலும் நடக்கின்றன. அதை நிறுத்தவேண்டுமென்று, பெண் குழந்தைகள் பிறந்துவிட்டால், மாதம் ஒன்றிற்கு ஒரு ரூபாய் (மணியடிக்கப்பெற்றது) கட்டணம் என்ற அந்தப் premium கட்டிவிட்டால் 18 வயது ஆகும்போது, 25 ஆயிரம் ரூபாய் கொடுக்கக்கூடிய ராஜஸ்ரீ திட்டம் எல்லாம் கொண்டு வந்திருக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சரவர்கள்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பாரதப் பிரதமர் வாஜ்பாய் அவர்கள்தான் குழந்தைகளைப் பாதுகாப்பதில் வல்லவர் என்று புகழ்ந்து பேசிக்கொண்டு இருக்கிறார். தத்தெடுத்துக் கொண்டிருப்பதாகவும் சொல்லிக் கொண்டிருக்கிறார். இதற்கு முன்னால் 1991 ஆம் ஆண்டு முதல் 1996 வரை எங்களுடைய இதயதெய்வம், தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சராக வந்தவுடன் தொட்டில் குழந்தைகள் திட்டம் என்று (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நாட்டிலே அறிமுகப்படுத்திய திட்டத்தை, வணக்கத்திற்குரிய அன்னை தெரசா போன்றவர்கள் எல்லாம் பாராட்டியிருப்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் படிக்கவில்லை என்று நான் கருதுகிறேன்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** மிக்க நன்றி. மாண்புமிகு தலைவர் அவர்களே, பெண்களுடைய முன்னேற்றம் மிக வேகமாக இருக்கவேண்டுமென்பதிலே வாஜ்பாய் அவர்களுக்கு முன்பே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய உள்ளத்திலே ஒரு முயற்சியைச் செய்து, தொட்டில் குழந்தை திட்டத்தையும் கொண்டு வந்தார்கள் என்பது நன்கு நமக்கு நினைவில் இருக்கின்றது. மீண்டும் அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தமைக்கு பாராட்டுகின்றோம். அது தவிர, பெண்கள், பல்கலைக் கழகப் படிப்பு வரையில்கூட இலவசமாகப் படிக்கலாம். டாக்டராகவோ, இன்ஜினியராகவோ, ஆடிட்டராகவோ படிக்கலாம் என்கின்ற திட்டத்தையும் மத்திய அரசு கொடுத்திருக்கின்றது. ஆனால், தமிழகத்தில் அதைப் புரிந்துகொள்ளாமல், நிறையப்பேர் தெரிந்துகொள்ளாமல் இருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) தமிழக

[திரு. கே.என். இலட்சுமணன்] [2001 மே 31

அரசு அதனை நன்கு விளம்பரப்படுத்தி, அதைப் பயன்படுத்திட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, கடைசியிலே நம்முடைய சட்டமன்றத்திலே மிக மூத்த...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு கொண்டு வந்த திட்டத்தை ஏன் புரிந்துகொள்ளவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வருத்தப்பட்டார்கள்? அவர்களின் ஆதரவோடு ஏற்கெனவே தமிழகத்தில் ஆண்ட ஆட்சி, திராவிட முன்னேற்றக் கழகத்ினுடைய ஆட்சி. அவர்கள்தான் செய்திருக்க வேண்டும். அவர் யாரைச் சொல்கிறார் என்பது எனக்குப் புரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்கள் பேச்சை சீக்கிரம் முடித்துவிடவும்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** முடித்துவிடுகிறேன். பொதுவாக மயிலைத் தொகுதியிலே, இந்த சென்னை மாநகரத்திலே என்ன பிரச்சினை இருக்கின்றதோ அதே பிரச்சினைதான் இருக்கிறது. குடிநீர்ப் பிரச்சினை, குளங்கள் வற்றிக் கிடப்பது, சுகாதாரமின்மை, விலைவாசி ஆகியவை மிகக் கடுமையாக இருக்கின்றன. இந்த அரசு அதை உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்டமன்றத்திலே புதியவர்களாக நாங்கள் நுழைந்து இருக்கின்றோம். எங்களுக்கு இந்த அனுபவம் புதியது. இங்கே இருக்கின்ற மூத்தவர்கள் எல்லாம் எங்களுக்கு உறுதுணையாக இருந்து ஊக்கப்படுத்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊரிலே தேர்த் திருவிழா நடக்கின்றது. அந்தத் தேரினை வடம் பிடித்து பக்தர்கள் உற்சாகமாக இழுத்து வருவார்கள். உற்சாகமிகுதியால் அந்தத் தேர் ஓடி வரும். எங்கே பாதை நழுவிப்போய் விடுமோ என்று தேரைச் சரியான பாதையிலே இட்டுச் செல்வதற்கு, தேர்ச்சக்கரத்திலே சன்னக்கட்டைகள் கொடுப்பார்கள். அது முட்டுக்கட்டை அல்ல. சக்கரம் சரியான பாதையிலே செல்ல வேண்டும். அது போல தமிழக ஆட்சி என்கின்ற தேர் சரியான பாதையிலே போகவேண்டுமென்கின்ற நல்ல கருத்தோடுதான் எதிர்க்கட்சிகள் சன்னக்கட்டைகளை அப்போதைக்கப் போது கொடுத்து பாதையைத் திருத்திக் கொடுக்கின்றார்களே யொழிய



2001 மே 31] [திரு. கே.என். இலட்சுமணன்]

முட்டுக்கட்டையாக நாங்கள் இருக்க மாட்டோம். அந்த சன்னக் கட்டைகளை ஏன் கொடுக்கிறார்கள் என்றால் — உயிரைப் பணயமாக வைத்து அந்தச் சன்னக்கட்டை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் — தேர் நன்றாக ஓட வேண்டும், பாதை தவறாமல் இருக்க வேண்டும் என்பதற்காக என்று கூறி அத்தகைய வாய்ப்பினை எங்களுக்குக் கொடுக்குமாறு கூறி, மிக்க நன்றி கூறி என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12–15*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம். 5 நிமிடங்களில் முடித்துவிடவும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது பேசுவதற்கு வாய்ப்பினை நல்கிய தங்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், இதற்கு அனுமதியைப் பெற்றுத்தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கும் முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நடந்து முடிந்த 12-வது சட்டமன்றத் தேர்தலில் மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணி மகத்தான வெற்றியைப் பெற்றிருக்கிறது. இந்தத் தேர்தல் 12-வது தேர்தல். தமிழகம் ஒரு டஜன் தேர்தலைச் சந்தித்து இருக்கிறது. இங்கே ஆட்சி அமைத்து இருக்கிற, அறுதிப் பெரும்பான்மை பெற்றிருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்கள் கிட்டத்தட்ட 11 டஜன் பேர்களுக்கு மேலே தேர்ந்தெடுக்கப்பெற்று, மகத்தான முறையிலே வெற்றி பெற்றிருக்கிறார்கள். இந்தக் கூட்டணியிலே அங்கம் வகித்த கட்சி என்ற முறையில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறது. குறிப்பாக இந்தத் தேர்தலைப் பற்றிய வியூகம், கருத்துகளை எல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். இங்கே மூத்த உறுப்பினர் மரியாதைக்குரிய திரு. லத்தீப் அவர்கள் மிகச் சிறந்த முறையிலே எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதுதான் மிக முக்கியமான ஒன்று. தமிழகத்தை ஆண்டு கொண்டிருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, அவர்கள் நம்பி இருந்தது மக்கள் நலத் திட்டங்களை; அதன் மூலமாக மகத்தான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்று விடுவோம் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால், மக்கள் நலத் திட்டங்கள், திட்டங்களாக இருந்தனவே தவிர, மக்களைச் சென்றடையவில்லை. அது யதார்த்தமான உண்மையாக இருந்தது. ஆதாரபூர்வமான பல நிகழ்ச்சிகளைச் சொல்ல முடியும்.

காலம் கருதி நான் அதைச் சொல்ல விரும்பவில்லை. ஆகவே, மக்கள் சில முடிவுகளை எடுத்திருக்கிறார்கள். இது அமைதிப் புரட்சியா அல்லது என்ன மாதிரியான புரட்சி என்றெல்லாம் கணிப்புகள் வெளியிடப் பட்டன. அமைதியாக மக்கள் இருந்தார்கள். ஆனால், பதிவு நடைபெறுகிற 10 ஆம் தேதியன்று மிக அவசர கதியிலே தங்களுடைய வாக்குப் பதிவினைச் செலுத்தி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலே மகத்தான ஆட்சி அமைப்பதற்கான மிகப் பெரிய வெற்றியைத் தேடித் தந்து இருக்கிற தமிழக வாக்காளப் பெருமக்களுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே எங்களுடைய வாழ்த்துக்களை, பாராட்டுக்களை, நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறோம்.

இங்கே பல்வேறு செய்திகள் சொல்லப்பட்டன. குறிப்பாக இப்போது பொறுப்பேற்றிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தேர்தலிலே நிற்கவிடாமல் தடுப்பதைப்பற்றி மாண்புமிகு திரு. லத்தீப் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். தமிழகத்திற்கு ஒரு நீதி; கேரளத்திற்கு ஒரு நீதி வழங்கப்பட்டது. கேரளாவிலே இதே பிரச்சினைக்குரியதாக இருந்த, அமைச்சர் பொறுப்பிலே இருந்த திரு. பாலகிருஷ்ண பிள்ளை அவர்களுக்கு அந்த மாநிலத்திலே வேட்பாளராக நிற்க தகுதி வழங்கப்பட்டது. இந்திய நாட்டிற்கு ஒரே தேர்தல் ஆணையம்தான் இருக்கிறது. ஆனால், அங்கே அந்த நீதி வழங்கப்பட்டபோது, தமிழகத்திற்கு இங்கே கேட்டபோது, தேர்தல் ஆணையத்திற்கு இதிலே தலையீடு இல்லை என்று சொல்லப்பட்டது. அது ஒரு சாக்கு அல்லது தப்பித்துக்கொள்வதற்குரிய ஒரு வழியாகக்கூட எடுத்துக்கொள்ளலாம். ஆக, தேர்தல் ஆணையத்திற்குச் சம்பந்தம் இல்லை என்று சொல்வதை ஏற்றுக்கொண்டால், அந்த வேட்பு மனு நிராகரிக்கப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன என்பது உண்மையாகிறது என்பதைத்தான் இதிலிருந்து தெளிவாக நாம் புரிந்துகொள்ள முடிகிறது என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். ஆகவே, மக்கள் நல்ல தீர்ப்பை வழங்கி இருக்கிறார்கள்.

ஆளுநர் அழைக்கலாமா, அழைக்கலாமா முதலமைச்சராக வருவதற்கு என்று இங்கே கேட்கிறார்கள். ஆளுநர் விரும்புகிறாரா இல்லையா என்பதல்ல பிரச்சினை. மக்களே விரும்பி, முதலமைச்சராக நீங்கள் வாருங்கள் என்று அழைத்ததற்குப் பின்னாலே, ஆளுநர் மறுப்பதற்கான வாய்ப்பே இல்லை என்பதுதான் இதிலே இருக்கிற உண்மை. ஆகவேதான் மேதகு ஆளுநர் அவர்கள் அழைத்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி





அவர்கள் பொறுப்பை ஏற்றார்கள். இதை ஒரு விவாதப் பொருளாக மாற்றுவதற்கான முயற்சி, அல்லது திசை திருப்புவதற்கான் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதை இங்கே அழகாகச் சுட்டிக்காட்டி சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, மக்களின் தீர்ப்பை ஏற்றுக்கொள்வதுதான் இந்த நாட்டினுடைய ஜனநாயக மரபாக இருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆளுநர் உரையிலே நல்ல செய்திகள் சொல்லப்பட்டிருக்கின்றன. குறிப்பாக அந்த முன்னுரையிலேயும் சரி, பின்னாலே முடிவுரையாகச் சொல்லப்பட்டிருப்பதிலேயும் சரி, குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிற செய்தி வறுமையைப் போக்குவோம் என்பதிலே இந்த அரசு உறுதியாக ஈடுபடும் என்பதாகும். இது எல்லா ஆளுநர் உரையிலும் சொல்லப்படுகிற கருத்து என்று மேலோட்டமாகச் சொல்லலாம். ஆனால், இந்தத் தேர்தல் சொல்லியிருக்கிற தீர்ப்பு என்னவென்று பார்த்தால், சாதாரண ஏழை எளிய மக்கள், வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்ந்துகொண்டிருக்கிற மக்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், இதர பாதிக்கப்பட்டிருக்கிற மக்களுடைய வாழ்க்கைப் பிரச்சினைகளைப் பிரதிபலிப்பதாக அமைந்திருக்கிறது. அதை உணர்ந்திருக்கிற காரணத்தினாலே வறுமையைப் போக்குவதற்கு உறுதியான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று குறிப்பிட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். இன்னொரு முக்கியமான செய்தி, தமிழ் வழிக் கல்வியைப் பற்றி இங்கே பேசப்பட்டது. அதை ஓர் ஆழமான கருத்தாகச் சொல்லவில்லை என்ற காரணத்தால் அதைச் சொல்லி முடித்துவிட விரும்புகிறேன்.

*பிற்பகல் 12–20*

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் குறிப்பிட்ட நேரத்திலே நான் முடிக்க முயற்சி எடுத்திருக்கிறேன். இருந்தாலும் முக்கியச் செய்தி என்கிற காரணத்தினாலே நான் சொல்ல விரும்புகிறேன். 5-ஆம் வகுப்பு வரை தமிழ் மொழி, தாய் மொழி, கட்டாயப் பாடமாக்கப்படும் என்று சென்ற ஆட்சியில் சொல்லப்பட்டது. இந்தச் சட்டமன்றத்திலே அதைப்பற்றி நாங்கள் உரையாடியிருக்கிறோம். அழுத்தமான கருத்தைச் சொன்னோம். அதை ஒரு உத்தரவாகச் சொன்னார்களே தவிர, அதைச் சட்டமாக்காமல் விட்டுவிட்டதுதான் இன்றைக்கு இந்த நாட்டிலே ஏற்பட்டிருக்கிற மிகக் கொடுமையான நிலை. இதை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியின் மீது நாங்கள் குற்றம் சுமத்திப்

பேசியபோது ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். தாய்மொழியைப் பற்றி நாம் ஆழமாகப் பேசினால்கூட, அதை ஒரு சட்டமாக்குவதற்குரிய முயற்சிகளை எடுக்காத காரணத்தாலே ஆங்கில வழியைச் சார்ந்தவர்கள் எல்லாம் கோர்ட்டிற்குச் சென்று தடையாணை பெற்ற காரணத்தால் அது இன்றைக்கு நிலுவையில் இருக்கிறது. ஆகவே, தமிழ் வளர்ச்சிக்குரிய முயற்சிகளை எடுக்கின்ற பொறுப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டு மீண்டும் நமது தமிழ் மொழிக் கல்வியைக் கட்டாயப் பாடமாக்குவதற்கான முயற்சியை உரிய வகையிலே சிந்தித்துச் செயல்படுத்துவதற்கான, ஆக்கபூர்வமான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மகளிர் சுய உதவிக் குழுக்களைப் பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். அவை சென்ற ஆண்டு போடப்பட்ட குழுக்கள் என்ற காரணத்தாலே, தேர்தலில் ஓர் அல்லோலகல்லோலமே நடந்தது. இந்த மகளிர் சுய உதவிக் குழுவினர் எல்லோருமே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு வாக்களித்து விடுவார்கள் என்று எதிர்பார்த்தார்கள். இது என்னுடைய சொந்த அனுபவம். என்னுடைய சொந்தத் தொகுதியிலே அந்த மகளிர் குழுக்களுடைய முகவரிகளையெல்லாம் பெற்று, அவர்களையெல்லாம் தனித்தனியாகச் சந்தித்து, இந்தக் குழுக்களிலே இருக்கிறவர்கள் எல்லாம், திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணிக்கு வாக்களித்தால்தான் திரும்ப இந்த மகளிர் குழுக்கள் இருக்கும். இல்லையென்றால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்துவிட்டால் இதைக் கலைத்து விடுவார்கள் என்று ஒரு தவறான பொய்ப் பிரச்சாரத்தைச் சொல்லி, அதன்மூலமாக வாக்குகளைப் பெற்றுவிடலாம் என்று முயற்சி எடுத்தார்கள். ஆனால், அது தோற்றுப்போனது. திரும்பவும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு புதிய பொலிவைக் கொடுக்கின்ற வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) மகளிருக்கான சிறப்புத் திட்டங்கள் வழங்கப்படும் என்று சொல்லியிருப்பதை நான் வரவேற்கிறேன்.

அதை மேலும் சிறப்புத் திட்டமாக்க, கடன் வழங்குவதற்கும், மேலும் பல செலவுகளைச் செய்வதற்குமான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயக் கடனைப்பற்றி நான் சொல்லியாக வேண்டும். சென்ற சட்டமன்றத்திலேயே நான் போராடியவன் என்ற காரணத்தாலே தயவுசெய்து 2 நிமிடங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் எல்லாம்



பல கருத்துகளைச் சொன்னார்கள். அவர்கள் கவர்னர் உரையின் மீது பேசுகின்றபோது வட்டித் தள்ளுபடியையும் காணோம், அசல் தள்ளுபடியையும் காணோம், அபராத வட்டித் தள்ளுபடியையும் காணோம் என்று சொன்னார்கள். சொன்னவர்கள் யார் என்பதுதான் எனக்குப் புரியாத புதிராக இருக்கிறது. இந்தச் சபையில் 5 ஆண்டு காலமாக—நான் இப்படிச் சொல்வதற்கு மன்னிக்க வேண்டுகிறேன்—நாயாகக் கத்தியவர்களில் நானும் ஒருவன். இந்த விவசாயிகளுடைய கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்பதற்காகப் பேசினோம். இங்கே முன்னாள் அமைச்சர் பெருமக்கள் எல்லாம் அமர்ந்திருக்கிறார்கள். என்ன பதில் சொன்னார்கள். நபார்டு வங்கியைப் பற்றியே சொன்னார்கள். அவர்கள் கண்டுபிடிக்க முடியாத செய்தியைச் சொன்னார்கள். நான் கேட்டேன், அந்த நபார்டு வங்கி உலகத்திற்கு அப்பாற்பட்ட வேறு ஒரு கண்டத்திலே இருக்கிறதா என்று கூடக் கேட்டேன், அது இந்த இந்திய நாட்டினுடைய அரசுக்குச் சம்பந்தம் இல்லையா, நமது தமிழ்நாடு அரசுக்குத் தொடர்பில்லையா என்றுகூடக் கேட்டேன். அப்படிக் கேட்டபோது மறுப்பைச் சொல்லி, ஆகவே முடியாது, முன்னாள் முதலமைச்சர் அப்படிச் செய்து விட்டார் என்று குற்றத்தைச் சுமத்தினார்கள். ஆனால் இன்றைக்கு—

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் நேரத்தை நான் இப்போது எடுத்துக்கொள்வதற்கு விரும்பவில்லை. ஆனால், கடந்த ஆட்சிக்காலத்தில் இந்தப் பேரவையில் அடிக்கடி முன்னாள் முதலமைச்சர் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைக் கூறியிருக்கிறார்கள். அதே குற்றச்சாட்டை எதிர்க்கட்சியில் உள்ளவர்களும் இந்த அவையிலே கூறியிருக்கிறார்கள். அதாவது, நபார்டுக்கு நான் ஏதோ ஒரு கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டதாகத் திரும்பத் திரும்ப, உண்மைக்கு மாறான ஒரு செய்தியை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். இதுகுறித்த உண்மை நிலைமையை நாளை எனது பதிலுரையில் நான் தெளிவாக்க உள்ளேன் என்பதைத் தெரிவித்துகொள்கிறேன். அப்படி ஒரு கடிதத்தை நான் எழுதிக் கொடுக்கவில்லை என்பதை மட்டும் (மேசையைத் தட்டும் ஒலி) நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, கடன் நிவாரணத்தைப் பற்றி தயவுசெய்து திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேசாமல்

இருப்பது நல்லது. (மேசையைத் தட்டும் ஒலி) நான் உங்களுடைய பாதங்களைத் தொட்டு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுதாவது விட்டுவிடுங்கள். இதைப் பேசி, கொடுப்பதையும் கெடுத்து விடாமல் இருக்க வேண்டுமென்பதுதான் (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய பணிவான கருத்து. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நல்ல சிந்தனைக்கு வந்திருப்பதாக நான் கருதுகிறேன். அந்தச் சிந்தனையைத் திசை திருப்பிக் கெடுத்துவிட வேண்டாம் என்று மட்டும் நான் பணிவன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போல காவிரி நீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள், வரவேற்கிறேன். இந்தப் பிரச்சினையிலேகூட தண்ணீர் பெறுவதிலே இடைக்காலத் தீர்ப்பைப் பற்றிச் சில பிரச்சினைகள் இருக்கின்றன. இங்கே நம்முடைய மாண்புமிகு முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அமர்ந்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு சட்டமன்றத்திலே சொன்னார், அளவிற்கு மீறி தண்ணீரை நமது தமிழகத்திற்கு வழங்கி விட்டார்கள் என்று சொன்னார். நான் சொன்னேன், இல்லை அங்கே ஏற்பட்ட இயற்கையின் காரணத்தாலே மழை அளவு அதிகரித்திருக்கிற காரணத்தாலே நீர் வந்தது என்று சொன்னேன். அதற்கு அவர் கிண்டலாகச் சொன்னார், எல்லாமே மழைத் தண்ணீர்தான் என்று சொன்னார். ஆனால் ஒப்பந்தப்படி பெறவேண்டிய தண்ணீரைப் பெறாததன் காரணத்தால், இடையில் திறந்துவிடப்பட்டதன் காரணத்தால், நாற்றுகள் நடப்பட்டது கருகி, பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டன. விவசாயிகளுக்கு. அதையெல்லாம் போக்குவதற்கான முயற்சிகளை எடுத்து ஒரு நல்ல சிந்தனையின் அடிப்படையில் காவிரி நீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்பதோடு, இந்த ஆண்டு ஜூன் மாதம் 12 ஆம் தேதி மேட்டூர் அணையைத் திறந்து விவசாயிகளுடைய வாழ்க்கையில் மகிழ்ச்சியைத் தெளிக்கச் செய்வதற்கான முயற்சிகளையும் எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

*பிற்பகல் 12–25*

கொப்பரைத் தேங்காய் ஊழல் பற்றிப் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது, விசாரணை மேற்கொள்ள வேண்டுமென்று. கிலோ 20 ரூபாய்க்குக் கொள்முதல் செய்ய வேண்டியதை கிலோ 32 ரூபாய்க்குக் கூட்டுறவுத் துறை மூலம் கொள்முதல் செய்யப்பட்டது. ஆகவே பல கோடி ரூபாய் அதிலே ஊழல் நடந்திருக்கிறது. அதனால் விவசாயிகளுக்கு



மிகப் பெரிய பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. கேரளாவுக்கு அடுத்ததாக அதிகமாக தென்னை விளைவிக்கக்கூடிய பகுதியாக தமிழகம் இருக்கிறது. விவசாயிகள் இங்கே மிகப் பெரிய பாதிப்புக்கு ஆளாகி இருக்கிற காரணத்தாலே, தென்னை விவசாயிகளைப் பாதுகாக்கிற வகையில் நீங்கள் உரிய முயற்சிகளை எடுத்து பாதுகாப்பைச் செய்ய வேண்டுமென்றும் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லி, பல்வேறு—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பல்வேறு பிரச்சினைகளைப் பற்றிப் பல்வேறு வேளைகளில் பேசலாம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஓரே நிமிடத்தில் பேசி முடித்து விடுகிறேன். தொகுதியைப் பற்றி ஒரு செய்தி. எங்களுடைய மன்னார்குடி நகரத்திலே இருக்கிற மிக முக்கியமான பணிகளில் ஒன்று: அரசு மருத்துவமனையைப் புதிய இடத்திற்கு மாற்றி, புதிய கட்டடங்கள் கட்ட வேண்டுமென்று 1991—96 ஆம் ஆண்டிலே இன்றைய முதலமைச்சராக இருப்பவர் அன்றைய மாண்புமிகு முதலமைச்சராக இருந்தபோது, அதற்கான அனுமதி வழங்கப்பட்டும், அதைப்பற்றி 1996 ஆம் ஆண்டிலிருந்து நான் பேசிப்பேசியும் அது நிலுவையில்தான் நின்று கொண்டிருக்கிறது. ஆகவே உரிய முறையில் பரிசீலித்து அந்தப் புதிய இடத்தில் புதிய மருத்துவமனையை உருவாக்குவதற்கான முயற்சியை எடுக்க வேண்டும்.

மன்னார்குடியில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற நிலக்கரிப் படிவத்தை வைத்து அதன் மூலமாகத் தொழில் தொடங்குவதற்கான முயற்சியை எடுக்க வேண்டும், O.N.G.C. மூலமாகக் கிடைக்கிற royalty தொகையை வைத்து அந்த மாவட்டத்தில் உள்ள சாலைகளைப் பராமரிக்க முயற்சி எடுக்க வேண்டும். அதன்மூலமாகக் கிடைக்கிற மின்சாரத்தை வைத்து அந்த மாவட்டத்தில் தொழில் தொடங்க வேண்டும். மிக முக்கியமான கோரிக்கை, மன்னார்குடி பகுதியில் ஒரு வேளாண்மைக் கல்லூரி தொடங்குவதற்கான முயற்சியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 12 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் இந்தச் சட்டமன்றத்திலே ஸ்ரீபெரும்புதூர் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக வந்து,

உங்களிடையே பேசுகின்ற நல்ல வாய்ப்பினை உருவாக்கித் தந்த என்னுடைய பெருமதிப்பிற்குரிய, அருமை அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், நான் வெற்றி பெறுவதற்கு மூலகாரணமாக இருந்த புரட்சித் தலைவி அவர்களுக்கும், மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களுக்கும், மதச் சார்பற்ற கூட்டணியைச் சார்ந்த தலைவர்களுக்கும், என்னைத் தேர்ந்தெடுத்த ஸ்ரீபெரும்புதூர் வாக்காளர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் முதற்கண் உரித்தாக்கிக் கொள்கிறேன்.

இங்கே காலையிலே, எடுத்த உடனேயே கவர்னர் உரையிலே ஒன்றும் இல்லை, ஒன்றும் இல்லை, ஒன்றும் இல்லை என்றார்கள். கவர்னர் உரையிலே தொடக்கத்திலே இருந்து கடைசி வரை எதைச் சொல்வது, எதைச் சொல்லாமல் விடுவது என்று நான் தவித்துக்கொண்டிருக்கிறேன். ஒரு வேளை காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சளாக இருக்கும் என்று சொல்வதைப் போல (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்க வேண்டும் என்பதற்காக எதிர்ப்பது என்பது வேறு; இருக்கின்ற விஷயங்கள் போதவில்லை என்று கேட்பது வேறு. ஆகவே, அதை எதிர்க்க வேண்டுமென்று முடிவு செய்தவர்கள் மத்தியில் எதைச் செய்தாலும் நிறைவு ஏற்படாது என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

நடந்து முடிந்த சட்டப் பேரவைத் தேர்தல் ஒரு கனவு போலக் காட்சியளிக்கிறது. அரும்புகள் மணம் பரப்பி, ஆகாயம் மழைப் பூக்களைத் தூவி, நினைவுகளும் நிஜங்களும் வெற்றி மலர்களாகப் பூத்து இப்பேரவையை அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வெற்றிக் கூட்டணிப் பூஞ்சோலையாக மாற்றித் தந்த தமிழக மக்களுக்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிரியின் கைகளைக் கட்டிவிட்டு, களம் புகுவதற்கு அச்சப்பட்டவர்கள், வேதனைப்பட்டவர்கள், சகல ஆயுதங்களோடு வந்து, கைகள் கட்டப்பட்ட சூழ்நிலையில் இன்றைய தமிழகத்தின் முதல்வரோடு போர் தொடுத்த நேரத்திலே, அத்தனை ஆயுதங்களையும் தாங்கி ஏற்றுக்கொண்ட பிறகு அவர்களை நிராயுதபாணியாக மாற்றி தமிழகத்தினுடைய ஆட்சிக் கட்டிலிலே அமர்ந்திருக்கிற புரட்சித் தலைவி அவர்களுடைய வீரத்தை நான் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–30*

கடந்த 5 ஆண்டு காலம் என்பது ஒரு சோதனையான வரலாறு; உண்மையிலேயே, ஒரு பெண் அரசியலுக்கு வரக்கூடாதா? வந்ததற்குப்



பிறகு நடத்தும் கொடுமைக்கு ஒரு எல்லை இருக்க வேண்டாமா? அந்த எல்லையையும் தாண்டி நீங்கள் நடத்திய அந்தக் கொடுமைகளுக்குத்தான் இப்போது தமிழகத்து மக்கள் ஒட்டுமொத்தமாகப் (மேசையைத் தட்டும் ஒலி) பதில் கொடுத்திருக்கிறார்கள். இந்த வெற்றி நீங்கள் செய்த, அவர்களைப் படுத்திய கொடுமையால் வந்தது. 5 ஆண்டு காலத்திலே நீங்கள் செய்த சாதனைகள் நித்தம் நித்தம் கோர்ட்டுக்குப் போவது, கோர்ட்டிலே இருந்து வருவது, வண்டியிலே ஏறுவது. அவருக்குத் துணையாக ஒருவர் இருந்தார் என்ற காரணத்தாலே அவரைச் சிறைச்சாலைக்குள்ளே அனுப்பி, இரண்டு இரண்டு படிக்கட்டாகத் தாண்டிப் போன அந்த அம்மையார், strecher–லே தூக்கிக்கொண்டு வரக்கூடிய ஒரு நிலைமையிலே, நீதிபதியை வைத்து பெயரைச் சொல்லிக் கூப்பிட்டு அவர் 'ஆ' என்றவுடனே முதல் வரியையும், கடைசி வரியையும் படித்துவிட்டு charge sheet கொடுத்தாகிவிட்டது என்று சொன்ன நிலையில், உங்களுடைய மிகப் பெரிய ஜனநாயக வித்தையை தமிழகத்து மக்கள் பார்த்துக்கொண்டுதான் இருந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பதில்தான் இது. சொன்னார், பலம் வாய்ந்த கூட்டணி, நீங்கள் அவரைக் கூப்பிட்டுக்கொண்டீர்கள், இவரைக் கூப்பிட்டுக்கொண்டீர்கள், அப்படிக் கூப்பிட்டுவிட்டீர்கள், இப்படிக் கூப்பிட்டுவிட்டீர்கள் என்று. அவரும் ஒரு ராஜ்யசபா மெம்பராக இருந்தவர்தான், மாண்புமிகு உறுப்பினர். பலம் வாய்ந்த கூட்டணி என்று தெரிந்ததற்குப் பிறகும் எப்படி நீங்கள் வெற்றி பெறுவீர்கள் என்று நினைத்தீர்கள்? தேர்தலில் தில்லுமுல்லு நடத்தி எப்படியாவது வெற்றி பெற்று விடலாம் என்ற எண்ணத்திலே நீங்கள் தேர்தல் களத்திலே நின்றீர்களா? (மேசையைத் தட்டும் ஒலி) எப்படிப் பலம் வந்தது? உங்களிடம் இருந்த பம்பரத்தையே நீங்கள் ரோட்டிலே விட்டுச் சுற்றவிட்டீர்களே? ஒவ்வொன்றாக, ஒவ்வொன்றாக நீங்கள் கழற்றிவிட கழற்றிவிட, அவர்கள் மிகச் சாதுர்யமாகக் காய்களை நகர்த்தி ஒவ்வொன்றாக உங்களிடமிருந்து பறித்து, மிகப் பலம் வாய்ந்த கூட்டணியை அமைத்தார்கள் என்று சொன்னால் அவர்களுடைய புத்திசாலித்தனத்தைப் பாராட்டுவதற்கு உங்களுக்கு முடியவில்லையென்றாலும்கூட..... (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு என்னைப் பொறுத்தமட்டிலே நான் மிகப் பணிவாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன், அவர்கள் புத்திசாலி.

தமிழகத்திலே இப்போது அவர்கள் முதல் மந்திரியாக வந்திருக்கிறார்கள். அவர்களுடைய திறமையைப் பாராட்டுவோம், நமக்குத் தேவையானவற்றை எடுத்துச் சொல்வோம். எரிகின்ற விளக்காக

இருந்தாலும், ஒரு குச்சி போதும், சுடர் விடுகின்ற விளக்காக இருந்தால். அப்படி ஒரு எதிர்க்கட்சியாக நாம் இருந்து தமிழகத்து மக்களுக்கு பயன்படக்கூடிய காரியங்களை நாம் நிச்சயமாகச் செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சேவை மனப்பான்மையைச் செயல்வடிவம் ஆக்கி, எல்லாப் பயனும் கிட்டுகின்ற வகையில் அதிகார வர்க்கம் ஈடுபாட்டுடன் செயல்பட்டால் பணமும் போட்ட திட்டங்களும் காலவிரயமின்றி நிச்சயமாகச் செயல்படுகின்ற அந்தவொரு நல்ல நிலைமை ஏற்படும். அப்போது தமிழகத்து மக்களுக்கு அதனாலே பலன் ஏற்படும்.

M.P.-க்களுக்கு தொகுதி மேம்பாட்டு நிதி கொடுக்கிறார்கள். அவர்கள் இரண்டாம் கட்டம். முதல் கட்டம் என்பது தமிழக அரசாங்கம்தான். இங்கேயிருக்கின்ற மக்களுடைய அத்தியாவசிய பிரச்சினைகள், குடிநீர்ப் பிரச்சினை, மின்சாரப் பிரச்சினை, கல்வி, மருத்துவம், விவசாயம், சிறுதொழில் போன்றவற்றில் மாநில அரசுடன் நெருங்கிச் செயல்படுவதுதான் நடுவண் அரசு. நிதி ஒதுக்கீட்டைக் கூடுதலாகவும், விரைவாகவும் கொடுக்கவேண்டும். அதற்கு இங்கே இருக்கின்ற பி.ஜே.பி. தலைவர் சொன்னார், உங்களோடு சேர்ந்து நான் போராடுவேன் என்று. அதை உண்மை என்று நினைத்து, நமக்கு நிறைய நிதி கிடைப்பதற்கு அவர்கள் போராடவேண்டுமென்று இந்த மாமன்றத்தின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

நீர்வழிப் போக்குவரத்தைக் குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் முடிக்க நடுவண் அரசை வற்புறுத்தவேண்டும். நானும் படித்த காலத்திலிருந்து பார்க்கிறேன், சேது சமுத்திரக் கால்வாய், சேது சமுத்திரக் கால்வாய், சேது சமுத்திரக் கால்வாய் என்று. ஏதோ மாதத்திற்கு 50,000, வருடத்திற்கு 5 இலட்சம் என்று சொல்கிறமாதிரி, தலைமுறை தலைமுறையாக நீங்கள் திட்டங்களை நீட்டிக்கொண்டே போகாமல் விரைவுபடுத்த வேண்டு மென்று, மத்திய அரசுக்கு அம்மையார் அவர்கள் தெரிவிக்கவேண்டும். மத்திய அரசாங்கம் தமிழகத்திலே நிறைவேற்றவுள்ள திட்டங்களை விரைவிலே நிறைவேற்றவேண்டுமென்று வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆரம்பப் பள்ளிகளில் 100 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்று இருப்பது, இரு ஆசிரியர்கள் என்று இருப்பது, குழந்தைகள் காப்பகங்கள் போல இருக்கின்றது. அதனை மாற்ற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.



பிற்பகல் 12–35

மாணவர்களுடைய புத்தகச் சுமையைக் குறைக்க முன்னாள் இயக்குநர் திரு. சிவஞானம் கமிட்டியினுடைய அறிக்கையைப் பரிசீலிக்க வேண்டுகிறேன். L.K.G. குழந்தைகள் எல்லாம் மூட்டை மூட்டையாகப் புத்தகங்களைத் தூக்கிக்கொண்டு போவதைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது. அவர்களுக்கு முதுகு கூன் விழுந்துவிடுகிறது. இப்போது மராட்டிய மாநிலம் இதற்கு ஒரு வழிமுறை கொண்டு வந்திருக்கிறது. சட்டம் என்று சொல்லவில்லை. நடைமுறையில் கொண்டு வந்திருக்கிறார்கள், கல்வி வழி நடைமுறை. அந்த நடைமுறையிலே ஒரு கிலோவுக்குள்ளாகத்தான் குழந்தைகள் புத்தகங்களை எடுத்துப் போக வேண்டும் என்ற நடைமுறையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அம்மையார் அவர்கள் அதனையும் கருத்தில்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

பள்ளிக் கல்வித் துறையிலே, அதிகார துஷ்பிரயோகமும், ஊழலும் மலிந்ததாக தினசரி, வார ஏடுகளில் தொடர்ந்து ஆதாரங்களுடன் எழுதி வந்திருக்கிறார்கள். கடந்தகால அரசு காட்டிய மெத்தனத்தை இந்த அரசு காட்டக்கூடாது. தவறுகள் களையப்படவேண்டும். தவறு செய்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பள்ளிக்கல்வி இயக்குநர், 5 ஆண்டுகளாக இருக்கின்றார். அவரைப் பொறுத்தமட்டில் அவர் மேலே, பி.எம்.எஸ். மெட்ரிக்குலேஷன் பள்ளி வழக்குப் போட்டிருக்கிறது. கோர்ட்டும் அவருக்குத் தண்டனை கொடுத்திருக்கிறது. இயக்குநர், தன்னை சட்டத்திற்கு அப்பாற்பட்டவர் என எண்ணிச் செயல்படுவது நீதித் துறையையே அவமதிப்பதாகும் என்று தீர்ப்பு வழங்கிய பின்னரும் அவர் அந்தப் பொறுப்பிலே தொடர்கிறார். இதனை எதிர்த்து நடத்திய போராட்டத்தில் இன்றைய சபையினுடைய நாயகர் அவர்கள்கூட கலந்துகொண்டு, தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்; இல்லையென்று சொன்னால், நாங்கள் ஆட்சிக்கு வந்தால், அந்த நடவடிக்கையை நிச்சயம் எடுப்போம் என்று அவர்கள் மத்தியிலே அவர்கள் கூறியிருக்கிறார்கள். நான்கூட எனக்குத் தெரிந்த சில விவரங்களை அமைச்சரவர்களுக்கு இந்த மாமன்றத்திலே கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (உறுப்பினர் சில தாள்களை மாண்புமிகு கல்வி அமைச்சரிடம் கொடுத்தார்)

பதினான்காம் லூயி மன்னன் மக்களைப் பற்றிக் கவலைப்படாமல் பெரிய அரண்மனை கட்டினானாம், கஜானாவைக் காலி செய்து.

அதற்குப் பிறகு அந்த மக்கள் பிரச்சினைகள் தாங்காமல் மாண்டு மடிந்து போனார்களாம். அதுமாதிரி, குடிநீருக்கு மக்கள் தவிக்கிறார்கள் என்று—பாவம்—முன்னால் ஆண்டவர்களுடைய கூட்டணிக் கட்சிக்காரர் சொன்னார். குடிநீருக்கு மக்கள் தவிக்கும்போது மேம்பாலம் உயர் செலவில் கட்டி முடித்தார்கள். மேம்பாலம் கட்டியவர்கள் உயர்ந்தார்கள். ஏழை வாழ்வு படு பாதாளத்திற்குப் போயிருக்கிறது என்பதுதான் உண்மை. குழாயில் தண்ணீர்....

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் பேசும்போது கல்வித் துறையிலே பல குறைபாடுகள் களையப்பட வேண்டும் என்றும், அதிலே சில ஊழல்கள் நடைபெற்று இருக்கின்றன, அவற்றின்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்கள். இதை கவர்னருடைய உரையிலே நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் விளக்கமாகத் தந்திருக்கிறார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கல்வித் துறையானது சீரமைக்கப்படும் என்றும், அதுமட்டுமல்லாமல், அவர் சொன்னதுபோல், குழந்தைகள், ஆசிரியர் என்ற அந்த ratio குறித்து விரைவிலே நாங்கள் ஒரு திட்டத்தைக் கொண்டுவருவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதையும் புரட்சித் தலைவி அவர்கள் செய்ய இருக்கிறார்கள்.

அதோடு பணிமாற்றத்தில் பல அதிகார முறைகேடுகள் முன்னர் இருந்த ஆட்சியிலே நடைபெற்று இருந்ததாக உறுப்பினர் ஒரு பத்திரிகையிலே, தினபூமியிலே வந்த செய்தியைத் தந்திருக்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரையில், எங்கள் புரட்சித் தலைவியைப் பொறுத்தவரையில், எதுவும் transparent–ஆக இருக்க வேண்டும் என்ற, ஒளிவுமறைவு இல்லாமல் செயல்படவேண்டும் என்ற உத்தரவை எங்களுக்குத் தந்திருக்கிறார்கள். குறிப்பாக, எங்கள் கல்வித் துறையிலே ஆசிரியர் பெருமக்களுக்கு எந்தவிதமானதொரு பிரச்சினையும் உருவாகாது. அப்படி உருவாகாமல் பார்த்துக்கொள்வதற்கு எங்களுக்குக் கட்டளை யிட்டுச் செயல்பட வைத்திருக்கிறார்கள். அதன்படி, பத்திரிகையிலே சமீபத்திலேகூட புரட்சித் தலைவி அவர்கள் சொன்னது போல, இந்த நடப்பு ஆண்டிலே, கல்வி ஆண்டிலே, ஆசிரியர் மாற்றம் என்பதில் எந்த அரசியல் தலையீடும் இருக்காது. அமைச்சரான என்னுடைய தலையீடும் இருக்காது, எங்களுடைய M.L.A.–க்களுடைய தலையீடும் இருக்காது. எங்களுடைய கட்சி நண்பர்களுடைய தலையீடும் இருக்காது. அதேபோல, மற்ற கட்சி நண்பர்களுடைய தலையீடும் இருக்காமல்





பார்த்துக் கொள்வதற்காக, ஒளிவுமறைவு இன்றி நடைபெறுவதற்கான counselling என்ற ஒரு புதிய முறையை புரட்சித் தலைவி அவர்கள் அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள். அதன்படி எந்தெந்த ஆசிரியர்கள் தங்களுடைய மாற்றங்களை விரும்புகிறார்களோ, அந்த மாற்றங்களை எல்லாம் அதிகாரிகளிடம் அவர்கள் தங்களுடைய மனுக்களாகத் தரலாம். அதிகாரிகளும், எந்தெந்த இடங்கள் காலியாக இருக்கின்றன என்பதையெல்லாம் பட்டியல் போட்டு வெளியிட இருக்கிறார்கள். அந்த முறையிலே எல்லோரையும் ஒரே நாளிலே அழைத்து, எல்லோரையும் வைத்து, அந்த மாறுதல் ஆணை வெளிப்படையாகச் செய்யப்படும். இதில் சில guidelines எல்லாம், நெறிமுறைகள் எல்லாம் வகுக்கப்பட்டிருக்கின்றன. அந்த நெறிமுறைகளையெல்லாம் அப்படியே செயல்படுத்தும்படி புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். ஆகவே, இதில் எந்தவிதமான அரசியல் தலையீடும் இருக்காது. ஆசிரியர்களுக்கும் தொல்லை இருக்காது. நேர்மையாக நடக்கின்ற முறையிலே பார்த்தீர்கள் என்றால், அவர்களுக்கு seniority அடிப்படையில் criteria வைத்து, அதன்படி செயல்படுத்தப்படும். ஆகவே, இந்த அரசு ஒரு ஊழலற்ற, நல்ல ஒரு ஆட்சியை நடத்துவதற்காகத்தான் வந்திருக்கிறது. முன்பு யார் ஊழல் செய்திருந்தாலும், அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுப்பதற்குத் தயங்கமாட்டோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–40*

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். குழாயிலே தண்ணீரே வருவதில்லை. ஆனால் சேவைக்கு வரி போடுகிறார்கள். முன்னாலே போட்டிருக்கிறார்கள். குடிநீரிலே சாக்கடைத் தண்ணீர் கலக்கிறது. அதனால், அம்மையார் அவர்கள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். நாம் வந்து ஒரு மாதம்கூட ஆகவில்லை. அதனாலே இதற்கு மேலேதான் அந்தக் காரியங்களையெல்லாம் எடுத்துச் செய்யவேண்டும் என்றாலும்கூட, எங்கெங்கெல்லாம் குடிநீரிலே சாக்கடை நீர் கலக்கிறதோ, அதைத் தாங்கள் கவனத்திலே கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பூண்டி நீர்த்தேக்கத்திலே சென்னை மருத்துவமனையிலே இருக்கின்ற துணிகள், அழுக்குத் துணிகள், மற்ற எல்லாத் துணிகளும் அங்கே துவைக்கப்படுவதாக பத்திரிகையிலே பார்த்தோம். ஆனால், அன்றையதினம், அந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது என்று

தெரியவில்லை. இனி வருங்காலத்திலாவது, பாதுகாக்கப்பட்ட குடிநீரை நீங்கள் தரவிருக்கிறீர்கள். அதுபோன்ற எந்தவிதமான சம்பவங்களும் ஏற்படாதவண்ணம் நாம் விழிப்போடு இருக்கவேண்டுமென்று நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, கிருஷ்ணா தண்ணீர். அது நான் J.J.T.V.-யிலேதான் பார்த்தேன். ரொம்ப நன்றாக இருந்தது அந்த விளம்பரம். கிருஷ்ணா, கிருஷ்ணா என்று ஓடிப்போய் இரண்டு தவலையிலே எடுத்துக்கொண்டு வந்தால் அடியிலேதான் இருக்கிறது தண்ணீர். மேலே காணோம். அதை எடுத்து சொட்டு சொட்டாக அந்தக் குழந்தைக்குக் கொடுத்தார் பாருங்கள், அந்தக் குழந்தை சப்புக்கொட்டி அதைச் சாப்பிட்டது பாருங்கள், உண்மையிலேயே கிருஷ்ணா தண்ணீர் வந்த மாதிரியே இருந்தது. ஒரு தாய் கிருஷ்ணா, கிருஷ்ணா என்று மேலோகத்துக்குப் போகிற நிலையிலே இருக்கிறவருக்கு இரண்டு சொட்டுத் தண்ணீர் தருகிறார். ஒருத்தர் கேட்கிறார், சொட்டு சொட்டாகத்தான் வருமா கிருஷ்ணா தண்ணீர் என்று. அதைத்தான் நானும் இங்கே கேட்கிறேன். சொட்டு சொட்டாகத் தவணை முறையிலேதான் கிருஷ்ணா தண்ணீர் வருமா? (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குத்தானா அருமைத் தலைவி இந்திரா காந்தியும், புரட்சித் தலைவரும், ராமகிருஷ்ண ஹெக்டேயும், என்.டி.ராமாராவும், வசந்தாதா பட்டேலும், கருணாகரனும் சேர்ந்து இன்றைக்கு இருக்கிற நேரு ஸ்டேடியத்திலே அன்றைக்குத் திட்டம் தீட்டினார்கள், ஒப்பந்தம் போட்டார்கள்? எவ்வளவு ஒப்பந்தம், 236 கோடி ரூபாய்தானே? இன்றைக்கு ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலே கொடுத்திருக்கின்றோம். தண்ணீர் வந்தபாட்டைக் காணோம். சப்புக் கொட்டுகின்ற ஒரு நிலைமை இருக்கிறது. இதில் நிச்சயமாக நாம் ஏமாற்றப்பட்டுவிடக்கூடாது. நாம் நிச்சயமாக, கவனமாக இருக்க வேண்டும். அதை முழுக்க முழுக்க பெற்றுத் தருவதிலே புரட்சித் தலைவி அவர்கள் சொன்னால் போராடுவதற்கு நாங்களும் தயாராக இருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

குடும்பத்துக்கு ஒரு வீடு. வீட்டு வரி உயர்வால் வாடகை உயர்ந்துவிட்ட காரணத்தால், நடுத்தர மக்கள் தவித்துக்கொண்டிருக் கிறார்கள். உங்களுடைய நல்ல மனதிற்கு, குடும்பத்திற்கு ஒரு வீடு என்று சொன்னால், அடுத்த ஐந்து வருடம் இல்லை, அதற்குப் பின்னாலேயும் ஆட்சி உங்களுக்கேதான் என்று நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



லாரி விபத்துக்கள் தடுக்கப்படவேண்டும். பக்தவத்சலம் அவர்கள் முதல்வராக இருக்கும்போது அவர்கள் ஒரு திட்டம் சொன்னார்கள். நிர்வாகத்திலே அந்தக் குறிப்பு இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். இரண்டு மணிக்கு மேலே, நடு ராத்திரி இரண்டு மணிக்கு மேலே, நான்கு மணிக்குள்ளே, அந்த இரண்டு மணிநேரம் லாரிகள் ஓடக்கூடாது. ஏனென்றால், உங்களையே லாரி வைத்துத்தான் அடிக்கப் பார்த்தார்கள். அதனால் இந்த லாரிகளை விடக்கூடாது. இரண்டு மணி நேரத்துக்கு அவர்களுக்கு ஓய்வு கொடுத்தால் நல்லது.

அடுத்து, மருத்துவம். General Hospital ஏற்கெனவே விழுந்துவிட்டது. முன்னாள் அமைச்சர்கூட இருக்கிறார். இரண்டாவது மாடி விழுந்து கீழே இருந்தவர்கள் எட்டு, பத்து பேர் செத்துப்போய்விட்டார்கள். (குறுக்கீடு) Patients எல்லாம் Helmet போடவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் சொல்லுகின்றார். மருத்துவமனைகளில் கழிப்பறைகள் சரியாகவே இல்லை. இது இங்கே இப்படியிருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் மருத்துவமனை இருக்கிறது. மாவட்டத்திலே மருத்துவமனை இருக்கிறது. கல்லைக் கண்டால் நாயைக் காணோம், நாயைக் கண்டால் கல்லைக் காணோம். மருந்து இருந்தால் டாக்டர் இல்லை, டாக்டர் இருந்தால் மருந்து இல்லை. அப்புறம் என்ன நமக்கு நாமே திட்டம்— மன்னிக்க வேண்டும் வருமுன் காப்போம் திட்டம்—தலைவலி வருவதற்கு முன்னாலேயே மாத்திரை தூக்கிப் போட்டுக்கொள்வது. ஜுரம் வருவதற்கு முன்னாலேயே மாத்திரை போடுகிற மாதிரி...

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் யசோதா அவர்கள் பேசுகின்றபோது, வருமுன் காக்கும் திட்டத்தைப் பற்றிப் பேசினார்கள். அதன் தொடர்ச்சியாக ஏற்கெனவே அவர் இங்கே தெரிவித்த ஒன்றை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அதாவது, சென்னைக்குக் குடிநீர் வழங்குகிற ஏரி பூண்டி நீர்த்தேக்கம் ஆகும். சென்னை பொது மருத்துவமனையிலிருந்து வீசப்படுகிற அழுக்குத் துணிகள், பேண்டேஜ் துணிகள் போன்றவற்றையெல்லாம், அந்தப் பூண்டி ஏரியிலே துவைக்கிறார்கள் என்று பத்திரிகையில் செய்தி பார்த்ததாக இங்கே மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தார்கள். அந்தக் கால கட்டத்தில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் இங்கே அமர்ந்திருக்கிறார்கள். இதுகுறித்து அவர் விளக்கம் அளிக்க முடியுமா? அது நாட்டு மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதால் அறிய விரும்புகிறேன்.

[2001 மே 31

*பிற்பகல் 12–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆற்காடு வீராசாமி அவர்கள் இன்றைக்குப் பேசுகிறார்கள். பேசுகின்றபோதுகூட விரிவான விளக்கம் தரலாம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்று உரையாற்ற இருக்கிறேன். என் பேச்சிலே எல்லாவற்றையும் தெரிவிப்பேன்.

**திருமதி டி. யசோதா:** ஆக, இந்த வருமுன் காப்போம் திட்டத்தின் மூலமாக, நிச்சயமாக, இருக்கின்ற மருத்துவமனைகளைக் கவனிக்க வேண்டும். முதலாவதாக மருத்துவமனைகளுக்குள்ளே மருந்து இருந்து, டாக்டர்கள் இருந்தால் அது அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்குப் பயன்படும், (மணியடிக்கப்பெற்றது) Sir, time ஆகவில்லை. அம்மா வருகிறார்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசியதிலே நேரம் போனதே தெரியவில்லை. (குறுக்கீடு) அவ்வளவு சுவையாகப் பேசினீர்களே தவிர, நேரம் போய்விட்டது.

**திருமதி டி. யசோதா:** நான் முக்கியமான பிரச்சினைக்கே வரவில்லை. என் தொகுதிக்கே இன்னும் வரவில்லை. இது முக்கியமானது. அம்மாவுக்கும் தெரியவேண்டும், உங்களுக்கும் தெரியவேண்டும், நாட்டிற்கும் தெரியவேண்டும். முக்கியமானது என்னவென்றால் இந்த சென்னை எழும்பூரிலே, ஒரு பிரசவ ஆஸ்பத்திரி இருக்கிறது. அந்தப் பிரசவ ஆஸ்பத்திரி – நான் அடித்தளத்தில் இருக்கிற மக்களைப் பற்றிச் சொல்கிறேன், Sir, நான் வேறு எதுவும் சொல்லவில்லை – அங்கே பிரசவத்திற்கு Labour Ward–க்குக் கொண்டுபோய் விடுகிறார்கள். இன்றைக்கு பணக்காரர்கள் யாரும் அங்கே போவதில்லை. ஏழைகள்தான் போகிறார்கள். 3 புடவைகள் கொடுக்கவேண்டும். பொம்பளைங்க விஷயம் அதனால்தான் சொல்கிறேன். 3 புடவைகள் கொடுத்தாக வேண்டும். நல்ல புடவை ஒன்றை அந்த அம்மா எடுத்துக்கொள்ளும். எடுத்துக்கொண்டு போகட்டும். 2 புடவைகளிலே பெண்களுக்கு ஏற்படும் அதிகமான உதிரப் போக்கைத் தடுப்பதற்காக delivery ஆகக்கூடிய பெண்களே எடுத்துப் போகவேண்டிய கட்டாயம் இப்போது இருக்கிறது. ஏனென்றால் அங்கே பஞ்சு இல்லை. பஞ்சு கொடுக்க முடியவில்லை. Cotton இல்லை. என்ன? வருமுன் காத்து என்ன பிரயோஜனம்?



2001 மே 31] [திருமதி டி. யசோதா]

பிரசவத்திற்குப் போகும் பெண்களுக்கே பஞ்சு கொடுக்க முடியவில்லை. புடவை எடுத்துக்கொண்டு போகவேண்டிய நிலைமை இருக்கிறது. பிறக்கின்ற குழந்தை ஆண் குழந்தையா அல்லது பெண் குழந்தையா என்று வெளியிலே வந்து சொல்வதற்கு, ஆண் குழந்தையாக இருந்தால் 100 ரூபாய், பெண் குழந்தையாக இருந்தால் 50 ரூபாய் இப்போதுகூட அது நடைமுறையில் இருந்துகொண்டிருக்கிறது.

கண் ஆஸ்பத்திரி இருக்கிறது. அந்தக் கண் ஆஸ்பத்திரிக்குப் போய் கண் ஆபரேஷன் பண்ணும்போது இவ்வளவு சிறிய துணி, அந்தத் துணிதான் கண்ணிற்கு வைத்துக் கட்டுகிறார்கள். கறுப்புத் துணி, பச்சைத் துணி. இப்போது அது இல்லை. ஒரு மெல்லிய நூல். அந்த நூலுக்கு இரண்டு பேப்பர், கறுப்பு பேப்பர். அது நடுவிலே தொங்குகிறது. படபடவென்று அடிக்கும்போது வெளியிலே இருக்கிற வெளிச்சம் அந்தக் கண்ணிலே பட்டு, கண் கெட்டுவிடுகிறது. இதெல்லாம் மிகவும் சாதாரணமான விவகாரங்கள்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இந்தக் குறைபாடுகள் இன்னும் தொடர்வதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதை உறுப்பினர் தயவுசெய்து திருத்திக்கொள்ள வேண்டும். ஒரு காரியத்தைச் செய்தும் கெடுக்கலாம், செய்யாமலும் கெடுக்கலாம். நம்முடைய மாண்புமிகு முன்னாள் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கோபித்துக்கொள்ளக் கூடாது. அவர் இந்தத் துறையைப் பொறுத்தவரையில், எதுவுமே செய்யாமல் இந்தத் துறை கெட்டுப்போவதற்கு வழி வகுத்துவிட்டார் என்ற வருத்தமான செய்தியை இங்கே நான் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மருத்துவத் துறையைப் பொறுத்தவரையில் என்ஜின் இல்லாத ஓர் இரயிலாக அது ஓடிக்கொண்டிருந்தது. இப்போது புரட்சித் தலைவி . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ஜின் இல்லாவிட்டால் ஓடவே முடியாதே?.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** என்ஜின் டிரைவர். டிரைவர் இல்லாத என்ஜினைப் போல அந்த இரயில் ஓடிக்கொண்டிருந்தது. மாண்புமிகு முன்னாள் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்பது மன்ற உறுப்பினர்களுக்கும் தெரியும், நாட்டு மக்களுக்கும் நன்றாகத் தெரியும்....

[2001 மே 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விளக்கத்தை மட்டும் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** ஒரே ஒரு விஷயம். அம்மையப்பனைச் சுற்றி வந்தாலே உலகத்தைச் சுற்றி வந்ததாகிவிடும் என்று விநாயகர் அம்மையப்பனை வலம் வந்து பழத்தைப் பெற்றதைப் போல, நாட்டினுடைய முன்னாள் முதலமைச்சராக இருந்த அவருடைய தலைவரைப் பாதுகாத்தால் போதும் நாட்டு மக்களுக்கு நல்ல சுகாதாரம் கிடைத்துவிடும் என்று எண்ணி அவர் செயல்பட்டாரோ என்று தெரிய வில்லை. இந்தத் துறையைப் பற்றி இப்போதுதான் நாங்கள் கணக்கிலே எடுத்துக் கொண்டிருக்கிறோம். நம்முடைய அருமைத் தலைவி மாண்புமிகு முதலமைச்சர், புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் துறையைப் பொறுத்தவரையில், அக்கறை எடுத்துக்கொண்ட காரணத்தினாலே, கவர்னர் உரையிலே அனைவருக்கும் நல்ல சுகாதாரம் கொடுப்பேன் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, இந்தத் துறை சீர்படுத்தப்படும். இனி இந்தக் குறைகள் நிச்சயமாகக் களையப்படும், போக்கப்படும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் சார்பிலே நான் மன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா அவர்களே, உங்களுடைய தொகுதியைப் பற்றிய பிரச்சினைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே எழுதிக்கொடுத்துவிடுங்கள். நிச்சயமாகக் காரியங்கள் நடக்கும். மற்றவற்றை மட்டும் பேசி முடியுங்கள்.

**திருமதி டி. யசோதா:** ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் செம்மலை அவர்கள் எடுத்துக்கொண்ட நேரத்தை மாண்புமிகு உறுப்பினர் யசோதாவுக்குக் கொடுக்கப்பட்ட நேரத்திலிருந்து கழித்துவிடுமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்களுக்குச் சொல்லிக்கொள்வதெல்லாம் —என்னுடைய தொகுதி பற்றியே வந்துவிடுகிறேன். அம்மாவுக்கு நன்றி சொல்ல வேண்டும். ஆதிதிராவிட மக்களுக்கு 44–வது எண் ஆணையை அமல்படுத்துவதற்காக நான் உங்களுக்குத் தலை வணங்கி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதை இரத்து செய்துவிட்டு, தைரியமாக அரிசன மக்கள் மத்தியிலே வந்து ஓட்டு கேட்க வந்தார்கள் பாருங்கள். அதையும் நாம் பாராட்டவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)





*பிளஸ் 1, பிளஸ் 2* மாணவிகளுக்கு சைக்கிள் கொடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறீர்கள். நீங்கள் கொடுக்கிறதை, நல்ல மனதோடு கொடுக்க வந்திருக்கிறீர்கள். கெடுக்க வேண்டும் என்பதற்காகவே, ஊரில் இருக்கிற எல்லோருக்கும் கொடுங்கள் என்று சொல்கிறார்கள். வெறும் சட்டியை வைத்துவிட்டுப் போய் இருக்கிறார்கள். ஒன்றும் இல்லை இங்கே. இருப்பதில் ஏதோ அரிசன மக்களுக்குச் செய்ய வேண்டுமென்ற நல்ல மனதோடு சைக்கிள் கொடுத்தால் இருக்கிற எல்லோருக்கும் நீங்கள் கொடுங்கள் என்று சொல்லி அரசாங்கப் பள்ளிக்கூடத்தில் படிக்கிறவர்களுக்கு மட்டும் இல்லை, தனியார் பள்ளிக்கூடத்தில் படிக்கிறவர்களுக்கும் கொடுங்கள் அப்படியென்று சொல்லக்கூடிய–

**திரு. ஆஸ்டின்:** நான் பேசுகின்றபோது அரிசன மாணவர்களுக்கும் கொடுங்கள் என்றுதான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களைப் பற்றி மட்டும் சொல்லவில்லை. பொதுவாகத்தான் அவர்கள் சொல்கிறார்கள்.

**திருமதி டி. யசோதா:** உறுப்பினர் பெயரைச் சொன்னேனா? ஏன் என் நேரத்தை வீணாக்குகிறார்கள்? அம்மா, சமத்துவபுரம் என்று சொல்வது எந்தப் பணத்திலேயிருந்து கட்டினார்கள்? ஆதிதிராவிடர் நலத் துறையினுடைய பணத்திலேயிருந்துதான் கட்டியிருக்கிறார்கள். ஆனால், அதிலே எல்லா சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். கரசங்கால் பகுதியிலே சமத்துவபுரத்திற்கு ஒரு வீட்டிற்கு 20 ஆயிரம் ரூபாய் வாங்கிக்கொண்டு—இது படப்பை யூனியனில் இருக்கிறது—சுங்கு வார்சத்திரத்தில் இருக்கிறவர்களைக் கொண்டு வந்து அங்கே வைத்திருக்கிறார்கள். அதை உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வந்துவிடுகிறேன்.

இரண்டாவது, ஹூண்டாய் கம்பெனி. எங்கள் ஏரியாவில்தான் இருக்கிறது. அதிலே சிப்காட் மூலமாக நிலம் வாங்கியிருக்கிறார்கள். அந்த ஜனங்கள் கண்ணீரும் கம்பலையுமாக இருக்கிறார்கள். ஒரு ஏக்கரா *30* ஆயிரத்திற்கு வாங்கியிருக்கிறார்கள். ஆனால், அரசாங்கம் அந்த ஹூண்டாய் கம்பெனிக்கு கொடுத்திருப்பது *5*–லிருந்து *8* இலட்சம் ரூபாய்க்கு ஒப்பந்தத்தில்தான் கொடுத்திருக்கிறார்களே தவிர sale deed இல்லை. அந்த ஹூண்டாய் கம்பெனி இன்றைக்கு அங்கே நடந்துகொண்டிருக்கிறது என்று சொன்னால், அங்கே இருக்கிற இரண்டாயிரம் ஏக்கர் நிலம் பட்டா நிலம். அத்தனையும், கிட்டத்தட்ட *1500* ஏக்கர். இன்னும் சில புறம்போக்கு நிலங்கள். அங்கே நிலத்தை

[திருமதி டி. யசோதா] [2001 மே 31

விற்றவர்கள் கோர்ட்டுக்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களிடத்திலே உறுதிமொழி சொன்னேன். அம்மாதான் ஆட்சிக்கு வருவார்கள். நீங்கள் கவலையே படாதீர்கள். வந்தவுடனே உங்களுக்கு ஏதாவது நான் இதுபற்றி சட்டமன்றத்தில் பேசி நிவாரணம் தேடிக் கொடுக்கிறேன் என்று சொன்னேன். அதன்படி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவந்துவிட்டேன்.

ஒரு கண்ணாடி கம்பெனி இருக்கிறது. பிரெஞ்ச் கம்பெனி. அவர்களிடம் போய் நான் சொன்னேன். நீங்கள் இவ்வளவு பெரிய கம்பெனி வைத்து நடத்துகிறீர்களே பல ஊர்களை நீங்கள் தத்து எடுக்கவேண்டுமென்று சொன்னேன். அவர்கள் மூன்று ஊர்களைத் தத்து எடுத்திருக்கிறார்கள். ஆரனேரி, சலையனூர், மாம்பாக்கம் இந்த மூன்று ஊர்களைத் தத்து எடுத்து அங்கே விளக்கு போடுவது, பள்ளிக்கூடம் கட்டுவது, குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பது என்று எடுத்திருக்கிறார்கள். ஸ்ரீபெரும்புதூரில் நிறைய கம்பெனிகள் இருப்பதால் அவர்கள் எல்லாம் பல ஊர்களைத் தத்து எடுத்தால் பாதி சிரமம் அரசாங்கத்திற்குக் குறையக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படும். ஆகவே, இதை நீங்கள் கவனத்திலே கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீருக்கு, முன்னாள் அரசாங்கத்தினர் bore போடக்கூடாது என்று சொல்லிவிட்டார்களாம். அப்படிச் சொல்லியும் குன்றத்தூர் பகுதியிலே விற்பதற்காகத் தண்ணீர் நிறைய எடுக்கிறார்கள். குன்றத்தூரில் குடிப்பதற்கு ஜனங்களுக்குத் தண்ணீர் இல்லை. ஆனால் விற்பதற்கு அங்கே தண்ணீர் எடுக்கிறார்கள். கலெக்டருடைய உத்தரவு bore போடக்கூடாது என்று இருக்கிறது. ஆனால், எடுக்கிற நிலைமை இன்றும் இருக்கிறது.

அதேபோல, இன்றைக்கு இருக்கிற மிகப் பெரிய கம்பெனிகள் எல்லாம் செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து ராட்சத கிணறு தோண்டி அதில் பைப் வைத்து தண்ணீர் எடுத்து வந்துவிட்டார்கள். அங்கே நிலத்தடி நீர் என்பது அந்த மக்களுக்குக் கிடைக்காத ஒன்றாக இருக்கிறது. நான் போய் அந்தக் கம்பெனிக்காரர்களைக் கேட்டேன், படப்பை யூனியனைச் சேர்ந்தது செம்பரம்பாக்கம், நீங்கள் இருப்பது ஸ்ரீபெரும்புதூர் யூனியன். நீங்கள் எப்படி இந்தமாதிரி தண்ணீர் எடுக்கலாம் என்று கேட்டால், எங்களுக்கு தண்ணீர் சிப்காட் கொடுக்கவேண்டும், கொடுக்கிறார்கள் என்றார்கள். சிப்காட்டிலே நான் என்ன என்று கேட்டேன், கிணறு தோண்ட ஏன் நீங்கள் அனுமதி கொடுக்கவில்லை என்று கேட்டபோது, P.O. சொன்னார், 'இல்லை எங்களுக்கு அப்படி permission இல்லை'



2001 மே 31] [திருமதி டி. யசோதா]

என்றார். ஆனால், அங்கே கிணறு தோண்டி ஒரு நிறுவனத்தினர் எடுத்திருக்கிறார்கள். 200 அடி ஆழத்திற்கு எடுத்திருக்கிறார்கள். அருமையான தண்ணீர் கிடைத்திருக்கிறது. அதனால் கிணறு தோண்டுவதற்கு நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மனுவை கொடுத்திருக்கிறேன். 200 அடி ஆழம், 300 அடி ஆழம் தோண்டுவதற்கு அவர்களுக்குச் சக்தி இருக்கிறது. ஏனென்றால் அது 'foreign company'. அதனால் அவர்கள் எடுப்பார்கள். தயவு செய்து வசதி இருக்கிறவர்கள் கிணறு தோண்டுவதற்கு அனுமதி அளித்து, செம்பரம்பாக்கத்திலிருந்து வருகின்ற தண்ணீரை தடுத்து நிறுத்தி, அந்த ஹூண்டாய் கம்பெனிக்கும், அதைச் சுற்றியிருக்கின்ற சகோதர கம்பெனிகளுக்கும் வருகிற அந்தத் தண்ணீரைத் தடுத்து நிறுத்தி, அந்த யூனியனில் இருக்கின்ற மக்களுக்குக் கிடைத்திட உரிய பணியை நீங்கள் மேற்கொள்ளவேண்டும்.

பிற்பகல் 12–55

படப்பையில் அரசாங்கப் பள்ளிக்கூடத்தில் 1400 பிள்ளைகள் இருக்கிற இடத்தில் 22 வாத்தியார்கள் இருக்கிறார்கள். அதை நீங்கள் சீர்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றை மட்டும் நான் சொல்லி விடைபெறுகிறேன். ரியல் எஸ்டேட்டில், விற்கிறவர்கள் கையெழுத்துப் போடுவார்கள். வாங்குகிறவர்கள் கையெழுத்து போடமாட்டார்கள். இவர்களுடைய ஆட்சியில் இருவரும் கையெழுத்துப் போடவேண்டுமென்று சொன்னார்கள். வெளிநாட்டுக்காரர்கள் எல்லாம் வாங்குவதற்கு அவர்கள் எல்லாம் வரமாட்டார்கள். அவர்கள் தங்களுடைய பணத்தை Agent மூலம் கொடுப்பார்கள். பத்திரத்தை எடுத்தனுப்பவேண்டும். ஆனால், இப்போது இருக்கிற நிலைமையில் கோடிக்கணக்கான ரூபாய் தேங்கியிருக்கிறது. Register பண்ண முடியவில்லை. அதையும் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய அருமை முதலமைச்சர் அவர்கள் நல்ல திட்டங்களை எல்லாம் போட்டிருக்கிறார்கள். எனக்கு Speaker கடுமையாகச் சொன்னதால், நான் ஒன்றை மட்டும் சொல்லி விடைபெற வேண்டுமென்று நினைக்கிறேன். அம்மா, நீங்கள் கருவிலே சுமந்திருந்தால் ஒன்றிரண்டு குழந்தைகளுக்குத்தான் தாயாக இருந்திருப்பீர்கள். ஆனால், இன்றைக்கு தமிழகத்திலேயிருக்கிற பலகோடி மக்களுக்கு நீங்கள் அன்னையாக இருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எல்லோருக்கும் நீங்கள் தாயாக இருக்கிற காரணத்தினால் — ஒன்றிரண்டு தறுதலைகளாக

இருக்கும். அதைப்பற்றிக் கவலைப்படாதீர்கள் — நீங்கள் இந்த தமிழ்நாட்டை உருவாக்குகின்றபோது, பல்லுபோன கிழவர்கள் எல்லாம் உங்களை அம்மா என்றுதான் சொல்கிறார்கள். உங்களைவிட வயதில் மூத்தவர்கள், நான்கூட உங்களைவிட வயதில் மூத்தவள். பெரியவளாக இருந்தாலும், உங்களை அம்மா என்றுதான் சொல்கிறேன். அந்த நிலையில் நீங்கள் இருக்கிறீர்கள். தாயாக இருந்து தமிழகத்தை வழிநடத்தித் தாருங்கள் என்று கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் (குறுக்கீடு) திரு. வரதன், சொல்லுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியினுடைய தலைவர் அவர்கள் ஹுண்டாய் கம்பெனியைப் பற்றிச் சொல்லும்போது, சில உண்மைகளைச் சொல்லவேண்டுமென்று எதிர்பார்த்தேன். அந்த நேரத்தில் நான் அங்கே சட்டமன்ற உறுப்பினராக இருந்தவன். வணக்கத்திற்குரிய அம்மா புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சராக இருக்கிறபோதுதான் அந்த ஹுண்டாய் கம்பெனிக்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆட்சி மாற்றம் வந்த பின்னாலே, திராவிட முன்னேற்றக் கழக அரசு, விதிகளையெல்லாம் மீறி அந்த நிறுவனத்திற்கு உதவி செய்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, நம்முடைய மத்திய அமைச்சர் முரசொலி மாறன், முன்னாள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் இங்கே இருக்கிறார். முதலமைச்சர் போன்றவர்களெல்லாம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதன் தனி சொற்பொழிவெல்லாம் வேண்டாம். சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டீர்கள், உட்காருங்கள். அடுத்து, திரு. ஜி.கே. மணி.

***மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:** சமத்துவபுரத்தைப் பற்றி ஒன்று சொல்லவேண்டும். நிதி எங்கிருந்து வந்தது என்று விளக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கும் வேண்டும், எதிலும் வேண்டும், எல்லா நிலைகளிலும் வேண்டும், எல்லோருக்கும் சமூக நீதி வேண்டுமென்று, சரித்திர நாயகனாக இந்த மண்ணிலே வாழ்ந்துவரும் சமூகநீதிக் காவலருக்கு வணக்கம் செலுத்துகிறேன். சமூகநீதி நிலைத்திட, ஜனநாயகம் காத்திட, சமத்துவம் மலர்ந்திட, மனிதநேயம் தழைத்திட, பதவி ஆசை அற்று தன்னை



முழுவதும் அர்ப்பணித்து வாழும் தாடியில்லா பெரியார், மக்கள் காவலர், மனித நேயர் டாக்டர் அய்யா அவர்களுக்கு வணக்கம் செலுத்துகிறேன். சோதனைகள் பல கடந்து, தளராத நெஞ்சுறுதியால், சாதனையைத் தன்வசமாக்கி, எல்லோருக்கும் நீதிபோதனையை வழங்கி, துயருற்ற அனைவரின் வேதனையை நீக்கி, வெற்றி கண்ட சமூகநீதி காத்த வீராங்கனையாம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) வணக்கம் செலுத்துகிறேன். புதுமைப் பெண்களின் முதலிடமாய், புரட்சிப்பெண்களின் வழிகாட்டியாய், மதச்சார்பற்ற கூட்டணிக்குத் தலைமையேற்று, தேர்தலில் அமோக வெற்றிகண்டு, அரியாசனத்தில் அமர்ந்திட்ட சரித்திர நாயகியே, மங்கையர்க்கரசியே, தமிழக முதல்வர் அவர்களே தங்களுக்கு வணக்கம் செலுத்துகிறேன். என்னை ஈன்ற தந்தை, தாய்க்கு வணக்கம் செலுத்துகிறேன். மக்கள் சேவையே பெரிதெனக் கருதும் இம்மணியை சேவகனாய் இம்மாமன்றத்திற்கு மீண்டும் தேர்ந்தெடுத்து அனுப்பிய பெண்ணாகரம் தொகுதி மக்களுக்கும் வணக்கம் செலுத்துகிறேன்.

*பிற்பகல் 1–00*

மலை குலைந்தாலும், நிலை குலையாத தமிழ் அன்னையின் ஊற்று, சங்கத் தமிழின் வித்தான பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு நான் வணக்கம் செலுத்துகிறேன். மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கு வணக்கம் செலுத்துகிறேன். மன்ற உறுப்பினர்களுக்கு வணக்கம் செலுத்துகிறேன். பத்திரிகை நண்பர்களுக்கு வணக்கம் செலுத்துகிறேன்.

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் வேண்டுமென்று தமிழக மக்கள் எல்லாம் எதிர்நோக்கிய காலத்திலே மிகப்பெரிய கூட்டணி என்று மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்கு வெற்றிக் கூட்டணிக்கு தலைமையேற்ற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் வழியிலே, அவர்களோடு தோள்நின்ற கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கு நான் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்து, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அரியாசனத்திலே அமர்த்திய தமிழக மக்களுக்கு மீண்டும் ஒருமுறை வணக்கத்தைச் சொல்லி, அதே நேரத்திலே கடந்த சமூகநீதிப் போராட்டத்திலே, இட ஒதுக்கீட்டுப் போராட்டம் என்னும் சமூகநீதிப் போராட்டத்திலே இன்னுயிரை ஈந்த இட ஒதுக்கீட்டுப் போராட்டத் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்துகிறேன்.

[ திரு. ஜி.கே. மணி] [2001 மே 31

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்கள் முன் கையிலே இருப்பதோ மணி,

இங்கே பேசி நிற்பதோ பா.ம.க. மணி,

தாங்களோ சரித்திர நாயகியின் அணி,

நான் பேச விழைவதோ மக்கள் பணி,

இடையில் அடித்திடாதீர்கள் தங்கள் ஓசை மணி,

நான் கூடுதலாகக் கேட்பதோ சில மணித் துளிகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, மணிக்குக் கட்டுப்படுவதுதான் நல்லது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே விவாதங்களைக் கண்ணுற்றேன். அதே நேரத்தில் மேதகு ஆளுநர் அவர்கள் வகுத்தளித்த உரையின் 33 பக்கங்களை நான் படித்துப் பார்த்தேன். படித்துப் பார்க்கின்ற நேரத்திலே என் நினைவுக்கு வந்ததெல்லாம் 'யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே' என்று சொல்வதைப் போல, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்க இருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கையினுடைய முன்னோட்டமாக இந்த ஆளுநர் உரை அமைந்து இருக்கிறது என்பதோடு, நல்ல துவக்கம், நல்ல வளர்ச்சியைக் கொடுக்கும் என்று சொல்வார்களே, அதைப்போல பொறுப்பேற்ற ஐந்தே நாட்களிலே வகுத்தளித்த இந்த ஆளுநர் உரை என்பது, மக்கள் நலனிலே அக்கறை கொண்ட மகத்தான ஆளுநர் உரை; இது நல்லாட்சியைக் கொடுக்கும் என்று நான் இதை மனதார வரவேற்கிறேன்.

இப்படி இந்த நல்ல ஆளுநர் உரையைக் கொடுப்பதற்குத் தாங்கள் பெற்ற வெற்றி என்பது சாதாரண வெற்றி அல்ல. நம்முடைய அணி பெற்ற வெற்றி என்பது சாதாரண வெற்றி அல்ல, அமோக வெற்றி, மகத்தான வெற்றி.

எடுத்த காரியம் யாவிலும் வெற்றி

எங்கு நோக்கினும் வெற்றி, மற்றாங்கே

விடுத்த வாய்மொழிக்கு எங்ஙனம் வெற்றி



2001 மே 31] [ திரு. ஜி.கே. மணி]

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விடுத்த

வாய்மொழிக்கு எங்ஙனம் வெற்றி

எண்ணும் எண்ணங்கள் யாவிலும் வெற்றி

எங்கும் வெற்றி, எதிலும் வெற்றி,

நம்முடைய சரித்திர நாயகிக்கு எதிலும் வெற்றி

காக்கை, குருவி எங்கள் ஜாதி—நீள்

கடலு மலையுமெ ங்கள் கூட்டம்

நோக்கும் திசையெல்லாம் நாமின்றி வேறில்லை

நோக்க நோக்கக் களி யாட்டம்,

தமிழக மக்கள் கூட்டம்

நம்முடைய புரட்சித் தலைவி பக்கம்

என்பதைச் சுட்டிக்காட்டி, அதே நேரத்திலே இந்த ஆட்சியினுடைய சிறப்புகளைப்பற்றிக் கூறும்போது, நல்ல ஆட்சிக்கு எடுத்துக்காட்டாக நல்ல ஆளுநர் உரையை வழங்கியிருக்கிறார்கள் என்று சொல்லக்கூடிய நேரத்திலே ஒரு சிறிய விளக்கத்தைச் சொல்ல நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

"சீத மதிக்குடையின்கீழ்ச் செம்மை அறங்கிடப்பத்

தாதுவிழ்பூந் தாரான் தனிக்காத்தான் மாதர்

அருகூட்டும் பைங்கிளியும் ஆடற்பருந்தும்

ஒரு கூட்டில் வாழ உலகு"

என்று நளவெண்பா கூறுகிறது.

மகரந்தம் சிந்தும் மலர் மாலை அணிந்த அரசன் மகளிர் தம் அருகில் வைத்து ஊட்டி வளர்க்கும் பைங்கிளியும், ஆடிப் போரிட்டுக் கொன்று உயிர் வாழும் பருந்தும் ஒரே கூட்டில் வாழும். அதுபோல குளிர்ந்த வெண் கொற்றக் குடை நிழலில் செம்மை அறம் நீங்காதிருக்க தன் நாடு என நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நல்லாட்சி தருவார்கள் என்று மனதார நம்புகிறேன். இந்த ஆட்சிக்கு பாட்டாளி மக்கள் கட்சி

என்றும் உறுதுணையாக இருக்கும் என்று நான் இந்த நேரத்திலே வாக்குறுதி அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நடந்து முடிந்த சட்டமன்றப் பேரவைத் தேர்தலுக்கு முன்பாக நம்முடைய மாண்புமிகு கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கு எத்தனை இடையூறுகள் வந்தன என்பதும் உங்களுக்கு நன்றாகத் தெரியும். அந்த நேரத்திலே கூட்டணி சேருவதற்கு முன்பாக நாங்கள் மாற்று அணியிலே இருந்தாலும்கூட, அந்த அணியிலே நாங்கள் பட்ட வேதனைகள், சோதனைகள், சொல்லொணாத் துயரங்கள் எல்லாம் எடுத்துச் சொல்ல முடியாது. அந்த அளவிற்கு துன்பங்கள் பட்ட கர்ரணத்தினாலே, வேதனைப்பட்ட காரணத்தினாலே, நிலைகுலைந்து எங்களுடைய டாக்டர் ஐயா அவர்கள், மனம் நொந்து கூட்டணியை மாற்ற வேண்டும் என்று நினைத்தார்கள். பிப்ரவரி 5 ஆம் தேதி சென்னைக்குச் சென்றார்கள். இரண்டு மந்திரிகளை ராஜினாமா செய்யச் சொன்னார்கள். மன்னிக்கவும். இரண்டு மந்திரிகளை, பிப்ரவரி 5 ஆம் தேதி டெல்லியிலே ராஜினாமா செய்யச் சொல்லிவிட்டு, 5 ஆம் தேதி இரவே சென்னைக்கு வந்தார்கள். சென்னைக்கு வந்தவுடனே, தொலைபேசியிலே செய்தி வருகிறது. மத்திய அமைச்சர்கள், மிக முக்கியமான அமைச்சர்கள் 5 பேர் சென்னைக்கு வருகிறார்கள். சமாதானப்படுத்தப்போகிறார்கள் என்ற செய்தி வந்த உடனேயே முடிவு எடுத்தார்கள். நாங்கள் எல்லாம் துணை நின்றோம். நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களைச் சந்திக்கவேண்டுமென்று சொல்லி, அடுத்த நாள் சந்தித்தோம்.

பிற்பகல் 1—05

சந்தித்த நேரத்திலே, டாக்டர் ஐயா அவர்கள் சொன்னார்கள், கூட்டணி பற்றிப் பேசுகிறோம். நாங்கள் ஆட்சியில் பங்கு கோரவும் மாட்டோம், சேரவும் மாட்டோம். பங்கு கேட்கவில்லை என்று சொல்லி, எந்த நிபந்தனையும் இல்லாமல் இந்த நாட்டுக்கு முதலமைச்சராகத் தாங்கள் வரவேண்டும், அதற்கு உறுதுணையாக இருப்போம் என்று வாக்குறுதி அளித்து, பாட்டாளி மக்கள் கட்சி துணை நின்றது. அப்படி பாட்டாளி மக்கள் கட்சி முதல் கட்டத்திலே துணை நின்ற காரணத்தினாலே மற்ற அரசியல் கட்சிகள் எல்லாம் ஒருங்கிணைந்து, நம்முடைய கூட்டணிக் கட்சித் தலைவர்கள் ஒன்றாக இணைந்து இந்தத் தேர்தலைச் சந்தித்தோம். அந்தத் தேர்தல் நேரத்திலே, நமக்குச் சோதனைகள் எவ்வளவு என்பது நாம் நன்றாக அறிந்த ஒன்று. ஆளுங்கட்சி சட்டத்தைக் கையிலே வைத்துக்கொண்டு செய்த அதிகார





துஷ்பிரயோகங்கள் என்ன என்று சொன்னால், எடுத்து வைக்க முடியாது. அந்த அளவிற்கு இருந்தது. அப்படியிருந்தாலும்கூட, அதையெல்லாம் கடந்து — இன்று நான், இன்னும்கூடச் சொல்லிக்கொள்கிறேன்— 234 தொகுதிகளிலேயும் இந்த அணி வெற்றி பெற்றிருக்கவேண்டும். நம்முடைய கூட்டணிக் கட்சியினுடைய தலைவர் அவர்களுக்கு அவ்வளவு வாய்ப்பு இருந்தது. சில தொகுதிகளிலே அது தட்டிப் பறிக்கப்பட்டது என்பதுதான் உண்மை. ஆகவே, அந்த அளவிற்கு இந்தக் கூட்டணிக்கு உறுதுணையாக இருந்தவர்கள் பாட்டாளி மக்கள் கட்சியும், தோழமைக் கட்சிகளும் என்பதை நினைவில் கொள்ளக்கூடிய அதே நேரத்திலே, தொடர்ந்து ஆதரவு கொடுப்போம் என்ற வாக்குறுதியை மீண்டும் இங்கே சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த நேரத்திலே பத்திரிகையாளர்கள் கேட்டார்கள். மற்ற நேரங்களிலேகூட எங்களுடைய நிறுவனத் தலைவர் டாக்டர் ஐயா அவர்கள் சொன்னார்கள். தமிழ் நாட்டிலே, தனிக் கட்சி ஆட்சி வேண்டும். அதுதான் சரியாக இருக்கும். மக்கள் நலனிலே அக்கறை கொண்டதாக இருக்கும் என்ற காரணத்தினாலே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தனிமையிலே ஆட்சி அமைக்க வேண்டும் என்று சொல்லி, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அன்றைய நேரத்திலே எங்களுடைய டாக்டர் ஐயா வாக்குறுதி அளித்தார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய ஆளுநர் உரை என்பது மிகுந்த வரவேற்பு அளிக்கக்கூடியதாக இருக்கிறது. எல்லா அம்சங்களையும் உள்ளடக்கி இருக்கிறது. அனைத்துத் தரப்பு மக்களின் நலனிலே அக்கறை கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 33 பக்கங்களையும் படித்துப் பார்த்தேன். அவ்வளவு அம்சங்கள் இருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், இதுமாத்திரமல்ல, நிதிநிலை அறிக்கையிலே சொல்லவிருக்கிறேன், இன்னும் ஏராளமான அம்சங்கள் வரவிருக்கின்றன என்று. முக்கிய அம்சங்களையெல்லாம் இங்கே சுட்டிக்காட்டினார்கள். ஆகவே, தமிழகம் வரக்கூடிய காலகட்டத்திலே ஒரு பொற்காலமாக, குப்தர் காலத்திலே கண்ட பொற்காலம் தமிழகத்திற்கு வரவிருக்கிறது என்பதை நான் முன்கூட்டியே இங்கு மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

[ திரு. ஜி.கே. மணி] [2001 மே 31

இங்கே சொல்கின்ற நேரத்திலே, சமூகநீதியைப் பற்றி மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்த நாட்டிலே தந்தை பெரியார் வழியிலே வந்தவர்கள், நாங்கள் சமூக நீதியைக் காப்போம் என்று சொன்னவர்களுக்கெல்லாம் சவால் விடக்கூடிய வகையிலே, கடந்த கால ஆட்சியிலே, தமிழ்நாட்டு மக்கள், வட இந்தியர்கள் எல்லாம் பாராட்டக்கூடிய வகையிலே, இந்தச் சமூகநீதியைக் காத்த வீராங்கனை என்ற பெயர் பெற்ற முதலமைச்சர் அவர்களே, இந்தச் சமூகநீதியிலே, இன்னும குறைகள் இருக்கின்றன. தங்கள் காலத்திலே நிச்சயமாக நிவர்த்தி செய்வீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதற்கு முத்தாரமாக இங்கே சொல்லியிருக்கிறீர்கள்.

இன்று மத்திய அரசுத் துறையினுடைய வேலைவாய்ப்பிலே O.B.C. என்று சொல்லக்கூடிய இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு *27* சதவிகிதம் இட ஒதுக்கீடு இருக்கிறது. அதுவும் வேலைவாய்ப்பிலே இருக்கிறது. கல்வியிலே இல்லை. பதவி உயர்விலே இல்லை. ஆகவே, இதை மக்கள் தொகைக்கு ஏற்ப மாற்ற வேண்டும் என்று சொல்லி. நீங்கள் உயரிய நோக்கத்தோடு *50* சதவிகிதமாக உயர்த்துவதற்கு தமிழக அரசு முனைப்போடு செயல்படும் என்ற ஆர்வத்தினை வெளியிட்டிருக்கிறீர்கள். அதை நாங்கள் மனதாரப் பாராட்டுகிறோம். வரவேற்கிறோம். அதற்காகத்தான் டெல்லியிலே மிகப் பெரிய மாநாட்டை நடத்தி, அனைத்து அரசியல் கட்சிகளையும் அழைத்துப் பேசினோம். ஆகவே, இப்படி O.B.C. என்று சொல்லக்கூடிய இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இருக்கக்கூடிய மத்திய அரசினுடைய இட ஒதுக்கீட்டை கூடுதலாக ஆக்குவதோடு இப்போது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இருக்கக்கூடிய அந்த இடஒதுக்கீட்டையும் இன்னும் கூடுதலாக்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

*பிற்பகல் 1–10*

அதைப்போலவே இப்போது வேலைவாய்ப்பு என்று சொன்னால், நம்முடைய அரசுத் துறைகளிலேயும் வேலைவாய்ப்பு மிகக் குறைவாக இருக்கிறது. இப்போது மத்திய அரசு எல்லாவற்றையும் தனியார் துறைக்குத் தாரை வார்த்துக் கொண்டிருக்கிறது. தனியார்மயம் ஆகிக்கொண்டிருக்கக் கூடிய இந்த நேரத்திலே மத்திய அரசாங்கத்தினுடைய வேலைவாய்ப்பு என்பது 3 சதவீதம்; அதேநேரத்திலே மாநில அரசாங்கத்தினுடைய வேலைவாய்ப்பு என்பது 1 சதவீதம். எஞ்சி இருக்கக்கூடிய *96* சதவீதம்



2001 மே 31] [ திரு. ஜி.கே. மணி]

வேலைவாய்ப்பு எங்கே இருக்கிறது என்று சொன்னால் தனியார் நிறுவனங்களிலே இருக்கிறது. ஆகவே, தனியார் நிறுவனங்கள் தாழ்த்தப் பட்ட மக்களுக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், பிற்படுத்தப் பட்ட, அடித்தட்டிலே வாழக்கூடிய மக்களுக்கும் வேலைவாய்ப்புக் கொடுப்பார்களா என்று சொன்னால் அது கேள்விக்குறியாகவே இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, சமூகநீதி காத்த வீராங்கனை என்று சொல்லக்கூடிய தங்களுடைய காலத்திலே தனியார் நிறுவனங்களிலேயும் இடஒதுக்கீடு கொண்டு வந்து, வேலைவாய்ப்பு தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே இடஒதுக்கீட்டிலே இன்னும் நிறையக் குறைகள் இருக்கின்றன. இன்னும் நிறையக் குறைகள் என்று சொல்கின்ற நேரத்திலே இந்த இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளி நிறுவனங்கள் வருகின்றன. இந்த இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் படிப்பிலே தாழ்த்தப்பட்ட மாணவர்களும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களும் சேருவது மிகக் கடினமாக இருக்கிறது. அது குதிரைக் கொம்பாக இருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய மதிப்பெண்கள் குறைவாகப் பெறுகிறார்கள். அதேநேரத்திலே இப்போது இந்த இடங்களும் குறைவாக இருக்கின்றன. தனியார் நிறுவனங்கள் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி நிறுவனங்களிலே அதிகமாக இருக்கின்றன. அதுவும் சிறுபான்மையினரால் நடத்தப்படும் நிறுவனங்கள் அதிகமாக இருக்கின்றன. இந்தச் சிறுபான்மையினரால் நடத்தப்படும் நிறுவனங்களிலே ஆசிரியர் பயிற்சிப் படிப்பிலே இடஒதுக்கீடு முறையே கிடையாது. ஆகவே, அங்கும் பிற்படுத்தப்பட்டவராக இருந்தாலும், மிகவும் பிற்படுத்தப்பட்டவராக இருந்தாலும், தாழ்த்தப்பட்டவராக இருந்தாலும், யாராக இருந்தாலும்கூட அந்த இடைநிலை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களிலே சேருவது என்பது கடினமாக இருக்கிறது. ஆகவே, Minority Institutions–க்கு பாதுகாப்பு இருக்கிறது என்ற நிலை இருந்தாலும்கூட எப்பாடுபட்டாவது அதிலேயும் இடஒதுக்கீடு முறையைக் கொண்டுவருவதற்குத் தாங்கள் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று இங்கே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, இந்த ஆளுநர் உரையிலே 14 வயதுக்குட்பட்ட அனைவருக்கும் தரமான கல்வி கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதை நாங்கள் தொடர்ந்து கோரி வருகிறோம்; போராடி வருகிறோம். கடந்த 5 ஆண்டுக் காலத்திலே இதுபற்றியெல்லாம் நாங்கள் பேசாத பேச்சுகள் இல்லை. ஒரு தனி மனிதன் முன்னேறுவதற்கு,

ஒரு நாடு முன்னேறுவதற்கு கல்வி மிக முக்கியமானது. ஆகவே, கல்வியிலேகூட ஆரம்பக் கல்வி மிக முக்கியமானது. இந்த ஆரம்பக் கல்வி என்பது ஏழைகளுக்கு ஒரு தரமாக இருக்கிறது. நடுத்தர வர்க்கத்திற்கு ஒரு தரமாக இருக்கிறது. பணக்கார வர்க்கத்திற்கு ஒரு தரமாக இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் தொடக்கப்பள்ளிகள் என்று இருக்கின்றன. மெட்ரிகுலேஷன் பள்ளிகள் என்று இருக்கின்றன. C.B.S.E. பள்ளிகள் இப்படிப் பல்வேறு நிறுவனங்கள்; பல்வேறு subjects எல்லாம் இருக்கின்றன. ஆகவே இப்படிப்பட்ட நிலைகள் எல்லாம் மாறி எல்லாத் தரப்புக் குழந்தைகளுக்கும் ஒரே தரமான கல்வி கிடைக்கக்கூடிய வகையிலே, அதை ஏழைகளுக்கெல்லாம் கிடைக்கக்கூடிய கட்டாயக் கல்வியாக, இலவசக் கல்வியாக, ஒரு தரமான கல்வியாகக் கொண்டுவருவதற்கு நீங்கள் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். அது தங்களால்தான் முடியும் என்ற வேண்டுகோளை இந்த நேரத்திலே நான் முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, 69 சதவீத இடஒதுக்கீடு. அந்த இடஒதுக்கீட்டைக் கடந்த ஆட்சிக் காலத்தில் பாதுகாத்த பெருமை தங்களுக்கு இருக்கிறது, இந்தியாவிலேயே தமிழகத்திற்கு மட்டும்தான் இருக்கிறது. தாங்கள் காத்த அந்த 69 சதவீத இடஒதுக்கீட்டிற்கு மீண்டும் புத்துயிர் அளிக்க வேண்டும் என்று சொல்லி கடந்த 5 ஆண்டுகளாக நாங்கள் கோரிக்கை வைத்தோம்; வாதாடினோம்; வற்புறுத்தினோம்; பலன் இல்லை. மீண்டும் அரியணையிலே அமர்ந்திருக்கக்கூடிய தாங்கள் அந்த 69 சதவீத இடஒதுக்கீடு முழுமையாக நிறைவு பெறுவதற்கு அங்கே சட்டம் இயற்றுவதற்கு தாங்கள்தான் முன்நிற்க வேண்டும். அதற்காக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடும், தமிழக அரசோடும் சேர்ந்து டெல்லியிலே போராடுவதற்கு பாட்டாளி மக்கள் கட்சி துணை நிற்கும் என்ற செய்தியை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னொன்றும் இடஒதுக்கீட்டிலே சொன்னோம். மருத்துவம், பொறியியல், வேளாண் படிப்பு, கால்நடை மருத்துவம் போன்ற பல்வேறு பாடப் பிரிவுகளிலே அந்தக் கல்லூரிகளிலே இடஒதுக்கீடு முழுமையாக இருப்பதில்லை. அதிலும் குறிப்பாக தனியார் நிறுவனங்களில் இடஒதுக்கீடு இருப்பதில்லை. தனியார் கல்வி நிறுவனங்களில் நான் சொன்ன அந்தப் பாடப் பிரிவுகளுக்கு management quota என்று இருக்கிறது. அந்த management quota–விலே இடஒதுக்கீடு முறை பின்பற்றப்படுவதில்லை. ஆகவே, அந்த இடஒதுக்கீடு முறை அங்கேயும் பின்பற்றப்படும் என்று



சொன்னால், தாழ்த்தப்பட்டவர்களும், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களும், அந்தப் payment seat–லே இடம் பெறுவதற்கு வாய்ப்பாக இருக்கும். அந்த வகையிலே அங்கே இடஒதுக்கீடு முறையைக் கொண்டுவரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–15

இடஒதுக்கீட்டிலே இன்னொரு சிறிய திருத்தம். பிற்படுத்தப்பட்டவர்களுக்குக்கூட இடஒதுக்கீடு இருக்கிறது. மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு இருக்கிறது. தாழ்த்தப் பட்டவர்களுக்கும் இடஒதுக்கீடு இருக்கிறது. O.C.–க்கும் இடஒதுக்கீடு இருக்கிறது. ஆகவே, இதையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்திலே இப்போது குறிப்பிட்ட ஒரு சாராருக்கு முழுமையான பலன் தரக்கூடிய நிலை இருக்கிறது சில நேரங்களிலே, சில இடங்களிலே. அதைப்போல, ஒரு சில இடங்களிலே சில நேரங்களில் குறிப்பிட்ட ஒரு சாராருக்கு எதுவுமே கிடைக்காத சூழ்நிலை ஏற்பட்டுவிடுகிறது. அதற்கு என்ன காரணம் என்று சொன்னால், அந்தந்த இடங்களைப் பொறுத்து சூழ்நிலை அமைந்துவிடுகிறது.

உதார்ணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தை எடுத்துக்கொள்வோம். அந்தக் கன்னியாகுமரி மாவட்டத்திலே நாடார் சமுதாயத்தைச் சார்ந்த, பெருமைக்குரிய மக்கள் 60 சதவிகிதம் பேர் வாழ்கின்றார்கள் என்று சொன்னால், மற்றவர்கள் வாழ்கின்ற நேரத்திலே அங்கே இடஒதுக்கீடு முறையிலே ஒரு 100 இடம் வேலைவாய்ப்புக்குத் தேர்வு செய்யப்படுகிறது. அப்படி பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலிலே வரும்பொழுது, அங்கே வாழ்கின்ற 60 சதவிகித மக்கள் தொகை கொண்ட இந்த நாடார் சமுதாய மக்களுக்கு முழுமையான வாய்ப்புக் கிடைப்பதில்லை. பிற்படுத்தப்பட்டவர்களுக்குக் கிடைக்கக்கூடிய அந்தக் குறைவான இடங்களிலே மற்ற எல்லா பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினரைச் சார்ந்தவர்களும் பங்குபெறுகின்ற காரணத்தினாலே முழுமையான இடங்கள் அங்கே கிடைக்காமல் போய் விடுகிறது. அப்படி தமிழ்நாட்டில் பரவலாக இருக்கின்ற காரணத்தினால் அதையெல்லாம் மாற்றி அமைக்கக்கூடிய வகையிலே கர்நாடக மாநிலத்திலே இருக்கக்கூடியதைப் போல தொகுப்பு இடஒதுக்கீடு முறை என்று சொல்லக்கூடிய compartmental reservation இங்கே கொண்டு வரப்படவேண்டும். உதாரணத்திற்குச் சொல்கிறேன், ஆந்திர மாநிலத்திலே இருக்கிறது. அங்கே ஆதிதிராவிட மக்களுக்கு, பழங்குடியின மக்களுக்கு

இருக்கக்கூடிய, அந்த Scheduled இன மக்களுக்கு இருக்கக்கூடிய, அந்த இடஒதுக்கீடு ஆந்திர அரசால் 4 பிரிவுகளாகப் பிரித்து வழங்கப் பட்டிருக்கிறது. பல்வேறு சமுதாயப் பிரிவுகளை எல்லாம் உள்ளடக்கி பொருளாதார ரீதியான மக்கள் தொகை அடிப்படையிலே சமூக அந்தஸ்திலே இருக்கக்கூடிய அந்தச் சமூக மக்களை எல்லாம் 4 கூறுகளாகப் பிரித்து அங்கே இடஒதுக்கீடு முறை வழங்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே கர்நாடக மாநிலத்திலே வழங்கப்படுகிறது. அதைப்போல தமிழகத்திலே Scheduled இன மக்களுக்கு இருக்கக்கூடிய அந்த இடஒதுக்கீடு அந்த மக்கள் தொகை அடிப்படையிலே அந்தச் சமூகப் பிரிவுகளுக்கு ஏற்ப பிரித்து வழங்கப்பட வேண்டும். அதைப்போல மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இருக்கக்கூடிய அந்த 20 சதவிகித இடஒதுக்கீடு, கர்நாடகாவில் இருப்பதைப் போலவே அந்தத் தொகுப்பு அடிப்படை என்ற முறையிலே இங்கேயும் பிரித்து வழங்கப்பட வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு மிக முக்கியமான அம்சமாகச் சொல்லப்படுவது மழை நீரைச் சேமிக்கும் திட்டம். இன்னும் 10 ஆண்டுகளுக்கு மேலாகும் என்று சொன்னால், நமது நாடு எதிர்காலத்திலே குடிதண்ணீருக்கே கஷ்டப்படக்கூடிய அவல நிலைக்கு நாம் போய்க்கொண்டிருக்கிறோம்.

இன்று உலக அளவிலே இருக்கக்கூடிய புள்ளி விவரத்தைச் சொல்கிறேன். கடல் நீர் என்பது 97 1/2 சதவிகிதம். அந்த 97 1/2 சதவிகிதம் போக, நன்னீர் என்பது 2 1/2 சதவிகிதம். அந்த 2 1/2 சதவிகிதத்திலே பாசனத்திற்கும், குடிநீருக்கும் பயன்படுத்தப்படக்கூடியது 1/4 சதவிகிதம், அதாவது 1.25 சதவிகிதம். ஆகவே, இந்த 1.25 சதவிகிதமான இந்தத் தண்ணீரும் பாசனத்திற்கும், குடிப்பதற்கும் பலன் இல்லாமல் போய்க் கொண்டிருக்கக்கூடிய இந்தக் கால கட்டத்திலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அரிய ஒரு திட்டத்தை, மழை நீரைத் தேக்கும் திட்டத்தை இங்கே சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, ஒருசொட்டு மழை நீர்கூடக் கடலிலே கலக்கக்கூடாது. அதைத் தேக்கி வைக்க வேண்டும். அதற்கான நல்ல திட்டத்தைச் சொல்லியிருக்கக்கூடிய காரணத்தினாலே அந்தத் திட்டத்தைப் பெரிதும் வரவேற்கிறோம். இங்கே பாலாறு இருக்கிறது. மற்ற ஆறுகளெல்லாம் இருக்கின்றன. மழைக் காலங்களிலே மழை நீர் கடலிலே உபரியாக வீணாகச் செல்கின்ற காரணத்தினாலே அந்த ஆறுகளிலே 5 கிலோ மீட்டருக்கு ஒரு check dam என்ற வகையில் ஒரு dam அமைப்போம் என்று சொன்னால்



தண்ணீரைத் தேக்கி வைப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். குடிப்பதற்கு நீர் கிடைக்கும். அங்கே எல்லாக் கிணறுகளுக்கும் நீர் ஊற்று கிடைக்க வாய்ப்பாக இருக்கும் என்ற காரணத்தால் அந்தத் திட்டம் மீண்டும் விரிவாக்கப்பட வேண்டும் என்று நான் மிகவும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, இந்த நாட்டிலே தமிழகத்தினுடைய மக்கள் தொகையைப் பார்க்கின்ற காலத்திலே அரசு ஊழியர்கள் இருக்கின்றார்கள். அரசு ஊழியர்களை நான் குறை சொல்லவில்லை. அரசுத் திட்டங்களை நான் குறைத்து மதிப்பிடவில்லை. இருந்தாலும்கூட, ஆண்டுக்காண்டு ஊதிய உயர்வு, அகவிலைப்படி உயர்வு என்று இவர்களுக்கு கூடிக்கொண்டே போகிறது. அதேநேரத்தில், நாட்டில் விவசாயிகள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். விவசாயக் கூலிகள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மற்ற தொழிலாளர்கள் எல்லாம் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு விலைவாசி உயர்வுக்கு ஏற்ப வாழ்க்கைத் தரத்தினுடைய அவல நிலைக்கு ஏற்ப ஊதிய உயர்வு, மற்ற உயர்வு விகிதாசாரப்படி கூடுகிறதா என்று சொன்னால் நிச்சயமாக இல்லை. அப்படி விவசாயிகளினுடைய வாழ்க்கை கேள்விக்குறியாக இருந்து கொண்டிருக்கிறது. விவசாயிகளுக்கு நல்ல திட்டங்களைக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் மனதார வரவேற்கிறோம், பாராட்டுகிறோம்.

பிற்பகல் 1-20

அப்படிச் சொல்கின்ற நேரத்திலே, எல்லோருக்கும் உணவளிப்பவர்கள் விவசாயிகள்.

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை".

என்று சொல்வார்கள்.

"வரப்புயர நீர் உயரும்;
நீர்உயர நெல் உயரும்;
நெல்உயர குடி உயரும்;
குடிஉயர கோன் உயரும்"

என்று சொல்வார்கள். (மணியடிக்கப்பெற்றது) அதைப்போல, நம்முடைய

விவசாயிகள் நிலை உயருகின்ற காரணத்தினாலே நம்முடைய முதலமைச்சர் ஆட்சி, நல்ல ஆட்சி, தலைசிறந்த ஆட்சி, மகத்தான ஆட்சி என்று சொல்லக்கூடிய வகையிலே விவசாயிகளினுடைய வாட்டத்தைப் போக்குவதற்கு நீங்கள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு நிறையத் திட்டங்கள்; பேசுவதற்கு நேரம் இல்லை. நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் மணி அடித்துவிட்டார்கள். என்னுடைய தொகுதிப் பிரச்சினை பற்றி நான் இன்னும் பேசவில்லை. விவசாயிகளின் வாட்டத்தைப் போக்கக்கூடிய வகையிலே கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் தருகிறோம் என்று சொன்னார்கள். ஆனால், இதுகுறித்து தேர்தல் அறிக்கையில் சொல்லவில்லை; மாநாட்டில்தான் தீர்மானம் போட்டோம் என்றார்கள். மேலும் முன்னாள் முதலமைச்சர் இந்த மாமன்றத்திலே சொன்னது என்ன தெரியுமா? நாங்கள் பல முறை பேசினாலும், வற்புறுத்தினாலும்கூட, 'என்னை 5 ஆண்டுக் காலம் ஆளவிடுங்கள்; 5 ஆண்டுக் காலத்தில் நிறைவேற்றுவேன்' என்று சொன்னார்கள். 5 ஆண்டுக் காலத்திலே அது கேள்விக் குறியாகிவிட்டது. நாங்கள் எல்லாம் ஏமாந்துவிட்டோம். முதலாண்டிலே நீங்கள் இதனை மனமுவந்து அறிவிக்க வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, இருங்கள். திரு. பொன்முடி பேசட்டும்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்கள் 10 சதவிகிதம் பிழிதிறன் கொண்ட கரும்பிற்கு 1,000 ரூபாய் என்று அறிவித்திருக்கிறார்கள். 8.5 சதவிகித பிழிதிறனுக்கு அவர்கள் கேட்டிருக்கிறார்கள். 10 சதவிகித பிழிதிறன் கொண்ட கரும்புக்கு கடந்த ஆட்சிக் காலத்திலேயே 1,000 ரூபாய் அறிவிக்கப்பட்டுவிட்டது. சில ஆலைகளிலே அது வழங்கப் பட்டிருக்கிறது என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினருக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஆர். சாமி:** கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொன்னதை நான் ஒத்துக்கொள்கிறேன். வழங்க முடியாததற்கு ஒரு சாக்குபோக்கு, வேறு ஒன்றும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)





10 சதவிகிதம் பிழிதிறன் கொண்ட கரும்பு தமிழ்நாட்டிலே எந்த மாவட்டத்திலும் இல்லை. ஒருசில ஆலைகளிலும் மிகக் குறைவான அளவில்தான் இருக்கிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996—ல் தேர்தல் நேரத்தில் முன்னாள் முதலமைச்சர் அவர்கள் ஒரு வாக்குறுதி அளித்தார்கள். தாங்கள் ஆட்சிக்கு வந்தால் கரும்புக்கு டன்னுக்கு 1,000 ரூபாய் தரப்படும் என்ற பொதுவான வாக்குறுதியைத்தான் அளித்தார்கள். 5 ஆண்டுகள் கடந்துவிட்டன. அந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லையே என்று விவசாயிகளும் எதிர்க்கட்சியினரும் திரும்பத் திரும்பக் கேட்டபோது, ஐந்தாவது ஆண்டில், ஆட்சிக் காலத்தின் இறுதியில் 10 சதவிகிதம் பிழிதிறன் உள்ள கரும்புக்கு மட்டும் டன்னுக்கு 1,000 ரூபாய் தரப்படும் என்று அறிவித்தார். இதில் உண்மை என்னவென்றால், தமிழ்நாட்டில் விளைகின்ற பெரும்பாலான கரும்பிற்கு 8.5 சதவிகிதம் பிழிதிறன்தான் உள்ளது. தமிழகத்தில் உள்ள அனைத்து சர்க்கரை ஆலைகளிலும், இரண்டு சர்க்கரை ஆலைகளுக்குப் போகின்ற கரும்புக்கு மட்டும்தான் 10 சதவிகிதம் பிழிதிறன் உள்ளது என்பதைத் தெரிந்துகொண்டுதான், விவசாயிகளை ஏமாற்றுகின்ற வகையில் முன்னாள் முதலமைச்சர் இந்த அறிவிப்பைச் செய்திருக்கிறார் என்பதுதான் உண்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, பேசி முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை நாங்களெல்லாம் இந்த மாமன்றத்திற்கு வந்த நேரத்திலே முன்னாள் முதல்வர் அவர்களிடத்திலே ஒன்றைக் கேட்டோம். நாங்கள் எல்லாம் சமூக நீதிக்காகப் போராடியவர்கள். எங்கள் இயக்கத்தினர்மீது ஏராளமான வழக்குகள் இருக்கின்றன. ஆகவே, அரசியல் காரணமாக போட்ட வழக்குகள்; போராட்டத்திற்காகப் போட்ட வழக்குகள்; இந்த வழக்குகளையெல்லாம் திரும்பப் பெற வேண்டும் என்று கேட்ட நேரத்திலே அன்றைய முதலமைச்சர் அவர்கள் எல்லா வழக்குகளும் வாபஸ் என்று சொன்னார்கள். ஆனால், வழக்குகள் வாபஸ் பெறப் படவில்லை. கூட்டணியிலே இருந்த எங்களுக்கு நேர்ந்த கதி என்ன தெரியுமா? தேசியப் பாதுகாப்புச் சட்டம்; குண்டர் சட்டம். கடந்த ஆண்டு எங்களுக்குக் கிடைத்த பரிசு, வழக்குகள் வாபஸ் இல்லை. தேசியப் பாதுகாப்புச் சட்டத்திலே, இன்னும் குறிப்பாகச் சொன்னேன் என்றால், 15 வயதுள்ள சிறுவன், 17 வயதுள்ள சிறுவன், என்ன தவறு செய்தான்?

என்ன தேச விரோதச் செயல்? இந்த நாட்டினுடைய இரகசியத்தைக் காட்டிக்கொடுத்தானா? அரசியலுக்காகப் போராடிய எங்கள்மீது வேறு சிலரைத் தூண்டிவிட்டு, எங்களுக்குக் கிடைத்த பரிசு மிகப்பெரிய வழக்குகள். கடுமையான சோதனையில் இருந்துகொண்டிருக்கிறோம். இதையெல்லாம் மனதிலே வைத்துத்தான் நாங்கள் இப்படி மாறியிருக்கிறோம் என்ற காரணத்தைச் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, நீங்கள் தாயுள்ளம் கொண்டவர்கள்; ஆகவே, நீங்கள் தாயுள்ளத்தோடு கருணைகூர்ந்து எங்கள்மீது போட்ட வழக்குகளையெல்லாம் திரும்பப் பெற வேண்டும். அவை அரசியல் வழக்குகளே தவிர வேறு வழக்குகள் அல்ல. அதனால் அவற்றைத் திரும்பப் பெற வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே உங்களை நான் பாதம் பணிந்து பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஏறக்குறைய 10 ஆண்டுகள், 12 ஆண்டுகளாகத் தொண்டர்கள் இங்கே நீதிமன்றத்திற்கு அலைந்து கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, அதையெல்லாம் போக்கக்கூடிய வகையிலே நீங்கள் தீர்வு காண வேண்டுமென்று இங்கே கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

*பிற்பகல் 1–25*

தலைவர் அவர்களே, இன்னும் கொஞ்சம் நேரம் வேண்டும். விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை. நிறைய நேரம் அதைப்பற்றிப் பேசலாம். இருந்தாலும்கூட, விவசாயிக்குக் கட்டுப்படியான விலை கிடைக்க வேண்டும். அதே நேரத்திலே நுகர்வோருக்கும் அடக்கமான விலையிலே பொருள்கள் கிடைக்க வேண்டும். இது நமது அரசினுடைய பிரதான நோக்கம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்த வகையிலே தாங்கள் எடுக்கக்கூடிய முயற்சிகளுக்கு என்னுடைய பணிவான வேண்டுகோள் என்ன என்று சொன்னால், இந்த ஆண்டு உதாரணமாக பொன்னி நெல் என்றால் அதன் விலை ஒரு குவிண்டால் இவ்வளவு அல்லது ஒரு கிலோ விலை இவ்வளவு என்று மார்ச் மாதம் ஒன்றாம் தேதியிலிருந்து அடுத்த மார்ச் மாதம் ஒன்றாம் தேதி வரையிலும் இருக்க வேண்டும். அதைப்போலவே, அரிசியினுடைய விலை ஒரு கிலோ விலை இவ்வளவு, பருப்பு விலை இவ்வளவு, புளி விலை இவ்வளவு, இப்படி நிர்ணயம் செய்துவிட்டால் விவசாயிகளுக்கும் சரியான விலை கிடைக்கும், நுகர்வோருக்கும் அடக்க விலையிலே பொருட்கள் கிடைக்கும் என்ற வகையிலே வரும். இது இந்தியாவிலே எங்கும் செய்யாதது என்ற



வகையிலே ஒரு கட்டுப்பாட்டுக்குள், விலையை அடக்கக்கூடிய ஒரு நல்ல திட்டம் என்பதால் நீங்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்ததாக Plastic. அதை use and throw என்று சொல்கிறார்கள். அது எங்கே பார்த்தாலும் pollution–ஐ create செய்து கொண்டிருக்கிறது. ஆகவே, அது குடிப்பதற்கான பொருளுக்காக இருந்தாலும் சரி அல்லது எடுத்துக்கொண்டு போகிற Carry Bags என்று சொன்னாலும் சரி, அவையெல்லாம் தற்போது நிறைய வந்து கொண்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் உண்டு யானைகூட இறந்ததாகப் பத்திரிகையிலே செய்தி வந்து, இப்படிப் பல்வேறு செய்திகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, அதை எதிர்காலத்திலே நிறுத்த வேண்டும் என்று சொல்லக்கூடிய வகையிலே எங்களுடைய பசுமைத் தாயகத்தின் சார்பிலேகூட மரியாதைக்குரிய டாக்டர் அன்புமணி அவர்கள் சிறப்பாகச் செய்து, ஜெர்மனியிலே நடந்த உலக மாநாட்டிலே கலந்துகொண்டு வலியுறுத்தியிருக்கிறார்கள். அந்த வகையிலே தங்களை நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புவது இங்கே பிளாஸ்டிக் பொருட்களை use and throw என்று சொல்கிறார்களே, அவற்றையெல்லாம் தடை செய்ய வேண்டும். இந்தியத் திருநாட்டிலே, அசாம் மாநிலத்திலே தடை இருக்கிறது. நான்கூட அங்கு சென்று வந்தேன். அங்கே இந்தத் திட்டத்தைச் சரியாகப் பின்பற்றுகிறார்கள். அந்த மக்களும் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை இங்கே கொண்டு வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இதுவரைக்கும் ஒன்றுமே செய்யவில்லை. நீங்களே பார்த்திருப்பீர்கள். ஒன்றுமே இல்லை. நான் எதையும் எதிர்பார்த்துச் சொல்லவில்லை; மக்களுடைய குறைகளை நிவர்த்தி செய்வதற்காகத்தான் கேட்கிறேன். இங்கே எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கக்கூடியவர்கள் ஆளும் கட்சி வரிசையிலே இருக்கக்கூடியவர்கள் எல்லாம்கூட என்னிடத்திலே சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே பக்குவமாக எடுத்துச் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்காகத் தாங்கள் மனமுவந்து ஒரு கோடி ரூபாய் என்ற திட்டத்தை (மேசையைத் தட்டும் ஒலி) அறிவிக்க வேண்டும். இது எதிர்காலத்திலே வெற்றிபெற இருக்கக்கூடிய நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய தொகுதிக்கும் பொருந்தும் என்ற காரணத்தாலே உறுப்பினர்கள் எல்லோருடைய

கோரிக்கையாக இங்கே நான் முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். இப்படி நிறையக் கோரிக்கைகள் இருக்கின்றன. அந்தக் கோரிக்கைகளையெல்லாம் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே எழுதிக் கொடுத்து விடுகிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலே, தமிழ்நாட்டிலேயே தர்மபுரி மாவட்டம் மிகமிகப் பின்தங்கிய மாவட்டம். 'ஐரோப்பாவின் நோயாளி துருக்கி' என்பார்கள். அதைப்போலவே தர்மபுரி மாவட்டம் படுத்த படுக்கையிலேயே இருக்கக்கூடிய மிகப்பெரிய, பின்தங்கிய மாவட்டம். எல்லா மாவட்டங்களிலும் மிகப் பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் இருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால், தர்மபுரி மாவட்டத்திலே சொல்லக்கூடிய வகையிலே ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம்கூட இருக்காது. அங்கே பூமிக்கடியிலே flouride என்ற நச்சுத் தன்மை எங்கு பார்த்தாலும் பரவி இருக்கிறது. எங்கள் டாக்டர் ஐயா அவர்கள் கூட தர்மபுரி மாவட்டத்திற்கு வந்தால் சொல்வார்கள், என்னவென்றால் உங்கள் பல்லைப் பார்த்தாலே தெரிகிறது, எல்லாம் பழுப்பு நிறமாக இருக்கிறது, flouride content இருக்கிறது என்று சொல்வார்கள். பார்த்த உடனே சொல்லிவிடுவார்கள். அது உடம்புக்கும் எலும்புக்கும் தீங்கு விளைவிக்கக்கூடியது. கடந்த முறை இந்த மாமன்றத்திலே பல முறை பேசினோம். பலனில்லாமல் போய்விட்டது. எங்களது மாவட்டத்திற்கு வந்த நேரத்திலே முன்னாள் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்; ஆனால் நிறைவேற்றவில்லை. ஆகவே, அந்தப் பின்தங்கிய மாவட்டத்தின்மீது அக்கறை கொண்டு, அங்கே காவிரி ஓடுகிறது, கர்நாடகத்திலேயிருந்து வரும் காவிரி ஆறு தமிழகத்தில் தர்மபுரி மாவட்டத்திலேதான் நுழைகிறது. எனவே, குடிப்பதற்கு அந்த flouride கலந்த தண்ணீரை மாற்றி நிரந்தரமாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கக்கூடிய வகையிலே தர்மபுரி மாவட்டம் முழுவதும் குறிப்பாக என்னுடைய பெண்ணாகரமும் பயனடையக்கூடிய வகையிலே ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, மின் தட்டுப்பாடு எங்கே பார்த்தாலும் இருக்கிறது. ஆட்சிப் பொறுப்பேற்கிற நேரத்திலே தட்டுப்பாடு செய்தார்கள்; அது சூழ்ச்சி. அது நமக்குத் தெரியும். இருந்தாலும்கூட குறைந்த செலவிலே, அதிக மின் உற்பத்தி தரக்கூடிய வகையிலுள்ள ஒகேனக்கல் நீர்மின் திட்டம் நீண்டநாட்களாகக் கிடப்பிலே இருந்து கொண்டிருக்கிறது.





நான்கூட கர்நாடக முதலமைச்சர் அவர்களிடத்திலும், அந்தத் துறையினுடைய அமைச்சர் அவர்களிடத்திலும் பேசினேன். முன்னாள் மத்திய மின் துறை அமைச்சர், மரியாதைக்குரிய என்னுடைய நண்பர் ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்களிடத்திலும் பேசினேன். அவர்களும் திட்டத்தைக் கொடுத்தார்கள். எனவே, நிலுவையிலேயுள்ள அந்தத் திட்டத்தைக் குறைந்த செலவிலே நிறைவேற்றினீர்கள் என்று சொன்னால் நமக்கு நிறையப் பலன் கிடைக்க இருக்கிறது. அதையும் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–30*

அதைப்போலவே, என்னுடைய தொகுதியிலே பாப்பாரப்பட்டி என்பது ஒரு பெரிய பகுதி. *(மணியடிக்கப்பெற்றது)* அதைச் சுற்றி 16 ஏரிகள் இருக்கின்றன. நல்ல மழைக் காலங்களிலேகூட நீர் வரத்து அந்த ஏரிகளுக்கு வருவதில்லை. வரத்து வாய்க்கால்கள் திசை மாறிப் போய்விட்டன. ஆகவே, அங்கே பஞ்சப்பள்ளி கால்வாயிலிருந்து அந்த ஏரிகளை இணைப்பதற்கான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு tender விடும் நிலையிலே இருக்கிறது. முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இப்போதுகூட இருக்கிறார்கள். "கூட்டணி போகாமல் இருந்தால் கொடுப்பேன். கூட்டணி மாறிவிட்டால் கிடையாது". இது அவர் சொன்ன வார்த்தை. ஏங்க கூட்டணிக்கும், இதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது என்று 3 வருடம், 4 வருடமாகத் தொடர்ந்து கேட்டேன். கடைசியில் பண்ணிவிடுகிறேன் என்றார். கடைசியில் கூட்டணி மாறுகின்ற காரணத்தினாலோ என்னவோ, அவர் வாய்ப்பு அளிக்கவில்லை. இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டு, tender விடக்கூடிய நிலையில் இருக்கக்கூடிய காரணத்தினாலே, அந்த பஞ்சப்பள்ளி வாய்க்காலை நிறைவேற்ற வேண்டும்.

அதைப் போலவே, மிகப் பின்தங்கியது என்னுடைய தொகுதி; காடு மலைகள், மேடு பள்ளங்கள் நிறைந்த பகுதி; பரந்த தொகுதி; அடிப்படை வசதிகள் எல்லாம் இல்லாமல் இருக்கிறது. அங்கே, மத்தாளப்பள்ளம் அணைக்கட்டுத் திட்டம் ஒன்றும் நிலுவையிலே இருக்கிறது. அதை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்புறம், ஆச்சாரி கிணத்துப்பள்ளம், அதற்கும் ஒரு tender விட்டு நிலுவையிலே இருக்கிறது. ஒரு சின்ன ஏரி, அதையும் நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அப்புறம், போக்குவரத்துப் பகுதியில் நிறைய ஓடைகள், ஆறுகள்

எல்லாம் இருக்கின்றன. அவை எல்லாம் பாலங்கள் இல்லாத காரணத்தால் போக்குவரத்துக்குப் பாதிப்பாக இருக்கிற காரணத்தினாலே, சானாறுப்பட்டிப் பாலம், செம்மனூர் பாலம், மற்றும் அரகாசஹள்ளி சாலையிலே தர்மபுரி செல்வதற்கு இரண்டு பாலங்கள், ஆகியவற்றை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதியில் எல்லாம் விவசாயம்தான். விவசாயக் கூலிகள்தான். எல்லோருக்கும் பெங்களூருக்குப் போய் பொரி கடலை விற்பது, சிப்ஸ் விற்பது, தள்ளு வண்டியில் பழம் விற்பது போன்ற இந்த மாதிரி தொழில்கள்தான். ஆயிரக்கணக்கான குடும்பங்கள் ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கின்றன. நிரந்தர வாழ்வு அந்த மக்கள் வாழக்கூடிய வகையிலே, அங்கே ஒரு தொழிற்சாலை கட்டாயம் கொண்டு வரவேண்டும். தொழிற்பேட்டை உருவாக்க வேண்டும். அங்கே தீவிரவாதம் எல்லாம் அதிகரித்துக் கொண்டேபோய் இப்போது கட்டுப்படுத்தப்பட்டு இருக்கிறது. இளைஞர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு, நீங்கள் அங்கே ஒரு தொழிற்சாலை கொண்டு வர வேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)* இன்னும் நிறையக் கோரிக்கைகளை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே ........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எழுதிக் கொடுத்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** எழுதிக் கொடுத்திருக்கிறேன். நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு, நல்லாட்சி தொடர வேண்டும். நாங்கள் உறுதுணையாக இருப்போம் என்று கூறி, வாய்ப்புக்கு நன்றிகூறி அமர்கிறேன்.

***மாண்புமிகு திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர், இதய தெய்வம், புரட்சித் தலைவி, அம்மா அவர்களின் முன்னிலையில் நான் பேசுகின்ற முதல் பேச்சு. இங்கே கரும்பு என்று எனக்கு முன்பு பேசிய உறுப்பினர்கள் பேசும்போது குறிப்பிட்டதால் நான் சொல்கிறேன். 5 ஆண்டுக் காலம் நம்முடைய முன்னாள் முதலமைச்சர் அவர்கள், தமிழகத்தினுடைய தொழில் துறையைத் தன்னுடைய கையிலே வைத்துக் கொண்டிருந்தார்கள். பின்தங்கிய இந்தத் தமிழகத்தின் தொழில் துறையை, 3 ஆம் இடத்திற்குக் கொண்டுவந்து திறம்பட நிர்வகித்ததாக இங்கே அவருடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் நேற்றும் குறிப்பிட்டார்கள். சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரையில், நம்முடைய அம்மா ஆட்சிக் காலத்திலே, மிகவும் சிறப்பாக அனைத்து ஆலைகளும் நிர்வகிக்கப்பட்டு, சிறப்பாக,



222389

செம்மையாகச் செயல்பட்டன. அம்மா ஆட்சிக் காலத்திலே இருந்ததைவிட ration கடைகளிலும், பொது market-லும் சர்க்கரை விலை படிப்படியாக உயர்ந்துகொண்டே வந்து, இன்றைக்கு உச்சகட்ட நிலையிலே இருக்கிறது, சர்க்கரை விலையைப் பொறுத்தவரையிலே. ஆனால், கடந்த 5 ஆண்டுக் காலத்திலே முன்னாள் முதலமைச்சரால் நிர்வகிக்கப்பட்ட சர்க்கரை ஆலைத் துறையிலே ஏற்பட்டிருக்கிற மொத்த நஷ்டம் 500 கோடி ரூபாய்க்கு மேலாகியுள்ளது. கடந்த 5 ஆண்டுக் காலத்திலே, சர்க்கரைத் துறையிலே மட்டும், அரசு சார்பிலே நாட்டின் கூட்டுறவு மற்றும் பொது நிறுவனங்கள் மூலம் நடந்த 19 சர்க்கரை ஆலைகளிலே ஏற்பட்டிருக்கிற நஷ்டம் 500 கோடி ரூபாய்க்கு மேலாகியுள்ளது. அதுமட்டுமல்லாமல், கரும்பு விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய பாக்கி கடந்த முதலமைச்சருடைய ஆட்சிக் காலத்திலே 180 கோடி ரூபாய் தொகை. சரியாக, 180 கோடி ரூபாய் தொகை, விவசாயிகளுக்கு இன்னும் பட்டுவாடா செய்யப்படாமல் இருக்கிறது. இதையும் தயவுசெய்து இந்த அவையின் குறிப்பிலே பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று பணிவன்போடு சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் கடந்த 4 நாட்களாக இந்த அவையிலே நடந்து கொண்டிருக்கிறது. இந்தத் தீர்மானத்திலே இருக்கிற முக்கியத்துவம் என்ன என்று சொன்னால் ஆளுநர், ஒவ்வொரு ஆண்டும், சட்டப்பேரவையிலே உரை நிகழ்த்தி அந்த ஆண்டு நடவடிக்கைகளைத் தொடங்கி வைக்கிறார்கள். அதேபோல், ஒவ்வொரு அரசு பதவி ஏற்கும்போதும், ஆளுநருடைய உரையோடுதான் பதவி ஏற்கிறார்கள். ஆனால், இந்த ஆண்டு, ஆளுநர் நிகழ்த்திய உரை பெரும் சர்ச்சைக்கு உள்ளாகி இருக்கிறது. சட்டப்பேரவைக்கு உள்ளேயும் சர்ச்சைக்கு உள்ளாகியிருக்கிறது, சட்டப்பேரவைக்கு வெளியேயும் சர்ச்சைக்கு உள்ளாகியிருக்கிறது. நீதிமன்றங்களின் கதவைப் பலர் தட்டிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இங்கே எனக்குப் பின்னால் பேசுவோர் எதிர்க்கட்சியின் சார்பில் இங்கே பேசப்பட்ட கருத்துகளைத் தொகுத்துச் சொல்ல இருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து, நாளையதினம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே பேச இருக்கிறார். இங்கே, தமிழ் மாநில காங்கிரசின் சார்பிலே, எங்களுடைய கருத்துகளை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2001 மே 31

*பிற்பகல் 1–35*

ஆளுநரின் உரை, அரசாங்கத்தின் அணுகுமுறைகளையும், கொள்கைகளையும் விளக்கும் ஒரு முழுமையான உரையாக அமைந்திருக்கிறது. எனவேதான், இதனை ஒளிவீசும் முழு நிலவுக்கு நான் ஒப்பிட்டு கருத்து கூறியிருக்கிறேன். அதேநேரத்தில், மாநில அரசுக்கு ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியைக் குறிப்பிட்டு அதை உரிய முறையில் கையாண்டு, மக்களை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும் என்றும் உறுதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆளுநரின் அந்த உறுதிமொழி, அல்லலுற்று ஆற்றாது அழுது கண்ணீர் வடிக்கும் அடித்தளத்து மக்களுக்கு ஒரு ஆறுதலாகவும் அமைந்திருக்கிறது. எனவே தான், கோடையிலே இளைப்பாற்றிக் கொள்வதற்கு வாய்த்திருக்கிற ஒரு குளிர்தருவாகவும், தருநிழலாகவும், நிழல் கனிந்த கனியாகவும் இந்த உரையினைக் கருதி, நான் வரவேற்றிருக்கின்றேன்.

*1991* ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சியும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் தேர்தலில் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டன. மக்கள் நம்மீது பற்றுதலும் நம்பிக்கையும் வைத்து வாக்களித்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தை அந்தத் தேர்தலில் அடியோடு புறக்கணித்துவிட்டார்கள். எனவே, ஆற்றல் வாய்ந்த முதலமைச்சராக நம்முடைய முதலமைச்சர் வீற்றிருந்து ஆட்சிப் பொறுப்புகளை நிறைவேற்றினார்கள். எங்களைப் பொறுத்தவரையில், சட்டமன்ற விதிகளின்படி, எதிர்க்கட்சியாக அங்கீகரிக்கப்பட்டு, எதிர்க்கட்சியில் அமர்ந்து கடமைகளை ஆற்றினோம். உலகப் பொதுமறையை வழங்கிய வள்ளுவப் பெருமான் சுட்டிக்காட்டியதைப்போல ஒரு ஆக்கபூர்வமான எதிர்க்கட்சியாகச் செயல்பட்டு, நட்புரிமையோடு நடந்து கொண்டோம்.

"நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்

மேற்சென்று இடித்தற் பொருட்டு."

என்ற குறளுக்கு ஏற்பவும் அவ்வப்போது அரசின் செயல்பாடுகளை எடைபோட்டு எங்களுடைய கருத்துகளை வழங்கி வந்திருக்கிறோம்.

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்

கெடுப்பா ரிலானுங் கெடும்"

என்பதைப் போன்ற சூழ்நிலைகள் ஏற்பட்டுவிடாமல் இருக்க



2001 மே 31] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

எதிர்க்கட்சியின் கடமையை ஆற்றி வந்திருக்கிறோம். எனினும், அடுத்து நடைபெற்ற தேர்தலில் நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. நாங்களும் உங்களோடு கைகோர்க்க முடியவில்லை. மாறாக களத்தில் எதிர்முனையில் நிற்க வேண்டிய கட்டாயம் உருவானது.

*1991*—ல் நடைபெற்ற தேர்தலில் அதிக நம்பிக்கை வைத்து அதிகாரத்தில் அமர்த்தி வைத்து அழகு பார்த்த மக்களுக்கு ஆட்சியின்மீதே ஆத்திரமும், கோபமும் உருவாகிவிட்டது. ஆனால், கோபம் என்பது விரைவில் தணிந்துவிடக் கூடியது என்பதால் உங்கள் மீது மக்களுக்கு ஏற்பட்ட கோபம் மறைந்து, உங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளினால், உங்களுக்கு ஆதரவாக அனுதாப அலை வீசியது. அதன் விளைவாக, எதிர்த் தரப்பினர் எங்கோ அடித்துச் செல்லப்பட்டுவிட்டார்கள். மீண்டும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அறுதிப் பெரும்பான்மை அளித்து ஆட்சிப் பொறுப்பில் அமர வைத்துவிட்டார்கள்.

தேர்தலில் மதச்சார்பற்ற அணியினர் அனைவரும் ஒருமுகமாக முன்னிலைப்படுத்திய நமது முதலமைச்சரே மீண்டும் முதலமைச்சராகப் பொறுப்பேற்று இருக்கிறார்கள். இதனை ஆளுநர் தனது உரையில் மிகச் சரியாகவே குறிப்பிட்டிருக்கிறார். 'இத்தேர்தல் முடிவு தமிழ்நாட்டு மக்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது குறிப்பாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்மீது வைத்துள்ள அசைக்க முடியாத நம்பிக்கையையே காட்டுகிறது' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த வகையில் இது வரலாறு காணாத திட்டவட்டமான மக்கள் தீர்ப்பு என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இந்தப் புகழுரையைச் சிலர் சரியாக உணர மறுக்கிறார்கள்; திரித்துக் கூறுகிறார்கள். எனினும், இதில் பொதிந்துள்ள உணர்வும், உள்ளடக்கமும் இதுதான் என்பதை என்னால் உறுதியாகக் கூறமுடியும்.

ஆங்கிலத்தில் தயாரிக்கப்படும் ஆளுநர் உரையைத் தமிழில் மொழி பெயர்க்கும்போது சில தவறுகள் நேரிடலாம். அதற்காக அத்தகைய அச்சுப் பிழைகளையே பெரிதுபடுத்தி ஆளுநர் உரைக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையைக் கொடுக்காமல் இருக்க முடியாது. ஆளுநரின் ஆங்கில உரையில் '... by exercising their franchise in a free and fair manner' சுதந்திரமான, நேர்மையான முறையில் மக்கள் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 'free and fair' என்பதைத் தமிழில் விருப்பு, வெறுப்பின்றி, சுதந்திரமாக

வாக்களித்தார்கள் என்று போடப்பட்டிருக்கிறது. தேர்தலிலே விருப்பு, வெறுப்பு எதுவும் இல்லாமல் வாக்களிக்க முடியாது. வாக்களிக்கும்போது ஒருவரை விரும்பியும், மற்றவரை வெறுத்தும்தான் வாக்களிக்கிறார்கள். இந்தத் தவறு ஆளுநர் உரையில் தொடக்கத்திலேயே இடம் பெற்றுவிட்டது. எனினும், இத்தகைய குறைபாடுகளைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிடுவதுதான் நமது மரபு. அதைத்தான் வழுவமைதி என்று நாம் இலக்கணத்தில் குறிப்பிடுகிறோம். எனினும், இந்த மரபைச் சில இலக்கியவாதிகளே மீற முற்படுவது வேதனையானது.

சட்டமன்றத்தின் இந்தச் சிறப்புக் கூட்டம் ஆளுநரால் அழைக்கப் பட்டது. அதில் உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்கும் வகையில் முதலில் அவரால் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது. அதற்குப் பின்னர் அவைக்கு வந்து அவர் ஆற்றிய உரைக்காக அவருக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தைக் கொண்டு வந்து அதன்மீது நடைபெறும் விவாதத்தில் பங்குகொண்டு நிறைவேற்ற இருக்கிறோம். "நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்" என்பதற்கேற்ப நம்முடைய நன்றியைத் தெரிவித்து நல்லொழுக்கத்தை நிலைநாட்ட இருக்கிறோம். எனினும் இதில்கூட மாறுபாடு கொண்டு மரபுகளை மீறுபவர்களும் இருக்கிறார்கள்.

ஆளுநர் உரை என்பது அரசாங்கத்தால் தயாரித்து அளிக்கப்படும் ஒன்று என்பதை அனைவரும் அறிவோம். எனவே, ஆளுநர் உரையாற்ற வரும்போது, அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் அந்த உரை ஆற்றப்படும்போது அவையைப் புறக்கணிப்பதோ, ஆளுநர் தனது உரையைத் தொடங்கும் முன்னர் அவையில் எழுந்து நின்று அரசுக்கு எதிர்ப்பையும் கண்டனத்தையும் தெரிவித்து, அறிக்கை வாசிப்பதோ, வெளிநடப்புச் செய்வதோ இதற்கு முன்னர் பல நேரங்களில் நடைபெற்றிருக்கின்றன. அவ்வாறு எதிர்ப்பு தெரிவிப்பதை மரபு மீறல் என்றோ, ஜனநாயக நெறிமுறைகளுக்கு விரோதமான செயல் என்றோ நான் குறிப்பிடவில்லை. ஆனால், முதலமைச்சருக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்த ஆளுநரின் செயலைக் கண்டித்து அவையைப் புறக்கணிப்பதுதான் அரசியல் சட்டத்தை மதிக்காத ஜனநாயகத்திற்கு எதிரான மரபு மீறிய செயல் என்று நான் சுட்டிக்காட்டினேன். ஏனெனில், "அரசமைப்புச் சட்டத்தையும், மற்ற சட்டங்களையும் என் சக்தி முழுவதையும் பயன்படுத்திப் போற்றுவேன் என்றும், பாதுகாப்பேன் என்றும், காத்து நிற்பேன் என்றும் தலைமை நீதிபதியின் முன்னிலையில் உறுதிமொழியும், பதவிப் பிரமாணமும் எடுத்துக் கொண்டிருப்பவர் ஆளுநர். அவர் அந்தக் கடமையிலிருந்து விலகிக் கொள்வது என்பது,



எந்தச் சூழலிலும் இயலாத காரியம். எனவேதான், அரசியல் சட்ட வழிப்பட்ட தனது கடமையை முறையாக நிறைவேற்றி வைத்த ஆளுநரின் செயலில் குற்றம் காண்பதும், அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதும் அரசியல் சட்ட விதிமுறைகளுக்கே எதிரானவையாக அமைந்துவிடுகின்றன.

பிற்பகல் 1–40

எந்த அரசியல் சட்டத்தைப் போற்றிப் பாதுகாப்பதாக நாம் உறுதிமொழி எடுத்துக்கொண்டு உறுப்பினர்களாக அமர்ந்திருக்கிறோமோ அந்தச் சட்டத்தையே அவமதிக்கும் வகையில் நடந்துகொள்ளும் உரிமை நமக்கு இல்லை. அந்த அடிப்படையில்தான் ஒரு அரசியல் சட்டப் பிரிவிற்குத் தீயிட்டுக் கொளுத்திய பல சட்டமன்ற உறுப்பினர்களின் பதவிகள் பறிக்கப்பட்டிருக்கின்றன. பேரவைத் தலைவர் எடுத்த அந்த நடவடிக்கை சரியானதுதான் என்று நமது உயர்நீதிமன்றமும் உறுதிப்படுத்திவிட்டது. எனவே, இத்தகைய செயல்களைத் தவிர்த்து, நல்ல ஜனநாயக மரபுகளைக் கட்டிக் காக்க வேண்டும் என்று நான் எல்லோரையும் கேட்டுக்கொள்கின்றேன்.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் சட்டப்பிரிவு எரிப்புப் போராட்டத்திலே தாங்களும் கலந்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் கலந்துகொண்ட காலம் வேறு. நீங்கள் கலந்துகொண்ட காலம் வேறு.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. எனினும், பெரியவர்கள் செய்தால் பெருமாள் செய்ததைப்போல, என்று கருதி, அவர்களை மேலும் விமர்சிக்காமல் விட்டுவிடுகிறேன்.

அதேநேரத்தில், அவர்கள் எழுப்பியுள்ள அரசியல் சட்டப் பிரச்சினையை அவ்வளவு எளிதாக நாம் ஒதுக்கிவிட முடியாது. தேர்தலில் நிற்கும் தகுதியை இழந்த ஒருவரை முதலமைச்சராக ஆக்கியிருப்பது, அரசியல் சட்ட விதிமுறைகளுக்கு எதிரானது என்ற முடிவுடன், ஆளுநர் அவர்களின் அந்தச் செயலைக் கண்டித்து அவர் உரையாற்றும்போது அவையில் அமர்ந்து கேட்பதில்லை என்ற நிலையை தி.மு.க. தலைமையிலான கட்சிகள் எடுத்திருக்கின்றன. அதன்படியே அவையைப் புறக்கணித்து விட்டன. ஆனால், ஆளுநரின் செயல் எவ்வாறு சட்டத்திற்குப் புறம்பானது என்பதை அவர்கள் விளக்கவேயில்லை.

அரசியல் சட்டப்படி முதலமைச்சரையும், அவருடைய பரிந்துரையின் பேரில் மற்ற அமைச்சர்களையும் நியமிக்க வேண்டியது, ஆளுநருக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டாயக் கடமையாகும். அந்தக் கடமையைத் தட்டிக் கழிக்கவோ, தவிர்க்கவோ முனைந்தால் அவர் அரசியல் சட்ட விதிமுறைகளை மீறியவராக ஆகிவிடுவார். அவ்வாறு செயல்படுவது ஆளுநராகப் பொறுப்பேற்பதற்கு முன்னர் அவர் எடுத்துக்கொண்ட பதவிப் பிரமாணத்திற்கு எதிரானதாகவும் அமைந்துவிடும். இதில் அரசியல் சட்டத்தில் வரையறுத்துக் கூறப்படாத விஷயங்களுக்கு பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் நடைமுறைகளையும், மரபுகளையும் நாம் பின்பற்றுகிறோம். அந்த அடிப்படையில் மக்களிடம் கேட்டு, அந்த மக்கள் அளித்த திட்டவட்டமான, தெளிவான தீர்ப்பின்படி சட்டமன்றத்தின் அறுதிப்பெரும்பான்மை பெற்ற கட்சியான அ.இ.அ.தி.மு.க.வால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவருக்குத்தான் முதலமைச்சர் என்று பதவிப் பிரமாணத்தை ஆளுநர் செய்து வைத்தார். அந்தக் கட்டத்தில் பெரும்பான்மைக் கட்சியின் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்ற உண்மையைத் தெரிவிக்கும் கடிதம் மட்டுமே ஆளுநருக்குத் தேவைப்படுகிறது. வேறு எந்தப் பிரச்சினை குறித்தும் பரிசீலனை செய்யும் தேவையோ, கட்டாயமோ ஆளுநருக்கு இல்லை.

தலைமைத் தேர்தல் கமிஷனர் கில் அவர்கள்கூட, இதைப்பற்றிக் கருத்துக் கூறும்போது, தேர்தலை நடத்தி முடிப்பதுதான் தேர்தல் கமிஷனின் அதிகார வரம்பிற்கு உட்பட்டது. முதலமைச்சருக்கும், மற்ற அமைச்சர்களுக்கும் பதவிப் பிரமாணம் செய்து வைப்பது எங்களுடைய அதிகார வரம்பிற்கு உட்பட்டது அல்ல. அது அரசியல் சட்டமுறைப்படி ஆளுநருடைய அதிகார வரம்பிற்கு உட்பட்டது. எனவே, அதில் நாங்கள் கருத்துக் கூற முடியாது என்று தெளிவாகத் தெரிவித்துவிட்டார்கள்.

முதலமைச்சருக்கு எதிராகத் தகுதியின்மைப் பிரச்சினையை ஆளுநரிடம் யாரேனும் எழுப்புவதற்கும் வாய்ப்பு இல்லை. அவையில் ஓர் உறுப்பினராக இருப்பதற்கு எதிராகத்தான் தகுதி இழப்புப் பிரச்சினையை எழுப்பி ஆளுநருக்கு விண்ணப்பிக்க அரசியல் சட்டத்தில் இடமிருக்கிறது. எனினும், அத்தகைய முறையீட்டின்மீது ஆளுநரே உடனடியாக, தன் கருத்துப்படி முடிவு எடுக்கவும் முடியாது. அதனைத் தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பி, அதனுடைய கருத்தைக் கேட்டு, அதையே தன்னுடைய முடிவாக ஆளுநர் அறிவிக்க வேண்டும். Article–192படி.





ஒருவரைச் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுப்பதற்கோ, சட்டமன்ற உறுப்பினராக அவர் தொடர்வதற்கோ தகுதியிழந்தவராகப் பாராளுமன்றம் இயற்றிய எந்தச் சட்டத்தின் அடிப்படையிலாவது தீர்ப்புக் கூறப்பட்டிருந்தால், அவரை அவ்வாறு தகுதியிழந்தவர் என்று எடுத்த எடுப்பிலேயே அறிவிப்பதற்கு எவருக்கும் அதிகாரம் இல்லை. மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின்கீழ் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஒருவர் தண்டனை பெற்றிருந்தால், தேர்தலில் போட்டியிடும் தகுதியை இழக்கிறார் என்று கூறப்படுகிறது. இது அரசியல் சட்டத்தின் பிரிவு 191 (ஈ)–ல் கூறப்பட்டிருக்கிறது. ஆயினும், அவ்வாறு நீதிமன்றம் அளித்த தீர்ப்பைத் தொடர்ந்து அவர் தகுதியிழந்தவர் என்று அறிவிப்பதற்கும், அரசியல் சட்டத்தின் 192–வது பிரிவில் ஒரு நடைமுறை வகுக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஒருவர் தகுதியிழந்தவர் என்று அறிவிப்பதற்கு ஆளுநருக்குத்தான் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. தகுதியிழப்பு சம்பந்தமாக அவரிடம் கொடுக்கப்படும் விண்ணப்பத்தை அவர் இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். தேர்தல் ஆணையம், சம்பந்தப்பட்ட நபர் தனது விளக்கத்தை அளிக்க சட்டப்படியான வாய்ப்பை வழங்கி விரிவான, முறையான விசாரணைக்குப் பின்னரே தான் எட்டியிருக்கும் கருத்தை ஆளுநருக்கு அனுப்பி வைக்கும். ஆளுநர் அந்தக் கருத்தையே தன்னுடைய முடிவாக அறிவிப்பார். அவருடைய முடிவே இறுதியானதாகும். அதனை எதிர்த்து யாரும் நீதிமன்றத்திற்குச் செல்ல முடியாது. இந்த நடைமுறை எதுவும் நமது முதலமைச்சரின் தகுதியிழப்பு குறித்த பிரச்சினையைப் பொறுத்தவரையில் பின்பற்றப் படவில்லை. மாறாக, அவர் தேர்தலிலே போட்டியிட வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தபோது, தேர்தல் கமிஷன் அனுப்பி வைத்த ஒரு சுற்றறிக்கையையே ஆணையாக ஏற்று, தேர்தல் அதிகாரிகளால் முதலமைச்சர் அவர்களின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. அரசியல் சட்டத்திற்குப் புறம்பான அந்தச் செயலை ஏற்றுக்கொண்டு ஆளுநர் செயல்படவேண்டும் என்று சிலர் எதிர்பார்க்கிறார்கள். இது எந்தவகையிலும் ஏற்கத்தக்கதல்ல.

அண்மையில் தலைமைத் தேர்தல் Commissioner M.S. Gill அவர்கள், ஐதராபாதில் செய்தியாளர்களிடம் பேசும்போது, மற்றொரு முக்கியமான கருத்தையும் தெரிவித்திருக்கிறார்கள். "தற்போது உள்ள தேர்தல் சட்டத்தில் பல குறைபாடுகளும், குளறுபடிகளும் இருப்பதை மாற்றியமைத்து அதனை வலுப்படுத்தி, எளிமைப்படுத்த வேண்டியது உடனடித் தேவையாக இருக்கிறது. எனவே அதற்குரிய சட்டத் திருத்தங்களைப் பாராளுமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்ற

வேண்டுமென்று மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து கடிதம் எழுதியிருக்கிறோம். உடனடியாக அவர்கள் நிறைவேற்றுவார்கள் என்று நம்புகிறேன்" என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

*பிற்பகல் 1–45*

மேலும் இப்போதுள்ள சட்டத்தில் ஒரு முக்கியமான குறைபாடு சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது. சட்டமன்றத்தில் உறுப்பினராக இருப்பவர், இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்றால், அதன் மூலம் தகுதியிழப்பிற்கு ஆளாகிறார். அவருடைய தகுதியிழப்பு தொடர்பாக, பிரச்சினை ஆளுநரிடம் எழுப்பப்பட்டு, தீர்ப்பைப் பெறுவதற்கு அரசியல் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆனால், சட்டமன்றத்தில் உறுப்பினராக இல்லாதவரின் அத்தகைய தகுதியின்மையைத் தீர்மானிக்க எந்த ஏற்பாடும் சட்டத்தில் இல்லை. இது அரசியல் சட்டத்தின் சமத்துவக் கோட்பாட்டுக்கு எதிரானது. சட்டமன்றத்தில் உறுப்பினராக இல்லாத ஒருவருக்கு அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து வைக்கலாம் என்றும், அவ்வாறு பதவிப் பிரமாணம் செய்துவைக்கப்பட்ட நாளிலிருந்து 6 மாதங்களுக்குள் அவர் சட்டமன்றத்தின் உறுப்பினராக வராவிட்டால், அமைச்சர் பதவி தானாகவே போய்விடும் – ceased to be a Minister – என்றுதான் 164(4) அரசியல் சட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது. மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்பதைத் தூக்கிப் பிடித்து வந்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர். அத்துடன் ஆட்டுக்குத் தாடியும், நாட்டுக்கு கவர்னரும் அவசியம் இல்லை என்று வாதிட்டு வந்தவர்கள்.

ஒருவர் ஆளுநராக வருவதற்கு நமது அரசமைப்புச் சட்டத்தில் இரண்டு தகுதிகள் மட்டுமே நிர்ணயிக்கப்பட்டுள்ளன. ஒன்று அவர் இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும். இரண்டாவது அவர் 35 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும். இந்தத் தகுதிகள் உள்ள எவரையும் குடியரசுத் தலைவர் ஆளுநராக நியமிக்கிறார். அவ்வாறு நியமிக்கப்படும் ஆளுநருக்கு முதலமைச்சர் யார் என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை அரசியல் சட்டம் வழங்கவில்லை. மாறாக, மக்களுடைய தீர்ப்புதான் அதைத் தீர்மானிக்கிறது. மக்கள் அளித்த தீர்ப்பே – mandate – தலையாயது.

புரோகிதர்கள் மணமக்கள் யார் என்பதைத் தீர்மானிக்க முடியாது. தேவலோகத்தில் தீர்மானிக்கப்படுவதாகக் கருதப்படும் திருமணங்களைத்தான் புரோகிதர்கள் நடத்தி வைக்க முடியும். அவர்கள் நடத்தி வைக்கும் சடங்குகளும், சம்பிரதாயங்களும் திருமணத்தை, மணமக்களை உலகறியச் செய்வதற்கு உதவுகின்றன.



அதேபோன்றுதான் மக்கள் மன்றம் தீர்மானித்த முதலமைச்சருக்கும், மற்றவர்களுக்கும் பதவிப் பிரமாணம் என்ற சம்பிரதாயச் சடங்குகளை, ஆளுநர் என்னும் புரோகிதர் செய்து வைக்கிறார். அதற்குமேல் அதற்கு எந்த முக்கியத்துவமும் இல்லை.

வெறும் கல்லாக இருக்கும்போது யாரும் கையைத் தூக்கி வணங்குவது இல்லை. அந்தக் கல்லை சாமி சிலையாகச் செதுக்கி, புனித நீரால் கழுவி, பிரதிஷ்டை செய்து, கோவிலுக்குள்ளே வைக்கப்பட்ட பிறகுதான் வெளியே நின்று மக்கள் அதனை மிகுந்த பயபக்தியோடு வணங்குகிறார்கள். வெறும் கல் தெய்வமாவதைப்போல, மக்கள் மன்றத்தின் தீர்ப்பாலும், ஆளுநரின் பதவிப் பிரமாண சம்பிரதாய நடவடிக்கையினாலும், அதிகாரமும், கம்பீரமும் கொண்ட முதலமைச்சராகவும், அமைச்சர்களாகவும் உருவெடுத்து வர முடிகிறது. சட்டப்படியே நடைபெற்ற இந்தச் செயலில் குற்றம் காண்பது என்பது வருந்தத்தக்க ஒன்றாகும்.

கம்பநாடன் குறிப்பிட்டதைப்போல, தசரதனால் காட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்ட இராமபிரானின் தோள்களைக் கண்ட மக்கள் தோள்களையே கண்டார்கள், கால்களைக் கண்ட மக்கள் கால்களையே கண்டார்கள். இங்கு எதிலேயும் குற்றத்தைக் காணும் இயல்பே கொண்டவர்கள் ஆளுநரின் செயல்பாட்டிலேகூடக் குற்றத்தைக் காண்கிறார்கள்.

உண்மையில் இங்கிலாந்து நாட்டு மன்னருக்கு இருக்கும் மரியாதை தான் இங்குள்ள ஆளுநருக்கும் இருக்கிறது. அங்கு மன்னருக்கு எதிராக யாரும் எந்தவிதமான வழக்கும் தொடுக்க முடியாது. இங்கேயும் ஆளுநரின் நடவடிக்கைக்கு எதிராக யாரும், எந்த நீதிமன்றத்திற்கும் செல்லமுடியாது. குற்றவியல் மற்றும் உரிமையியல் வழக்குகளைக்கூட அவருக்கு எதிராகத் தொடுக்க முடியாது. எந்த நீதிமன்றமும், அவருக்கு எதிராக கைது warrant பிறப்பிக்க முடியாது. இங்கிலாந்து நாட்டு மன்னர் தவறு ஏதும் செய்யமுடியாது. The King can do no wrong. எனவே, அவர்மீது வழக்கு ஏதும் தொடுக்க முடியாது. அதே நிலைதான் இங்கே ஆளுநருக்கும் இருக்கிறது.

அதேபோன்று மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைச்சர்களாக ஆட்சிப் பொறுப்பிற்கு வருகிறவர்கள்மீதும், அவர்களுக்கு ஆலோசனை கூறுகின்ற உயர்மட்ட அதிகாரிகள்மீதும், அவர்கள் வகிக்கும் பொறுப்புகளின் அடிப்படையில், எடுக்கப்பட்ட எந்த நிர்வாக முடிவிற்காகவும், அவர்கள்மீது குற்றவியல் வழக்குகளைத் தொடுப்பது

ஈடுசெய்ய முடியாத இழப்புகளை ஏற்படுத்தும். நிர்வாகத்தை நிலைகுலையச் செய்யும்.

கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பழிவாங்கும் அத்தகைய பல நடவடிக்கைகளால் மாநில அரசின் உயர் அலுவலர்களுக்கும், காவல் துறையினருக்கும் மன உறுதியும், ஊக்கமும் குன்றியிருப்பது, இந்த அரசின் கவனத்திற்கு வந்திருப்பதாகவும், எனவே, I.A.S., I.P.S. மற்றும் மாநிலத்தின் பிற பணிகளைச் சார்ந்த பணியாளர்களின் மன உறுதியை விரைவிலே மீட்க இவ்வரசு உறுதி பூண்டிருப்பதாகவும், ஆளுநர் உரையிலே கூறியிருப்பது வரவேற்கத்தக்கதாக அமைந்திருக்கிறது.

மாநிலத்தில் நிலவிவரும் தீவிரவாதம், பிரிவினைவாதம், மற்றும் அனைத்துவகையான பயங்கரவாதத்தையும் இவ்வரசு உறுதியாக அடக்கி ஒடுக்கும் என்ற உத்தரவாதத்தை அளித்திருப்பதும், சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடிக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்றும், அவனுக்கு உதவியாகச் செயல்படும், தமிழ்நாடு விடுதலைப் படை, தமிழ்நாடு மீட்புப் படை போன்ற பெயர்களில் இயங்கிவரும் தீவிரவாத, தேசவிரோத மற்றும் பிரிவினைவாத சக்திகளை ஒடுக்கவும் அரசு உறுதிபூண்டுள்ளது என்றும், சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கின்ற மக்களை அச்சுறுத்தியும், துன்புறுத்தியும் அடாவடிகளில் ஈடுபட்டு கொடுஞ்செயல் புரிந்து வரும், கொள்ளைக் கூட்டங்களை இவ்வரசு இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கும் என்றும் கூறியிருப்பது நம்பிக்கையூட்டுவதாக அமைந்திருக்கிறது.

நாட்டில் பல பகுதிகளிலும், நாள்தோறும் நடைபெற்றுவரும் வழிப்பறி, கொள்ளை, கொலை, கற்பழிப்பு போன்ற குற்றங்களில் ஈடுபட்டு வரும் குண்டர்கள் மீதும், சுயநல இலாப வேட்டைக்காகச் சட்டத்தைக் கையில் எடுத்துக்கொண்டு கொடுஞ்செயல் புரிந்து வரும் சமூக விரோதிகளுக்கு எதிராகவும், எந்தவிதத் தயக்கமும், தயவும் காட்டாமல் கடுமையான நடவடிக்கை எடுத்து, பொதுமக்கள் மத்தியிலே பாதுகாப்பு உணர்வையும், நம்பிக்கையையும் ஏற்படுத்த வேண்டியது இந்த அரசின் உடனடிக் கடமை என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

*பிற்பகல் 1–50*

மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகளினால், நமது உள்நாட்டுத் தொழில்கள் அனைத்தும் பாதிக்கப்பட்டுவிட்டன. வெளிநாடுகளிலிருந்து ஈர்க்கப்படும் மூலதனம், பெரும்பாலும் யூக



பேரங்களுக்கே பயன்படுத்தப்படுகின்றன. தொழில்களைத் தொடங்கி அதிகமான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும், நம்முடைய விவசாயிகளை வாழ வைப்பதற்கும் அவை பயன்படவில்லை. நம் நாட்டில் விளையக்கூடிய பொருட்களுக்கு மதிப்பு எதுவும் இல்லாமல், வெளிநாட்டுப் பொருட்கள் இங்கே குவிக்கப்படுகின்றன. அவை குறைந்த விலையிலே கொடுக்கப்படுகின்றன. இங்கு பல தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்டு குவிக்கப்பட்ட பொருட்கள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கின்றன. தென்னை, தேயிலை, ரப்பர், மிளகு, காபி, மஞ்சள், பாக்கு போன்ற பொருட்கள் அனைத்தும் ஏற்றுமதிக்கு வழி இல்லாமல் விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்டு இருக்கிறது. சீனாவைப் போன்று ஏற்றுமதிகளைப் பெருக்கி, இறக்குமதிகளை சுருக்கிக் கொள்ளும் வகையில், நமது பொருளாதாரக் கொள்கை அமையவில்லை. அத்துடன் 1,429 வகையான பொருள்கள் தங்குதடையின்றி, அளவுக் கட்டுப்பாடு இன்றி நம் நாட்டிற்குள் நுழைய மத்திய அரசால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதனுடைய விளைவாக சிறு தொழில்கள் அனைத்தும் சீரழிந்துவிட்டன. பெரும்பாலான தொழிற்சாலைகள் மூடப்பட்டுவிட்டன. தொழில் துறையில் மந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. விவசாயம் அனைத்தும் பாதிக்கப்பட்டுள்ளது. ஏற்றுமதி வர்த்தகம் நாளுக்குநாள் குறைந்து கொண்டே செல்கிறது. காட்டாற்று வெள்ளம் போல் கட்டவிழ்த்துவிடப்பட்ட கவர்ச்சி மிக்க வெளிநாட்டுப் பொருட்கள் அனைத்தும் குறைந்த விலையில் நமது சந்தைகளில் விற்பனைக்காகக் குவிக்கப்படுகின்றன. மக்களோ வாங்கும் சக்தியை இழந்து வறுமையின் ஓரத்திற்கே தள்ளப்பட்டு வருகிறார்கள். இந்நிலையில் தமிழ்நாட்டிலுள்ள சிறு தொழில் நிறுவனங்களின் பரிதாபத்தைப் போக்க, ஆளுநர் உரையில் ஓர் அறிவிப்பு வெளியிடப்பட்டு இருக்கிறது.

அரசுக்குத் தேவையான பொருட்களைக் கொள்முதல் செய்வதில், சிறு தொழில் நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டு வரும் முன்னுரிமையை முந்தைய அரசு தட்டிப் பறித்து விட்டது. அதன் விளைவாக, சிறுதொழில் துறையில் இங்கே உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் அனைத்துக்கும் கிராக்கி இல்லாமல் போனது. குறைந்த விலைக்கு அதே பொருட்களை வெளியேயிருந்து கொண்டுவந்து குவித்துக் கொண்டிருந்தார்கள். டான்சி, டான்செம் போன்ற அரசுத் துறை நிறுவனங்களும் ஆட்டம் கண்டுவிட்டன. இலட்சக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து வந்த கட்டுமானத் தொழில், மற்றும் வீடுகள், மனைகள் வாங்குதல், விற்றல் ஆகிய தொழில்கள் அடியோடு பாதிக்கப்பட்டுவிட்டன. சிமெண்ட் தொழிலில் நேர்மையற்ற வணிக நடைமுறை புகுத்தப்பட்டு,

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2001 மே 31

விலையேற்றம் அதிகமாகிவிட்டது. இவை அனைத்தையும் சீரமைக்கும் உத்தரவாதத்தை ஆளுநர் உரையில் இந்த அரசு கொடுத்து இருக்கிறது.

மின் உற்பத்தியிலும் கடந்த 5 ஆண்டுகளில் குறைந்த அளவிலான 458 மெகாவாட் மட்டுமே அதிகரிக்கப்பட்டு உள்ளது. ஆனால், 1991 முதல் 1996 வரை மின் உற்பத்தி 968 மெகாவாட் அதிகரிக்கப்பட்டு இருக்கின்றது. அதே முனைப்புடன் மின் உற்பத்தி அதிகரிக்க இந்த அரசு உறுதிபூண்டுள்ளது என்று கூறி இருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக இருக்கிறது.

குறைவான நேரமே இருக்கின்ற காரணத்தால், நான் சில பிரச்சினைகளை, தமிழ்நாட்டில் இருக்கிற பிரச்சினைகள், எங்கள் மாவட்டத்தில் இருக்கிற பிரச்சினைகள், குறிப்பாக என்னுடைய தொகுதியிலே இருக்கிற பிரச்சினைகள் சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தொண்டாமுத்தூர் தொகுதி என்பது ஒரு குட்டி இந்தியா போல— miniature India—போன்றது. ஏனென்று கேட்டால், அது மாநகரப் பகுதியிலே இருக்கிறது. மாநகரத்திலே இருக்கிற 11 வட்டங்கள் அந்தத் தொகுதியிலே இடம் பெற்றிருக்கின்றன. கிட்டத்தட்ட 1 இலட்சத்து 18 ஆயிரம் வாக்காளர்கள் அங்கே இருக்கிறார்கள். அதையொட்டி மாநகர எல்லைகளிலே இருக்கின்ற பேரூராட்சிகள், அதைத் தாண்டி குக்கிராமங்கள், அதையும் தாண்டிப் போவீர்களேயானால், அடர்த்தியான நேர்த்திமிக்க காடுகள் இருக்கின்றன. மலையும், மலைசார்ந்த இடம் இருக்கிறது. ஆக, அது ஒரு குட்டி இந்தியா என்கிற காரணத்தினாலே, அங்கே பழங்குடி மக்கள் வாழ்கிறார்கள். ஏராளமாக ஆதிதிராவிட சமுதாயத்தைச் சார்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கிறார்கள். மிகவும் பின்தங்கிய மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்கள், சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். இப்படி இருக்கிற இந்தத் தொகுதியிலே சில பிரச்சினைகள், உடனடியாகத் தீர்த்து வைக்கப்பட வேண்டிய நிலையிலே இருக்கின்றன. குறிப்பாக குடிநீரைப் பொறுத்தவரையில், கோவை மாநகருக்கு சிறுவாணித் தண்ணீர் அந்தப் பகுதி வழியாகத்தான் வருகிறது. பல கிராமங்களுக்கு சிறுவாணித் தண்ணீர் கொடுக்கப் பட்டிருந்தாலும்கூட, அந்தத் தண்ணீர் அனைத்துக் கிராமங்களுக்கும் கிடைப்பதில்லை என்கிற குறைபாடு இருந்து கொண்டிருக்கிறது. சரியாகத் தண்ணீர் வருவதில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல இன்னொரு பகுதியிலே, பெரியநாயக்கன்பாளையம் வட்டாரத்திலே இந்தக் குறைபாட்டைத்தான் சொல்லிக்



2001 மே 31] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

கொண்டிருக்கிறார்கள். அங்கே அத்திக்கடவு தண்ணீர் சில பகுதிகளுக்குச் சரியாக வருவதில்லை. பில்லூர் தண்ணீர் சரியாக வருவதில்லை என்று சொல்கிறார்கள். அந்தக் குறையினை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குடும்பத்திற்கு ஒரு வீடு என்று ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இது மிகவும் வரவேற்கத்தக்க விஷயம். கண்டிப்பாக இந்த அரசு அதை நிறைவேற்றும் என்று நம்புகின்றேன். அங்கே வாழ்கின்ற ஆதிதிராவிட மற்றும் பின்தங்கிய சமுதாய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் வீட்டுமனைப் பட்டா இல்லாமல் நிறையப் பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் வீட்டுமனைப் பட்டா வழங்கவும், வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, அங்கே ஆலைகள், பெரிய ஆலைகள் இருக்கின்றன. பெரிய நூற்பாலைகள் இருக்கின்றன. இயந்திரத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. சிறிய ஆலைகளும் இருக்கின்றன. பெரும்பாலான தொழிற்சாலைகள், ஒன்று மூடப்பட்டு இருக்கின்றன அல்லது தத்தளித்துக் கொண்டிருக்கின்றன. அந்த நிலைமையை நீங்கள் சொல்லியிருந்தாலும், ஆளுநர் உரையிலே குறிப்பிட்டு இருக்கிறீர்கள். அந்த நிலையை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும். தொழிலாளர்கள் அத்தனை பேருக்கும் வேலை கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–55*

விவசாயிகளைப் பொறுத்தவரையில், நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன. குறிப்பாக அந்தப் பகுதியில் இருக்கிற பிரச்சினை, யானைத் தொல்லை. அடர்த்தியான நேர்த்திமிக்க காடுகள் இருக்கின்றன என்றாலே வன விலங்குகள் வந்துவிடுகின்றன. வன விலங்குகள் நாட்டு மக்கள் வாழ்கின்ற பகுதிக்கு வந்து தொல்லைகள் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. பத்திரிகைச் செய்தியிலும் படித்து இருப்பீர்கள். இரண்டு பகுதிகளில் தாக்குதல் இருக்கிறது. ஆனைக்கட்டி பகுதியில் உள்ள செய்தி மட்டும் பத்திரிகையில் வந்தது. அதேபோல, தொண்டாமுத்தூர் தொகுதியில் இருட்டுப்பள்ளம், சாருவேர் போன்ற பகுதிகளில் யானைகள் மற்றும் வன விலங்குகள் எல்லாம் உள்ளே நுழைந்து அங்கேயுள்ள பயிர்களை எல்லாம் அழித்து மக்களுக்குத் தொல்லை கொடுத்துக்கொண்டிருக்கின்றன. அதற்கு ஏதாவது ஒரு வழி கண்டுபிடித்தாகவேண்டும். யானைகள் உள்ளே வராமல் இருப்பதற்கு ஏதாவது வழி செய்ய வேண்டும். நான்கூட

இங்கே இருந்த முன்னாள் அமைச்சரிடத்திலே பேசும்போது அவர்கள் சொன்னார்கள். முடிந்தால் அந்த யானைகளை எல்லாம் பிடித்துக்கொண்டுபோய் முதுமலையில் விட்டுவிடுங்கள் என்று சொன்னார்கள். அது எந்த அளவிற்குச் சாத்தியம் என்று எனக்குத் தெரியவில்லை. முடிந்தால் அது சாத்தியமாகுமா என்று பாருங்கள். இல்லாவிட்டால், அவர் சொன்ன இன்னொரு யோசனை, நரசிபுரம் பகுதியில் 400 ஏக்கர், 500 ஏக்கர் நிலம் இருக்கிறது. அங்கே கொண்டுவந்து விட்டுச் செல்லுங்கள் என்று சொன்னார். அதுவும் தொல்லையாகத்தான் முடியும் என்பது எனது எண்ணம். அது இல்லாவிட்டாலும்கூட, எப்படியும் மக்கள் வாழ்கிற பகுதிக்கு அவை வராமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

சமீபத்தில் அங்கே துவம்பதி கிராமத்தில் ஒரு ஏழை கட்டடத் தொழிலாளியினுடைய குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் யானையால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டார். செய்தி பத்திரிகையில் வந்திருக்கிறது. அதற்காக நீங்களும் ஒரு தொகை அறிவித்திருக்கிறீர்கள். நான் 2 இலட்சம் ரூபாய் கொடுக்கவேண்டுமென்று கேட்டேன். 2 இலட்சம் ரூபாய் இல்லாவிட்டாலும்கூட, ஒரு இலட்சம் ரூபாயாவது அந்தக் குடும்பத்திற்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது, தமிழ்நாட்டில் மிக முக்கியமான பிரச்சினை, தேங்காய், தேயிலை எல்லாம் விலை குறைந்துவிட்டது என்று எல்லோரும் பேசியிருக்கிறார்கள். தேங்காயிலிருக்கிற பிரச்சினை என்னவென்றால் 3 ஆண்டுகளுக்கு முன்பு 6-3/4 ரூபாய், 7 ரூபாய் என்று எங்களுடைய தோட்டங்களில் விற்பனையாகிக்கொண்டிருந்த தேங்காய், இன்றைக்கு ரூ.2–00, ரூ.2–30, ரூ.2–50–க்குக் குறைந்துபோய்த் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களும், நானும் அன்றையதினம் ஜனாதிபதி அவர்களைச் சந்தித்து முறையிட்டோம். மனு கொடுத்தோம். மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. சுந்தர்லால் பட்வா அவர்களைச் சந்திக்குமாறு கூறினார்கள். குறைந்தபட்சம் குவிண்டாலுக்கு ரூ.4,100 கொள்முதல் விலையாக 'TANFED' மூலமாக வாங்கலாம் என்று சொன்னோம். அது, 4,100 ரூபாய் இல்லாவிட்டாலும் ரூ.3,250 கொடுத்து 'NAFED' மூலமாக 'TANFED' கொள்முதல் செய்யலாம் என்று சொன்னோம். இங்கேயும் செய்கிறார்கள். கேரளாவிலும் செய்கிறார்கள். அதிலே பலவிதமான குளறுபடிகள் நடந்திருப்பது உங்களுக்குத் தெரியும். ஆரம்பக் கட்டத்திலே, விவசாயிகள் எந்தவிதமான இலாபமும் அனுபவிக்கவில்லை. அது பூராவும் இடைத்தரகர்களுக்குப்



போய்விட்டது. இப்போது விவசாயிகளுடைய கொப்பரையை வாங்க ஆரம்பித்திருக்கிறார்கள். அதை நிறுத்தும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. அது இந்த அரசால் அல்ல. இதற்கு முன்பிருந்த அரசாங்கம் பிப்ரவரி மாதத்திலிருந்து வாங்கவில்லை. அதற்குப் பலவிதமான காரணங்கள் சொல்கிறார்கள். மத்தியில் இருந்து 'NAFED' வாங்கும்படி நமக்கு ஆணை பிறப்பிக்கவில்லை என்று காரணம் சொல்கிறார்கள். அது உண்மையல்ல. ஏனென்று சொன்னால், கேரளாவில் இன்னும் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, கொப்பரையைக் கொள்முதல் செய்யக்கூடாது என்று இப்போது வந்திருக்கிற அரசாங்கம் ஆணை பிறப்பித்திருப்பதாகக் கிராமங்களில் இப்போது பிரச்சாரம் செய்யப்படுகிறது. எனவே, உடனடியாகக் கொப்பரை கொள்முதல் செய்வதற்கு ஆணை பிறப்பிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, பிப்ரவரி மாதத்திற்கு முன்பு கொள்முதல் செய்யப்பட்ட கொப்பரைக்கும்கூட இன்றுவரை பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, 'NAFED' அமைப்புக்கு தமிழகத்திலிருந்து பல குற்றச்சாட்டுகள் தெரிவித்து மனுக்கள் சென்றிருக்கின்றன. கொப்பரைத் தேங்காய் கொள்முதலில் கடந்த தி.மு.க. ஆட்சியில் ஊழல் நடந்த காரணத்தினால், தற்காலிகமாக அந்தக் கொள்முதலை நிறுத்திவைக்க அந்த 'NAFED'–லிருந்து தாக்கீது வந்திருக்கிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அப்படி ஒரு தாக்கீது 'NAFED'–லிருந்து வந்திருந்தால் அவர்களோடு உடனடியாகப் பேசி–

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொப்பரைத் தேங்காயைக் கொள்முதல் செய்வதில் தவறு நடந்திருக்கிறது. அது ஒருபுறம் இருக்கட்டும். ஏற்கெனவே கொள்முதல் செய்த தேங்காய்க்குப் பணம் வரவில்லை. அந்தப் பணம் வராததால், விவசாயிகள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அதுவும் மத்திய அரசிடமிருந்து கிடைக்கவில்லை. பல இலட்சக்கணக்கான ரூபாய் தமிழ்நாட்டிற்கு வரவேண்டும். ஏற்கெனவே வந்திருக்கிற பணத்தை பல்வேறுவிதமாகப் பிரித்து தேவைப்பட்டவர்களுக்குக் கொடுத்த காரணத்தினால், உண்மையான விவசாயிகள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[2001 மே 31

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பணம் வந்துவிட்டது. இன்னும்
கொஞ்சம் பணம் நமக்கு 'NAFED'–லிருந்து வரவேண்டும் என்றாலும்கூட
ஓரளவிற்கு நிதி வந்திருக்கிறது. வந்த நிதி மாவட்டங்களுக்கு
அனுப்பப்பட்டுவிட்டது. மாவட்டங்களிலிருந்து, கீழே இருக்கிற society–
கள் மூலமாக விவசாயிகளுக்கு அந்தப் பணம் போய்ச் சேரவில்லை.
நீங்கள் எந்த விசாரணை வேண்டுமானாலும் நடத்தலாம், நான்
வேண்டாம் என்று சொல்லவில்லை. கண்டிப்பாக விசாரணை நடத்தி
குறைகளைக் கண்டுபிடிக்கலாம். ஆனால், விவசாயிகள் பெருமளவுக்குப்
பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பல மாதங்களாக பணமே இல்லாமல், சில
பேர் கடன் வாங்கி, வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத
நிலையில் இருக்கிறார்கள். எனவே, விவசாயிகளுக்கு உடனடியாக பணம்
பட்டுவாடா செய்ய உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று நான் அன்போடு
கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, அதில் என்ன பிரச்சினை என்றால், கொப்பரைக்
கொள்முதலை நாம் செய்கிறோம். 'NAFED' சொல்லி 'TANFED' மூலமாக
கொள்முதல் செய்கிறோம். கேரள அரசாங்கம் இரண்டையும் செய்கிறது.
கொப்பரையை ஒரு பக்கத்தில் கொள்முதல் செய்கிறார்கள். ஒரு
பக்கத்திலே அரசே தேங்காயை வாங்கி அவர்களே கொப்பரையாக மாற்றி
அரசுக்கு நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை, விவசாயிகளுக்கு நஷ்டம்
வரக்கூடாது என்ற கொள்கையோடு அவர்கள் செயல்பட்டுக்
கொண்டிருக்கிறார்கள். அதே முறையை இங்கேயும் பின்பற்ற வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன். எல்லா விவசாயிகளாலும் கொப்பரை
எடுக்க முடியாது. களம் கிடையாது. களம் இருந்தாலும் திடீரென்று
மழை வந்துவிடும். இங்கேயிருக்கிற பல உறுப்பினர்கள் அநேகமாக
எல்லோரும் விவசாயிகள்தான். அதிலே பலர் என்னிடத்திலே
ஏற்கெனவே முறையிட்டு இருக்கிறார்கள். நானும் ஒரு விவசாயிதான்.
எனக்கும் தென்னைமரம்தான் முக்கியம். நாங்களும் சிரமத்தில்தான்
இருக்கிறோம். எனவே, உடனடியாகத் தேங்காயைத் தமிழக அரசு
கொள்முதல் செய்து, கொப்பரையாக்கி அதை ஆட்ட வேண்டும்.
(மணியடிக்கப்பெற்றது)

*பிற்பகல் 2–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் நாளையும் தொடரும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இன்னும் மூன்று நிமிடங்களில்
முடித்து விடுகிறேன்.



2001 மே 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு
அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மீண்டும் கொப்பரையைக்
கொள்முதல் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தேயிலையைப் பற்றி இங்கே பலர் பேசியிருக்கிறார்கள்,
ஏற்கெனவே. எங்களுடைய கட்சியைச் சார்ந்த திரு. கந்தசாமி அவர்கள்
பேசியிருக்கிறார்கள். திரு. எச்.எம். ராஜு அவர்கள் பேசியிருக்கிறார்கள்.
கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக நீலகிரி மாவட்டத்திலேயிருக்கிற
தேயிலை விவசாயிகள் சொல்லொணாத் துயரத்திற்கு
ஆளாகியிருகிறார்கள். ஐக்கிய முன்னணி ஆட்சி இருந்தபோது, நாங்கள்
19 ரூபாய் பச்சைத் தேயிலைக்குக் கிடைக்க ஏற்பாடு செய்தோம்.
இன்றையதினம் அதே தேயிலை 4 ரூபாய்க்குக் கீழே போய், இப்போது 5,
6 ரூபாய்க்கு விற்றுக் கொண்டிருக்கிறது. இந்த 5 ரூபாய், 6 ரூபாய், 8
ரூபாய் கூட ஏன் கொடுத்தார்கள் என்றால், தேர்தலுக்காக அதைக்
கொடுத்திருக்கிறார்கள். ஏழை விவசாயிக்கு நல்ல விலை மீண்டும் கிடைக்க
வேண்டும் என்று சொன்னால், தேயிலையை ஏற்றுமதி செய்வதற்கு
ஏற்பாடு செய்ய வேண்டும்.

இந்தியாவிலே விளைகின்ற மொத்தத் தேயிலை என்பது 800 மில்லியன்
கிலோகிராம். அதிலே நம்முடைய நாட்டிற்குத் தேவையான தேயிலை
600 மில்லியன் கிலோகிராம்தான். மீதமிருக்கிற 200 மில்லியன்
கிலோகிராம், 20 டன் தேயிலை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்தே
தீரவேண்டும்.

தென்னாட்டிலே இன்று எடுத்துக்கொண்டால், இங்கே விளைவது
200 மில்லியன் கிலோகிராம் தேயிலை. நமக்கு அதிகபட்ச தேவை என்றால்,
180, 185 மில்லியன் கிலோகிராம்தான். மீதியிருப்பது ஒன்று,
இந்தியாவினுடைய ஒரு பகுதிக்குப் போக வேண்டும். இல்லாவிட்டால்
வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்தே தீர வேண்டும். எனவே, மத்திய
அரசோடு நீங்கள் பேச்சுவார்த்தை நடத்தி, உடனடியாக மீண்டும்
ரஷ்யாவிற்கோ அல்லது மற்ற நாடுகளுக்கோ ஏற்றுமதி செய்வதற்கு
ஏற்பாடு செய்ய வேண்டும். ரஷ்யாவிலே இதற்கு நல்ல கிராக்கி இருக்கிறது.
குறைபாடுகள் என்று சொன்னால் இடைத்தரகர்கள்தான். வேறு
குறைபாடுகள் இல்லை. ரஷ்யாவிலே வாங்கிக் கொள்வார்கள்.
முன்பிருந்த ஏற்பாட்டின்படி, அங்கே இருக்கிற அரசின் மூலமாக விற்பனை
செய்யப்படுமானால் தவறு நேராது. பணம் வரும் என்று நான்
சொல்லிக்கொள்கிறேன்.

முடிந்தால் பாதுகாப்புத் துறை அதை வாங்கலாம். முன்பு ஒரு முறை திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் வர்த்தகத் துறை அமைச்சராக இருந்தபோது இதே ஏற்பாட்டைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். விலையும் கிடைத்தது. பாதுகாப்புத் துறை வாங்கலாம்.

மூன்றாவது, கடைசியாக நான் சொல்வது தமிழக அரசு கூட இதை வாங்கலாம். குறைந்த விலைக்கு, ஒரு நல்ல விலை கொடுத்து 15 ரூபாய் விலை கொடுத்து நீங்கள் வாங்கினால் நஷ்டம் வராது. பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக இதே தேயிலையை நாம், நமக்கு அதிகம் நஷ்டமில்லாமல் விற்க முடியும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, P.A.P. – பரம்பிக்குளம்–ஆழியாறு பாசனத் திட்டம் நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு இப்போது தண்ணீர் பாசனத்திற்கு விடப்படுகிறது. அதிலே கடந்த ஆட்சியிலே புதியதாக ஒன்றைக் கொண்டு வந்தார்கள். மடை விட்டு மடை பாசனம் என்று கொண்டு வந்திருக்கிறார்கள். அது தவறு அல்ல, நல்ல திட்டம்தான். ஆனால், என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால், 1000 ஏக்கருக்குக் குறையாமல் இருக்கின்ற வாய்க்காலிலே மட்டும், கால்வாயிலே மட்டும் மடை விட்டு மடை பாசனம், 977 ஏக்கர் இருந்தாலும்கூட இல்லை. நான் அதை மிகைப்படுத்திச் சொல்கிறேன் என்று நினைக்கிறார்கள், அப்படி நினைக்காதீர்கள். 977 ஏக்கர் உடுமலைப்பேட்டை தொகுதியிலே இருக்கிற அவரைக் கேட்டால் தெரியும். 977 ஏக்கர், 983 ஏக்கர் இருந்தால்கூட, அவற்றிற்கு மடை விட்டு மடை பாசனம் கிடையாது. எனவே, அந்த 1000 ஏக்கர் என்பதை நீக்கிவிட்டு, எந்தக் கால்வாயாக இருந்தாலும், எந்தக் கிளைக் கால்வாயாக இருந்தாலும் மடை விட்டு மடை பாசனத்தை நீங்கள் [illegible] ஏற்பாடு செய்து, அதற்குரிய ஆணையைப் [illegible]டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[illegible] இப்போது தண்ணீர் நிறுத்தப்பட்டிருக்கிறது. [illegible] மண்டலத்தில் தண்ணீர் பாய்ந்து கொண்டிருக்கிறது. [illegible] இல்லை என்ற காரணத்தைக் காட்டி நிறுத்தி விட்டார்கள். [illegible] மாதம் 20 ஆம் தேதி தண்ணீர் விட வேண்டும். தண்ணீரை [illegible] ஆனால் கடந்த சில நாட்களாகப் பெய்த [illegible] தண்ணீர் அங்கே அணையிலே இருக்கிறது. [illegible] தண்ணீரைக் குறைந்தபட்சம் ஒன்றிரண்டு wetting–களுக்காவது நீங்கள் தர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



கரும்பினைப் பொறுத்தவரைக்கும், அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே சொல்லிவிட்டார்கள். விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டிய தொகை ரூபாய் 180 கோடி பாக்கி என்று சொன்னார். அந்த 180 கோடி ரூபாயை தனியார் ஆலையாக இருந்தாலும் சரி, அரசு ஆலையாக இருந்தாலும் சரி, கூட்டுறவுச் சர்க்கரை ஆலையாக இருந்தாலும் சரி, உடனடியாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், 10 சதவிகிதம் பிழிதிறன் கொண்ட கரும்பு என்று சொன்னால், நம்முடைய சதவிகிதம் பிழிதிறன் கொண்ட கரும்பு சென்ற ஆண்டு ஊரிலே 10 சதவிகிதம் பிழிதிறன் கொண்ட கரும்பு சென்ற ஆண்டு இரண்டே இரண்டு பேக்டரிகளில்தான் வந்தது. ஒன்று அமராவதி. இரண்டு பாலக்கோடு. இந்த இரண்டைத் தவிர, நம்முடைய State average என்பது, மாநிலத்தின் சராசரி என்பது 8.8 சதவிகிதம்தான். 10 சதவிகிதம் பிழிதிறன் என்பது முடியவே முடியாது. நீங்கள் அதற்கு நல்ல முறையிலே விலை தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, கடன். அன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுப் பேசுகின்றபோது சொன்னார்கள். வட்டி, அபராத வட்டியைத் தள்ளுபடி செய்வதைப் பற்றி நாங்கள் அமைச்சரவையிலே விரைவிலே முடிவு செய்கிறோம் என்று சொன்னார்கள்; நம்பிக்கை அளிப்பதாக இருக்கிறது. எனவே, அதை நிறைவேற்ற வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். பல பிரச்சினைகளைப் பற்றி நான் பேச வேண்டுமென்று வந்தாலும்கூட, என்னாலே காலத்தின் அருமையைக் கருதி, பேச முடியவில்லை. உரையை அதிகமாகப் பேச விரும்பவில்லை. மொத்தத்தில் இன்று புதியதாய்ப் பிறந்தோம் என்ற உணர்வோடு செயலாற்ற உறுதி பூண்டுள்ள இந்த அரசின் திட்டங்கள் அனைத்தும் வெற்றி பெறவேண்டும். நன்மைகள் பெருகட்டும். நலன்கள் சிறக்கட்டும். நல்லவை நடக்கட்டும். நம்பிக்கை மலரட்டும் என்று வாழ்த்தி, அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (1-6-2001) வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-04 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*4. 1999–2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சரிகை லிமிடெட்டின் இருபத்தி எட்டாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)*

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

—ஏதுமில்லை—

222389

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.